Registered as a News Paper
பக்கம் – 16

# ஈழநாதம்

வெள்ளிநாதம் Weekly

விலை: 12.00

நாதம் -13 திருவள்ளுவர் ஆண்டு 2033 03 - 09 ஜனவரி 2003 ஓசை 319

# உயர் பாதுகாப்பு வலயம் :




படையின் நிபந்தனை இறுதியானதல்ல,
அரசாங்கத்தின் நிபந்தனை அல்ல.



மக்கள் மீள குடியமர புலிகளின்
ஆயுதங்கள் களையப் படவேண்டும்.



அரச படைகளை விலக்கினால் படைகளின்
பாதுகாப்பும் தாக்குதல் திறனும் குறைந்துவிடும்.



உறுதியான முடிவுகள் எடுக்கப்படாவிடின்
உபகுழுவில் பங்கேற்கப் போவதில்லை.



இராணுவம் கடும் போக்கு, கண்காணிப்புக் குழு
ஆதரவு. இதை ஏற்க முடியாது!

# சர்ச்சைக்குள்ளாகும் பேச்சு!

ஈழநாதம்
வெள்ளிநாதம்
யாழ்சாலை, கிளிநொச்சி 03.01.2003

## 'மீள் குடியேற்றம்' மக்களின் உரிமைப்பிரச்சினை

மீள குடியேற்றம் ஒரு பிரச்சினைக்குரிய விடயமாக இராணுவத்தரப்பால் ஆக்கப்பட்டுவிட்டது.

இராணுவம் தன்னை இன்னும் தமிழ்மக்களுக்கு எதிரான அவர்களின் நிலத்தை ஆக்கிரமித்து நின்று அவர்கள் மீது ஆதிக்கம் செலுத்தும் போர்க்கால இராணுவமாக சமாதான நகர்வுகளுக்கு இசைந்து கொடுத்து அந்த முயற்சிகளுக்கு பலம் சேர்க்க விரும்பாத இராணுவமாகவே தொடர்ந்தும் இருக்க விரும்புகின்றது என்பதையே மீள் குடியேற்றம் தொடர்பான இராணுவத்தரப்பு தீர்வு அறிக்கை வெளிப்படுத்தியுள்ளது.

இந்த அறிக்கையின் விபரங்கள் தமிழ்மக்களின் உரிமைகளை முற்றாக நிராகரித்து கேட்டதற்காக சில சலுகைகளை வேண்டா வெறுப்புடன் அடிமைகளுக்கு வழங்கும் அதிகார போக்கின் வெளிப்பாடாகவே உள்ளன.

இப்போதைய பிரச்சினை மக்களின் மீள்குடியேற்றம், அவர்களின் இயல்பு வாழ்க்கை, புனர்வாழ்வு ஆகியவையேயாகும். இராணுவ உயர்பாதுகாப்பு, வலயம் என்பது நாட்டின் எல்லைப்புறத்தில் அந்நிய ஊடுருவல்களைத் தடுப்பதற்காக இருக்கவேண்டிய கட்டுமானமேயாகும். எங்கள் மக்களின் வீடுகளின் கொல்லைப் புறங்களை அவை உள்ளடக்கி இருக்க வேண்டிய அவசியமே இல்லை. அப்படி அவை எங்கள் மக்களின் வாழ்விடங்களில் அத்துமீறி ஆக்கிரமித்து நிலைகொண்டிருப்பதில் பிடிவாதம் காட்டுவார்களேயானால் அது எங்கள் பிரதேசங்களை அந்நிய நாட்டின் பகுதிகளாகவும், எங்கள் மக்களை அந்நியர்களாகவும் அவர்கள் கருதுகின்றார்கள் என்பதை வலியுறுத்துவதாகவே அமையும்.

மீள் குடியேற்றம் ஒரு இராணுவப் பிரச்சினையல்ல... அது ஒரு அரசியல் பிரச்சினை. அதில் இராணுவம் சம்பந்தப்பட்டுள்ளது. அவ்வளவுதான் அந்தப் பிரச்சினைக்கான தீர்வு அரச நிர்வாகத்தாலேயே முன்வைக் கப்படவேண்டும். இராணுவம் பாதுகாப்பு அமைச்சின் நெறிப்படுத்தலின் கீழ் இயங்கும் ஒரு அமைப்பு என்பதில் இருவேறு கருத்து இருக்கமுடியாது. பாதுகாப்பு அமைச்சு அரச நிர்வாகத்தின் கீழ் உள்ள ஒரு நிர்வாகக்கட்டமைப்பேயாகும். எனவே மீள்குடியேற்றம் தொடர்பான தீர்வையோ, முடிவையோ முன்வைக்க வேண்டியது அரசின் பொறுப் பேயாகும். இராணுவ அதிகாரிகள் அது குறித்த முடிவை மேற்கொள்வது, அவர்கள் தமக்கு சார்பு நிலையில் நின்று தீர்வொன்றை முன்வைப்பதற்கே வழிவகுக்கும்.

எனவே மீள்குடியேற்றம் தொடர்பான இராணுவத் தரப்பு அறிக்கை அரசாங்கத்திற்குரிய ஒன்றேயன்றி, எமது மக்களுக் குரியதல்ல, எமது மக்களுக்கான தீர்வை அரசு தான் முன்வைக்க வேண்டும்.

இதனால் தான் மீள்குடியேற்றம் தொடர்பான இராணுவத் தரப்பின் நிபந்தனைகள் ஏற்றுக்கொள்ள முடியாதவை என்று விடுதலைப் புலிகள் அறிவித்துள்ளனர்.

இதேவேளை உயர்பாதுகாப்பு வலயம் நீக்கப்படக்கூடாது என்பது சிறிலங்காவின் அதி உத்தம சனாதிபதியின் அதி உன்னத அறிவுரையாக கூறப்பட்டுள்ளதன் அடிப்படையில் பார்த்தால், தமிழ் மக்களின் வாழ்விடங்களில் அவர்கள் மீள்குடியேற்றம் மேற்கொள்ள அனுமதிக்கப்படக்கூடாது என்பதே அவரின் தீமானமாக உள்ளது என்பது தெரிகிறது.

இராணுவ மேலாதிக்க அழுத்தம் தமிழர் வாழ்விடங்களில் நிரந்தரமாக இருக்கவேண்டும் என்பதையே அவர் விரும்புகிறார். முப்படைகளின் தளபதி என்ற வகையில் தமிழ் மக்களின் வாழ்வியல் நலன்களை புறந்தள்ளிவிட்டு இராணுவ நலன்களை பாதுகாக்க விரும்பும் பேரினவாத சிந்தனையின் வெளிப்படையாகவே அவரின் கருத்து உள்ளது. இது தொடர்பாக கடந்தவாரத்தில் இரு தடவைகள் அவர் படையதிகாரிகளுடன் பேச்சு நடத்தியும் உள்ளார்.

இப்பேச்சுவார்த்தைகள் குறித்து தமக்கு எதுவும் தெரியாது என்று கூறும் பாதுகாப்பு செயலர் ஒஸ்ரின் பெர்னாண்டோ உயர்பாதுகாப்பு வலய விவகாரத்தில் சனாதிபதியின் தலையீடு தேவையற்றது என்று கூறியுள்ளதுடன் அரசு மீள்குடியேற்றம் தொடர்பான பிரச்சினைக்கு தீர்வுகாண மாற்று வழிமுறைகளை ஆராய்ந்து வருவதாகவும் தெரிவித்துள்ளார்.

இங்கே முக்கிய சிக்கலே - 'இராணுவம் யாரின் கட்டுப்பாட்டின் கீழ் செயற்படுகிறது.' என்பதில் தான் உள்ளது.

சனாதிபதியின் கீழா? ரணிலின் தலைமையிலான அரசாங்கத்தின் கீழா? இந்த வினாவுக்கான தெளிவான விடை தீர்மானிக்கப்படாதவரை இந்தப்பிரச்சினைக்கான தீர்வு எட்டப்படவே முடியாது.

இதனால் தான் அரசியல் ஆலோசகர் 'படையதிகாரிகளுடன் சந்திப்பு எதுவுமில்லை. மீள்குடியேற்றம் பற்றி தாய்லாந்திலேயே பேச்சு' என அறிவித்துள்ளார்.

இந்த அறிவிப்பு சரியானது. தத்தமது சார்பு நிலையில் நின்று கொண்டு இராணுவமோ, சனாதிபதியோ, அரசோ ஒரு போதும் எமது மக்களின் பிரச்சினைகளுக்கு உள்ளூரில் பேசி நியாயமான தீர்வை தந்துவிடமுடியாது என்பதே வரலாறு.

சர்வதேச அரங்கில் - சமாதானப் பேச்சுவார்த்தை மேசையில் வைத்து பிரச்சினைகளை நேர்மையாக விவாதித்து நியாயமான முடிவை எட்டுவதே இன்றைய அவசியமாகும்.

மீள்குடியேற்றம் மக்களின் உரிமை சார்ந்த பிரச்சினை என்பதும் அதில் விட்டுக் கொடுத்தல் சமாதானம் குறித்த மக்களின் நம்பிக்கையை கேள்விக்கும் கேலிக்கும் உரியதாக்கிவிடும் என்பதும் அனைத்துத் தரப்பினரும் உணர்ந்து செயற்படவேண்டிய தருணம் இதுவேயாகும்.

### தூரனின் பார்வை

## காட்சி மாறுகிறது... கருத்தும் மாறுகிறது...!

பொது சன ஐக்கிய முன்னணியுடன் மக்கள் விடுதலை முன்னணியென்று கூறப்படும் ஜே.வி.பியினர் நிரந்தரமாகவே இணைந்து கொள்வதற்கான பேச்சுவார்த்தைகள் தீவிரமாக மேற்கொள்ளப்பட்டு வருவதாக கூறப்படுகிறது.

கடந்த ஒரு வருடத்துக்கும் மேலாக, ஐ.தே.கட்சிக்கு எதிராகவும், சமாதான நடவடிக்கைகளுக்கு எதிராகவும், புரிந்துணர்வுடன் ஒரு ஒட்டாத ஒட்டுறவைக் கொண்டிருந்த பொ.ஐ. முன்னணியும், ம.வி. முன்னணியும்ஒருவரை ஒருவர் விட்டு விலகி சுயாதீனமாகஇயங்க முடியாத நிலையொன்று உருவாகியுள்ளது.

இப்புதிய கூட்டுக்கு பொ.ஐ.முன்னணியின் சிரேஷட தலைவர்களும், குறிப்பாக சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் முன்னணி மூத்த தலைவர்களும் கடும் அதிருப்தியை வெளியிட்டுள்ள போதிலும், சந்திரிகாவின் உள்வட்டத்தினரும், நெருங்கிய சகாக்களான மங்கள சமரவீர போன்ற சிலரும் எல்லாவற்றிலும் மேலாக முடிக்குரியவராக கனவுகாணும் அநுரா பண்டார நாயக்கவும், ஜே.வி.பியினரின் பொறிக்குள் சரியாகவே விழுந்துள்ளமையால் இந்தக் கூட்டு தவிர்க்க முடியாத ஒன்றாக உருவாகி வருகிறது.

ஒருகாலத்தில் இதே ஜே.வி.பி.தான் 1960களின் இறுதியில் சந்திரிகாவின் அம்மா சிறிமா ஆட்சிப்பீடம் ஏற உதவியது. ஏறிய ஏணியை மறந்து எட்டி உதைக்கும்தன்மை கொண்ட சிறிமா பதவியேற்ற பின் ஜே.வி.பி.க்கு வழங்கிய வாக்குறுதிகளை மௌனமாக மறந்து அப்போதைய அவர்களின் இடது சாரித் தோழர்களான கம்யூனிஸ்ட் மற்றும் சமசமாஜக் கட்சியினரின் ஆதரவுப் பலத்துடன் ஒரு புதிய சர்வாதிகார ஆட்சியை ஆரம்பித்தார்.

ஏமாற்றமடைந்த ஜே.வி.பி.யினர் சிறிமா அம்மையாரின் அரசுக்கெதிராக 1971 ஏப்பிரலில் கிளர்ச்சியை மேற்கொண்டனர். அந்தக்கிளர்ச்சி நடவடிக்கை இந்திய இராணுவ உதவியுடன் மிகவும் காட்டுமிராண்டித்தனமான முறையில் ஒடுக்கப்பட்டது. 25000க்கு அதிகமான சிங்கள இளைஞர் யுவதிகள் ஈவிரக்கமற்ற முறையில் கொன்றழிக்கப்பட்டு வீதிகளில் எரிக்கப்பட்டனர். கங்கைகளில் வீசப்பட்டனர். அக்கட்சியின் தலைவர்கள் கைது செய்யப்பட்டு அடைக்கப்பட்டனர்.

ஜே.வி.பி. இடது சாரிகளை அப்போதைய கம்யூனிஸ்ட் - சமசமாஜ இடது சாரிகளும் இணைந்தே அழித்தனர்.

ஜே.ஆர் பதவிக்கு வந்ததும் ஜே.வி.பி.யினர் விடுதலையாகினர். அரசியல் நீரோட்டத்தால் இணைவதாகக் கூறிக் கொண்டனர். ஆனால் 1987இல் இந்தியப் படையின் வருகையைத் தொடர்ந்து நிலைமை 'பழைய குருடி கதவைத் திறவடி' என்ற கதையாகியது.

ஜே.வி.பியினரின் இந்திய எதிர்ப்பு கோட்பாடு, அவர்களின் இயல்பான இலக்கற்ற வன்முறை வெறிக்கு தூபமாகியது. 1987-1990 வரையான காலப்பகுதிகளில் ஜே.வி.பியினரின் நடவடிக்கைகள் அவர்களின் மனித உரிமைமீறல் பொழுதுபோக்கு குணாம்சத்தை வெளிப்படுத்தியது.

தென்னிலங்கையில் இரத்த ஆறு ஓடியது, ஆறுகளில் பிணங்கள் மிதந்தன. வீதிகளில்குற்றுயிரும் குலையுயிருமாக மக்கள் 'டயர்' போட்டுக் கொழுத்தப்பட்டனர். மனிதனுள் இருக்கும் மிருகத்தனத்தை மிருகத்தை விடவும் பன்மடங்கு அதிகமாக அவர்கள் வெளிக்காட்டினர். தென்னிலங்கை மக்கள் அச்சத்தில் உறைந்திருந்த காலம் அது.

ஆனால் பிரேமதாஸா அவர்களைச் சரியாகவே குறிவைக்துத் தாக்கினார். ரோகணவிஜேவீர, உப திஸ்ஸ கமநாயக்க... எனப் பெரும்பாலானவர்களின் முக்கிய தலைவர்கள் அவர்களின் மக்கள் விரோத நடவடிக்கைகள் காரணமாகவும் போலிப் புரட்சிவாதச் செயற்பாடுகளாலும் மக்களாலேயே காட்டிக் கொடுக்கப்பட்டு கொன்றழிக்கப்பட்டனர்.

ஜே.வி.பி. வரலாற்றின் இரண்டாம் பாகமும் முடிவுக்கு வந்தது. இக்கால கட்டத்தில் இவர்களால் கொல்லப்பட்டவர்கள் இன்றைய அவர்களின் தோழியான சந்திரிகாவின் கணவரான விஜயகுமாரணதுங்கவும் ஒருவர். இதே தோழி இவர்களை கொலை வெறியர்கள் என விரல் சுட்டி திட்டிய வரலாறும் பதிவுசெய்யப்பட்டுள்ளது.

1994இல் சந்திரிகா ஆட்சிக்கு வந்ததும் மீண்டும் அரசியலில் தலையெடுக்க முயன்ற ஜே.வி.பி. பழைய இடது சாரிகள், தமது இடது சாரித்தன்மையை இழந்து விட்ட நிலையில், அவர்களின் இடைவெளியை நிரப்ப முயன்றன. இடது சாரிகள் என சட்டையைப் போட்டுக்கொண்டு இனவாத அதிகாரத்தையும் பூச ஆரம்பித்தனர்.

போரின் ஆரம்ப வெற்றிகளால் இறுமாந்திருந்த சந்திரிகா தனது முதற்கட்ட ஆட்சிக் கால இறுதியில் கிடைத்த வரலாற்று புகழ் மிக்க தோல்விகளால் துவண்ட வேளையில், அரசியல் மூலோபாயங்களுடன் அவரது இரண்டம் கட்ட ஆட்சிக் காலத்தில் ஜே.வி.பி.யினர் முண்டு கொடுக்க முன்வந்தனர். அவராலும் அதனைத் தவிர்க்க முடியவில்லை. ஜே.வி.பி.யினருக்கும் ஐ.தே. கட்சியை ஆட்சிக்கு வரவிடக்கூடாது என்ற நோக்கமே அப்போதைய இலக்காகவும் இருந் தது.

ஆனால்-பொ.ஐ. முன்னணியின் தோல்வி தவிர்க்க முடியாததாகிவிட்டது. ரணிலின் பதவியேற்பும், சமாதான நகர்வுகளும் சிறிலங்காவின் இரட்டை ஆட்சியில் ஜே.வி.பி.யை பொ.ஐ. முன்னணியின் வாலைப் பிடித்துக்கொள்ள வேண்டிய நிர்ப்பந்தத்தை ஏற்படுத்தியது.

பொ.ஐ.முன்னணிக்கும் ஜே.வி.பி.யின் பக்கத்துணை ஓர் அவசியமுமாகியது. அரச எதிர்ப்பு நடவடிக்கைகளுக்கு ஜே.வி.பி.யை பயன்படுத்தும் சந்திரிகாவின் மூலோபாயம் பொ.ஐ. முன்னணிக்குள் ஊடுருவித் தன்னை வெகுசன மயப்படுத்தும் ஜே.வி.பி.யின் மூலோபாயத்துடன் முரண்படாமல் உடன்பட வேண்டிய நிலையை ஏற்படுத்தியது.

தனது கணவரைக் கொன்ற இரத்தக்கறை படிந்த கரங்களுடன் கைகுலுக்க வேண்டிய அவமானகரமான பரிதாபத்திற்குரிய ஒருவராக சந்திரிகா மாற்றங் கொண்டார். தன் சகோதரியின் கணவரை கொண்டவர்களுடன் அநுராவின் 'தோழமை' பிரிக்க முடியாததாகியது.

இப்போது இந்த 'தோழமை' உணர்வு ஜே.வி.பி.யை பொ.ஐ.முன்னணியுடன் கூட்டுச் சேரவைத்துள்ளது.

இங்கே தான் வரலாறு திரும்பிப் பார்த்துச் சிரிக்க ஆரம்பித்துள்ளது.

புதிய சிவப்புக்களின் நெருக்கமும், உறவும், பொ.ஐ. முன்னணிக்குள் தாயின் காலம் முதல் ஒட்டி உறவு பூண்டு வந்த பழைய சிவப்புக்களை விலகவும் பிரியவும் நிர்ப்பந்தித்துள்ளது.

லங்காசமசமாஜக் கட்சியும், கம்னியூட்ஸ் கட்சியும் சந்திரிகாவுடனான தமது அதிருப்தியை பகிரங்கமா கவே தெரிவிக்கத் தொடங்கி விட்டன. அந்தக் கூட்டு தவிர்க்க முடியாதபிளவிற்குப் போய் கொண்டிருக்கிறது.

ஜே.வி.பி.யா?-அல்லது கம்யூனிஸ்ட் சமசமாஜக் கட்சிகளா தேவை என்பதை சந்திரிகா தீர்மானிக்க வேண்டிய கட்டம் இதுவாகும்.

இதேவேளை சமசமாஜக் கட்சி சமாதான முயற்சிகளையும், சமஷடி அடிப்படையிலான தீர்வையும் ஆதரிக்க முன்வந்துள்ளமையும் கம்யூனிஸ்ட் கட்சி விடுதலைப்புலிகளுடன் பேச விரும்புவதாக அறிவித்துள்ளமையும் சந்திரிகாவுக்கு எதிரான பலமான தாக்குதல்கள் என்றே கூற வேண்டும்.

புதிய சிவப்புகளின் நுழைவால் பழைய சிவப்புகள் சிந்திக்கத் தொடங்கியுள்ளார்கள் போல் தெரிகிறது. ■

# நறுக்கென...

## பொதுசன ஐக்கிய முன்னணி முனகல்கள்...



**சனாதிபதி** சந்திரிகாவை கொல்லச் சதி என்ற செய்தியை வெளியிட்டு பரபரப்பை ஏற்படுத்திய பொ.ஜ முன்னணியின் பத்திரிகை... அதாவது சிறிலங்கா சுதந்திரக்கட்சியின், புதிதாக ஆரம்பிக்கப்பட்ட பத்திரிகையொன்றை அக்கட்சியே தடை செய்து விட்டது.

உண்மையில் அப்பத்திரிகையில் வெளியான அச் செய்தியின் பின்னணியில் பெரும் திட்டம் ஒன்றுள்ளது இப்போது வெளிச்சத்திற்கு வரத் தொடங்கியுள்ளது. ஒரே கல்லில் பல மாங்காய்களை வீழ்த்தும் திட்டம் அச்செய்திக்கு அடிப்படையாக இருந்துள்ளது.

ஐக்கிய தேசிய முன்னணி அரசுக்கு அவப் பெயரை ஏற்படுத்துவது.

ரணிலையும் வேறுசில அவரது கட்சி முக்கியஸ்தர்களையும் 'கொலைச்சதி' என்று கூறும் பொறிக்குள் சிக்கவைப்பது.

பொதுசன ஐக்கிய முன்னணிக்குள் உள்ள 'மகிந்த ராஜபக்ஷ' அணியினரை கொலைச்சதியில் உடந்தையானவர்களாகக் காட்டி கட்சியை விட்டு விலக்குவது.

அநுராவை எதிர்க்கட்சித் தலைவராக்கி கட்சிப் பொறுப்பை அவரிடம் ஒப்படைப்பது. சதிக்கு உடந்தை எனக் கூறி அரசைக் கலைத்து அரசின் அதிருப்தியாளரை இணைத்துக் கொண்டு மாற்று அரசொன்றை ஏற்பாடு செய்வது, சமாதான முயற்சிகளைக் குழப்புவது...

எனப் பலநோக்குக் கொண்ட இத்திட்டம் பிசுபிசுத்துவிட்டது. இப்போது அண்மைக் காலமாக தன்னைக் கொல்லச் சதி நடக்கிறது எனக் கூறும் சனாதிபதிக்கு ஒருவிதமான 'மனநோய்' 'கொலை' பற்றியே பேசிக் குழப்பும் நோய் ஏற்பட்டிருக்கும் என்ற சந்தேகமும் சில ஆய்வாளர்களால் எழுப்பப்படும் அளவுக்கு பிரச்சினை போய் விட்டது.

திட்டம் பற்றிய குட்டு வெளிப்பட்ட நிலையில் பொ.ஐ.முன்னணிக்குள் விழுந்துள்ள ஓட்டைகளை மறைக்கும் வேலை நடக்க ஆரம்பித்துள்ளது.

எல்லாவற்றிற்கும் அந்தச் 'சோ' முழிமுழிக்கும் 'மங்கள சமரவீர' தான் காரணம் எனச் சுதந்திரக் கட்சி சிரேஷ்ட உறுப்பினர்கள் பேசுவதாகக் கேள்வி.

எதுவானாலும் பொ.ஐ. முன்னணிக்குள் நிலைமைகள் அவ்வளவு 'மங்கள' கரமானதாக இல்லை.

## எழுச்சியும் வீழ்ச்சியும்...



**கடைசியில்** அநுருத்த ரத்வத்தை மாமாவின் பதவிப் பொறுப்புகளைச் சந்திரிகா மருமகள் இப்படியா கொஞ்சம் கொஞ்சமாகப் பிடுங்க நினைக்க வேண்டும். லெப். கேணல் என்ற பதவி நிலையில் இருந்து ஜெனரல் பதவிக்கு ஒரேயடியாக, எத்தனையோ திறமைவாய்ந்த இராணுவ உயர் அதிகாரிகள் எல்லாம் வெந்து மனம் நோக, மாமாவைத் தூக்கி வைத்துப் புகழ்ந்து பாராட்டிய சந்திரிகா எல்லா வகையிலும் நொந்து நொடித்துப்போய், தலைக்கு சாய மிடவும் கூட மனமின்றி சிறைச்சாலை, நீதிமன்றம், வழக்கு விசாரணை, என அலைந்து கொண்டு கொலைகாரன், மோசடியாளன், ஊழல் பேர்வழி என்றெல்லாம் அதிகெளரவப்பட்டங்களைப் பெற்றுக் கொண்டு இருக்கும் நிலையில், கட்சிக்குள் அவரது நிலையை ஓரளவுக்கேனும் தக்கவைத்துக் கொள்வதற்கு ஒரே பற்றுக்கோடாக இருக்கும் தேசிய அமைப்பாளர் பதவியையும் பிடுங்கி, தனது கெளரவ ஆலோசகரும், முன்னாள் சபாநாயகரும், தம்பியுமான அநுராவுக்கு அப்பதவியை ஒப்படைக்க தீர்மானித்திருப்பதாகச் செய்திகள் வெளியாகியுள்ளன.

ரத்வத்தை மீதான குற்றச்சாட்டுக்களாலும், அவரது ஊழல் மற்றும் மோசடி செயற்பாடுகளாலும் மக்கள் மத்தியில் கட்சியின் செல்வாக்கு கணிசமான அளவுக்கு வீழ்ச்சியடைந்துள்ளதால் அவரைத் தொடர்ந்தும் அமைப்பாளர் பதவியில் வைத்திருக்க முடியாதெனச் சந்திரிகா கருதுகின்றாராம்.

ரத்வத்தை அவரின் கொலைக் குற்றச் சாட்டுக்கு ஆளான புதல்வர்களும் சிறைப்பட்டிருந்த வேளையில், தனது நிறைவேற்று அதிகார வலுவைப் பயன்படுத்தி அவர்களை விடுதலை செய்ய சந்திரிகா தீவிரமாக முயற்சிகளை மேற்கொள்ளவில்லை என்ற ஆதங்கமும் ரத்வத்தை குடும்பத்தவர்க்கு உண்டு.

ரத்வத்தையின் ஊழல் - மோசடி நடவடிக்கைகளை நன்றாகத் தெரிந்து கொண்டும் அவரைத் தனது ஆட்சிக்காலத்தில் கண்டும் காணாமல் இருக்கும் அணுகுமுறையை சந்திரிகா கடைப்பிடித்து வந்தார் என்பது குறிப்பிடத்தக்கது. அதன் விளைவுகளைப் படுதோல்வியாக பொ.ஐ.முன்னணி கடந்த தேர்தலில் அறுவடை செய்தது தெரிந்த விடயமேயாகும்.

எதுவானாலும் சந்திரிகாவினால் ரத்வத்தை வீழ்ந்தாரா, ரத்வத்தையால் சந்திரிகா வீழ்ந்தாரா என்ற கேள்விக்கான விடை இரண்டு பேராலும், சிறிலங்கா சுதந்திரக் கட்சி வீழ்ந்தது என்பதாகத்தான் இருக்கும்.

## பொறிகளில் விழும் சிறுபான்மைத் தலைமைகள்



**ஏதோ** ஒரு வழியைக் கொண்டு...(அது எந்த வழியாக இருந்தாலும்கூட) இன்றைய சிறிலங்காவின் அரசை கலைப்பதில் அல்லது குழப்புவதில் சந்திரிகா மறைமுகமாகப் பல தீவிர முயற்சிகளை மேற் கொண்டு வருகிறார் என்பது வெளிப்படையாகத் தெரியும் விடயமாகி விட்டது.

ஒருபுறம் தனது இறுதி ஆயுதமான நிறைவேற்று அதிகார 'மிரட்டல்' அப்படியே இருக்க வேறுபல நகர்வுகளையும் பல்வேறு முனைகளில் அவர் மேற்கொண்டு வருகிறார்.

அரசில் அங்கம் வகிக்கும் ஏனைய கட்சிகளுள் உட்கட்சிப் பூசல்களுள் நுழைந்து 'மித்திரபேதம்' என்ற பஞ்ச தந்திர உத்தியைக் கையாண்டு அக்கட்சிகளை இரண்டு அல்லது மூன்றாக உடைத்து அதன் மூலம் அதில் ஒரு சாராரை தனக்கு ஆதரவுச் சக்தியாக - அரசுடன் இருந்து கொண்டே அரசுக்கு தலையிடியைக் கொடுக்கும் சக்தியாக மாற்றத் தொடங்கியுள்ளார்.

அவரது முதல் இலக்கு சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ் ஆக இருந்தது. ரவூப்ஹக்கீம் - அதாவுல்லா அணிகளாக அது பிரிவதற்கு சந்திரிகாவே மூலகாரணம்: இருதரப்பினரிடையேயும் நிலவிய உட்கட்சி சினேக முரண்பாடுக்களை பகை முரண்பாடாக வளர்த்தெடுத்து கட்சியை உடைப்பதில் அவரது வியூகம் வெற்றியை அடைந்தே உள்ளது.

இப்போது இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் அவரது இரண்டாவது இலக்காக உள்ளது. அண்மையில் மகிந்த ராஜபக்ஷ - ஆறுமுகம் தொண்டமான் சந்திப்பு இந்த சந்தேகத்தை வலுப்படுத்தியுள்ளது.


ஆளும் அல்லது வலுவான சக்தியுடன் இணைந்து செயற்படுவதுதான் தொண்டமான் பரம்பரையின் கொள்கை. அதனைப் பயன்படுத்துவதாகவே சந்திரிகாவின் பொறி அமையக் கூடும்.

ஏற்கனவே தமிழ்க்குழுக்களில் ஈ.பி.டி.பி, ஈ.பி.ஆர்.எல்.எவ் (வரதர்அணி) ஈரோஸ் (சங்கர் ராஜி அணி), புளொட் எனச் சிலகுழுக்களை தனது விசுவாசிகளாக்கி வைத்துள்ளார்.

சிறுபான்மை மக்களை, - அது தமிழர்களாயினும், இஸ்லாமியத் தமிழர்களாயினும், மலையகத் தமிழர்களாயினும் அல்லது வேறு எவராயினும் சரி பிரித்தாளும், காலனித்துவ ஆட்சியாளர்களை தந்திரோபாயத்தை கையாண்டு அவர்களின் பலத்தை சிதைப்பதையே சிறிலங்காவின் ஆளும் பெரும்பான்மைவர்க்கம் காலம் காலமாக குறிவைத்து செயற்பட்டு வருகிறது.

சிறுபான்மை மக்களின் தலைமைகள் - அரசியல் தலைமைகள் - இதனை புரிந்து கொண்டும் - பதவிப் பதர்களாகி - பொறியில் விழுவது தான் பரிதாபகரமானது.

## மதவடி மயிலர்



செய்தி :- முகமாலை முன்னணிக் காவரணில் கனிஷ்ட படையினர் மீது பகிடிவதை. ஒருவர் மரணம், ஆறுபேர் மயக்கம்.


மயிலர் :- சித்திரவதை செய்தே பழகியவைக்கு பகிடிவதை ஒரு சின்ன விஷயம் பாருங்கோ... இதைக் கேள்விப்பட்டா இன்னும் கொஞ்ச கனிஷ்ட படையினர் கட்டாயம் தப்பி ஓடுவினம் பாருங்கோ...எங்கடை சின்னத்தம்பி சட்டம்பியார் இதைக்கேட்டிட்டு..இராணுவ வளாகங்கள், பல்கலைக்கழகவளாகங்களாக மாறுது எண்டெல்லே பகிடிவிடுகிறார்.

செய்தி :- ஈ.பி.டி.பி. உறுப்பினர் நெடுந்தீவில் மக்களிடம் சரணடையவில்லை: கட்சி அமைப்பாளர் மறுப்பு..

மயிலர் :- சரணடையவில்லை... பின்னை ஓடிப்போட்டார் என்றே சொல்லுகினம் பெரிய இராணுவப் படையே இந்த தொகையிலை ஓடேக்கை அவையின்ரை துணைப்படையாக இவை எந்த ஓட்டம் ஓடுவினம் எண்டு சொல்லியே தெரியவேண்டும்... அதில்லை வேடிக்கை... தாங்கள் எவரையும் அச்சுறுத்தி பணியவைக்க முயலவில்லை எண்டெல்லே அறிக்கை விட்டிருக்கினம்... சரணடைந்தவை சொல்லுற கதையைக் கேட்டால் சந்தி சிரிக்குமெண்டெல்லே நெடுந்தீவுச் சனம் சொல்லுதுகள்...

செய்தி :- சமஷ்டித் தீர்வை பொதுசனஐக்கியமுன்னணி நிராகரிப்பு அரசுமீது சனாதிபதியின் அதிகாரம் பாயும்... சுதந்திரக்கட்சி செயலாளர் அறிவிப்பு...

மயிலர் :- பேசாம பொது சன ஐக்கிய முன்னணியை கலைத்துவிட்டு தேசிய பிக்குமார் முன்னணியோட சந்திரிகா அன் கொம்பனியினர் இணைந்தால் என்ன? அவையும் அதைத்தானே சொல்லினம். அதி சரி அரசு மீது அதிகாரம் பாயும் என சந்திரிகா அடிக்கடி மிரட்டுகிறார்... பாய்கிறார் இல்லை.... இதுக்கு ஏதாவது வெளியழுத்தம் காரணமாக இருக்குமோ... ஒரு யோசனை.... அப்படிப்பிக்குமார் முன்னணி சேருர யோசனை இருந்தா.. அந்த மக்கள் விடுதலை முன்னணி சிவப்புச்சட்டைக்காரரையும் கூட்டிக்கொண்டு போய் மஞ்சள் காவி அங்கிக்காரரோட சேர்த்து விடுங்கோ... ஒண்டில் பிக்குமார் முழு அரசியல் வாதிகளாகவேண்டும்... அல்லது இவை முழுப்பிக்குமார் ஆக வேண்டும்... எப்படியெண்டாலும் சிறிலங்காவின் பலன் கவலைக்கிடமாகத் தான் கிடக்கு.



அரங்கம்

# மானுடத்தின் தமிழ்க் கூடலில் நிஜங்களை விரித்து நெஞ்சங்களை உருக்கிய... 'கரைதேடும் ஓடங்கள்'




அன்பு நதியிங்கு ஓடும்
ஆனந்தம் விளையாடும்
மானுட பண்பாடும் பாடும்
மனிதம் பூமுடி சூடும் (மனிதம்)

என்று தொடங்கும் அந்தப் பாடலுடன் தொடங்கிய அந்த அரங்கு கிட்டத்தட்ட 50 நிமிடங்கள் மானுடத்தின் தமிழ்க்கூடலில் முதலாம் நாள் நிகழ்வில் ஒன்று கூடிய மக்களின் மனங்களை அப்படியே உறைய வைத்தது. புதுவை அன்பனின் வழமையான பாணியில் தனது கலைப்படைப் பிற்குள் காண்போரை அப்படியே ஆழ உள்ளிழுத்துச் செல்லும் படைப்பில் ஒன்றாகவே கரைதேடும் ஓடங்கள் என்ற மேடை நாடகமும் அமைந்தது.

இந் நாடகத்தைப் பார்வையிட்ட தமிழ்நாடு விடுதலைச் சிறுத்தை அமைப்பின் தலைவரான திருமாவளவன் கூறுகையில் 'அப்படியே மனசைப் புழிஞ்சிட்டுது. என்னால் தாங்க முடியல்லை மக்கள் பட்ட துன்பத்தை, போராளிகளோடு மக்கள் சேர்ந்து நின்றதைச் சகலதையும் அப்பிடியே ஒரு மணி நேரத்துக்குள்ளை கொண்டு வந்து வச்சிட்டார். மனசு அப்பிடியே பாரமாகக் கிடக்குது என்று குறிப்பிட்டார்.

நாடகம் மூவின மக்களினதும் இலங்கையில் நிறைவான வாழ்க்கையை அப்படியே காட்டிச் செல்வதுடன் அவர்களுக்கிடையிலான வாணிபத் தொடர்பையும் அதில் ஏற்படும் உறவையும் பின் இனக்கலவரத்தினையும் அதன் போது சிங்களவரால் தமிழர் தாக்கப்படுவதையும் மனித நேயங் கொண்டசிங்களக் குடிமகனொருவர் தமிழ்க் குடும்பத்தைக் காப்பாற்றி வழியனுப்பி வைப்பதையும் காட்டி நிற்கின்றது.

சிங்கள ஆட்சியாளரின் கதிரைச்சண்டையும் ஒவ்வொரு கதிரைக்கு ஆள் மாறுகின்ற போதும் தமிழரை நசுக்க முற்படுவதும் சிங்கள மக்களுக்கு அமைவான சட்டங்களை தமிழரின் இயல்பு வாழ்க்கையில் திணிக்க முற்படுவதையும் மிகவும் இலகுவாகச் சகலரும் புரிந்து கொள்ளக் கூடிய வகையில் அந்த நாடகம் காட்டிச் செல்வதுடன் சந்திரிகா, ரத்வத்தையின் தமிழர் மீதான போரையும் அவர்களின் அரசியலையும் ஒரு வேலிச் சண்டை மூலம் மிகவும் தெளிவாகக் காட்டி நிற்கின்றார் நெறியாளர்.

இலங்கையின் பொருளாதாரம் போரினால் பலவீனம் அடைவதையும் அதற்காக இலங்கையின் வளங்கள் விற்கப்படுவதையும் அடகு வைக்கப்படுவதையும், கூடச் சுட்டி நிற்கின்றார்.

யாழ்ப்பாணத்தின் பாரிய இடப்பெயர்வையும் அதன் பின் வன்னியில் மக்கள் படும் துன்பத்தையும் உறவுகள் பிரிந்து அக்கரை பாதி இக்கரைபாதியாக நின்று தவித்து கடிதத்தில் ஏங்குவது, அந்தக் கலைஞர்களின் மூலம் நெஞ்சை உருக்கும் நிஜங்கள் விரிகின்ற காட்சிகளாகும்.

வன்னியில் மக்களின் தொடர்ச்சியான இடப்பெயர்வுகளும் பனடோல் கூட இல்லாத வாழ்க்கையும் பட்டினியால் தவிக்கும் பிஞ்சுகளையும் அதைப் பார்த்துத் தாங்காது கண்கலங்கும் பெற்றோர் கொண்டு வந்த நகை நட்டு பொருள் பண்டமென அனைத்தையும் விற்று மானத்துடன் வாழ்ந்து வருவதையும் அப்போது ஒலிக்கும்.

வாழத்தான் துடிக்கின்ற மனிதர்கள் இவர்கள்
சுதந்திர வாழ்விழந்த தமிழர்கள்

என்ற பாடலுடன் தத்ரூபமாகக் காட்டி நிற்கின்றது.

நாடகத்தைப் பார்த்தபின் வெளியில் வந்த தமிழ் நாட்டைச் சேர்ந்த நெறியாளர் புகழேந்தி குறிப்பிடுகையில்.

"என்ன படைப்பு! நானோர் கலைஞன். நான் இந்த நாடகத்தின் படைப்பு வெளிப்பாட்டைப் பார்ப்பம் என முயன்ற போதும் தோற்றுப் போனன் அந்த நாடகத்தின் கதையோட்டம் என்னை வேறு எதையும் பார்க்க விடவில்லை என்னையறியாமல் என்கண்கள் குளமாகி விட்டன. நான் தான் கண்கலங்குகிறேனா எனக்கு மட்டுமா இந்தத் தவிப்பு எனத் திரும்பிப் பார்த்தால் அருகில் இருந்த ஓவியர் மருதுவும் கண்ணைத் துடைச்சுக்கிட்டு இருக்கிறார். இத்தனை துன்பத்துடன் ஒரு இனம் தனது வாழ்விற்காகப் போராடும் போது அதற்கு ஆதரவு வழங்காதவர்கள் தமிழர் இல்லை என்று சொல்வதை விட மனிதரேயில்லை என்று சொல்லலாம்."என்றார்.

புதுவை அன்பனின் இந்த நாடகம் வன்னியில் மக்கள் எல்லைப்படையாக, கிராமியப் படையாக, போர் எழுச்சிக் குழுக்களாகப் போராட்டத்துடன் இணைந்து விடுதலை வேட்கையுடன் ஒவ்வொரு மனிதனும் ஏதாவது செய்ய வேண்டும் என்ற துடிப்புடன் நின்று செயற்பட்டதை அப்படியே எம் கண்முன் கொண்டு வருவதுடன்.


ஒவ்வொரு போராளியும் வறுமையில் குடும்பம் தவிக்கும் போதும் பசியால் வாடும் தங்கைக்கு என் பணிமுடித்து வருவேன் என்று கூறுவது நெஞ்சுருக வைக்கிறது.

'இலங்கைத்தீவில் அமைதி வேணும் என்றால் சிங்களப் போரினவாதிகளே குழப்பாதீங்கோ' என சிங்கள மக்களே கோசமிடுவது போரின் தாக்கத்தைச் சிங்கள மக்களும் உணர்ந்துள்ளனர் எனக்காட்டி நிற்கின்றது. இதை அவ்வரங்கில் கூடியிருந்த சிங்களச் சமூகம் புரிந்து கொண்டதுடன் தமிழர் மீதான தாக்குதல் சிங்கள பேரினவாதத்தின் தேவையற்ற அடாவடி என்று அவர்களைப் பேசவும் வைத்தது.

ஒட்டு மொத்தமாகப் பார்க்கையில், 'கரைதேடும் ஓடங்கள்' பொருத்தமான காலத்தில், பொருத்தமான மேடையில் பேச வேண்டிய விடயங்களை உரியமுறையில் பேசியுள்ளது.

பல சமூகங்கள் கூடி நின்ற அவ்வரங்கில் 'இத்தனை துன்பம் தமிழன் பட்டானா? என அனைவரையும் கண்கலங்க வைத்ததன் மூலம் தமிழரின் துன்பங்களை ஊரறியச் செய்யும் அதன் இலக்கு நிறைவேறியுள்ளதால் அது பொருத்தமான மேடையே உலகம் ஒன்று கூடி அமைதியைக் கொண்டு வர முயல்கையில் கூடி நின்ற மானுடத்தின் முன், இத்தனை துன்பம் பட்டோம் இனியும் பட வேண்டுமா எனக் கேட்க இது ஒரு பொருத்தமான காலத்திற்கேற்ற அரங்கே.

புதுவை அன்பன் 'செல்வண்ணை' என்று எல்லோராலும் விரும்பப்படும் ஒரு எளிமையான கலைஞன். படைப்பாற்றல் மிக்க ஒரு நெறியாளர். இவரின் கலைப்பாரம் பரியம் நீண்டது இன விடுதலைக்கான தமிழர் எழுச்சி தொடங்கிய காலப்பகுதியிலிருந்து விடுதலைக் கருத்துக்களை மக்கள் முன் நிறுத்திக் கேள்வி கேட்டு விடைகாண முற்படும் இவரின் படைப்புகள் பல உள. கடந்த ஏழு ஆண்டுகளாக வன்னிப் பெருநிலப்பரப்பில் செம்மலையில் இருந்து பண்டிவிரிச்சான் வரை தெருவழி நாடகமாக மிதிவண்டிகளில் திரிந்து கலையை மட்டுமின்றி விடுதலை உணர்வையும் மக்கள் மனங்களில்



ஊட்டினார். கலைஞர்கள் ஆண், பெண் வேறுபாடின்றி, வயது வேறுபாடின்றி தைக்க இடமில்லாத தேய்ந்த ரயர், ஒட்ட இடமில்லாத ரீயூப்புடன் பயணஞ்செய்து மக்களுடன் சேர்ந்து உண்டு படுத்து, மழை, பனி, வெயில் எனக் காலநிலை வேறுபாடின்றி, நுளம்புக்கடியை சகித்துக் கொண்டே வன்னியெங்கும் சிதறிப் பரந்திருந்த குடியிருப்புகள் அனைத்தும் தேடிச் சென்று விடுதலைக் கருத்தை ஊட்டினர் இவர்களின் பணி என்றும் நன்றியுடன் நினைவுகூரப்பட வேண்டும்.

'கரைதேடும் ஓடங்கள்' யாழ், வவுனியா என அரங்கேறித் தற்பொழுது திருகோணமலை, மட்டக்களப்பு எனக் கலைப் பயணம் தொடரத் தயாராக இருக்கிறது.

எளிமையான இவ்வூடகம் ஊடாகத் தமிழினம் தம்மைப் புடம் போட்டுக் கொண்டே இருக்கும் என்பது வெள்ளிடைமலை.

**- கண்ணாடி -**

## பன்முகம் -04

# பொய்யும் மெய்யும்

**நல்லூர்** சுவாமி ஞானப்பிரகாசர் சிறந்த கத்தோலிக்க துறவி, பன்மொழிப் புலவர், வரலாற்று ஆய்வாளர், மதபோதகர் என்று பன்முகங்கள் அவருக்கு உண்டு.

அவருடைய காலத்தில் யாழ்ப்பாணத்தில் பல இடங்களில் கத்தோலிக்க தேவாலயங்களைக் கட்டியெழுப்பிய பெருமை அவருக்கு உண்டு.

ஆலயவேலைகள் நடைபெறும் வேளையில் அவருக்கு ஓய்வு கிடைக்கும் வேளைகளில் இனிப்பு அடங்கிய தகரடப்பாவுடன் கோவில் முற்றத்தில் நின்று அவ்வழியால் போகும் சிறுவர்களுக்கு இனிப்புடப்பாவைக் காட்டி அழைப்பாராம். சிறுவர்களும் இனிப்பு வேண்டும் ஆசையில் ஓடிச் செல்வார்கள்.

இனிப்பை உடனடியாகக் கொடுத்து விடாமல் " உங்களுக்கு பொய்க்கும் மெய்க்கும் உள்ள வித்தியாசம் என்னவென்று தெரியுமா?" எனக் கேட்பார். சிறுவர்கள் பதில் கூறமுடியாமல் விழிப்பர்.

அங்கு கட்டிட வேலைக்காக குவித்து வைத்திருக்கும் மண் கும்பத்தைக்காட்டி "முதலில் ஓடிச் சென்று ஆளுக்கு சிறங்கை மண்ணை அள்ளி அதைக் கைகளில் குவித்தபடி கொட்டாமல் கொண்டு வாருங்கள்" என்று கூறுவார்.

சிறுவர்களும் இனிப்புப் பெறும் ஆசையில் ஓடிச்சென்று கைநிறைய மண்ணை அள்ளிக் கொண்டு வருவர்.

"இப்போது இல்லாவிட்டாலும் நான் இல்லாத காலத்தில் நீங்கள் என்னைநினைக்க இது உதவும்" என்று கூறியபடி அவர்கள் கைகளில் இருக்கும் மண்ணை உதட்டருகே கொண்டு சென்று பிடிக்கச் சொல்வார்.சிறுவர்களும் அப்படியே செய்வர்.

"இப்போது மண்ணுக்கு நேராக பொய் பொய் என்று சொல்லுங்கள்" சிறுவர்களும் "பொய் பொய்" என்று உச்சரிக்க அவர்கள் உதட்டிலிருந்து அழுத்தப்பட்டு வெளியேறும் காற்று கையில் உள்ள மண்ணிற்படவே கையில் குவிந்திருக்கும் மண் சிறிது சிறிதாகச் சிதறும்.

"இப்பொழுது அதேமாதிரி மெய் மெய் என்று சொல்லுங்கள்"

சிறுவர்களும் அப்படியே செய்வார்கள். ஆனால் கைமண்ணில் ஒரு அசைவோ, மாற்றமோ ஏற்படாது.


சுவாமி ஞானப்பிரகாசர்

"இப்பொழுது பார்த்தீர்களா இரண்டுக்கும் உள்ள வித்தியாசத்தை நீங்கள் பொய் பொய் என்று கூறிய போது கையில் உள்ள மண் சிதறியது. அது போல உங்கள் வாழ்க்கையில் நீங்கள் பொய்பேசுவீர்களாயின் உங்களிடமுள்ள நற்பண்புகள், செல்வம், மற்றவர்கள் உங்கள் மேல் வைத்திருக்கும் நன் மதிப்புக்கள் உறவுகள் யாவுமே ஒவ்வென்றாக உங்களிடமிருந்து பறிபோய்விடும்."

"மெய்பேசுவீர்களாயின் உங்களுக்கு புதிதாக எதுவும் வந்து சேராது போனாலும் உங்களுக்கு உள்ளவை யாவும் உங்களிடம் இருக்கும் நீங்கள் அவற்றுடனேயே நிறைவாக வாழ்வீர்கள்." என்பார்.

பின்னர் சிறுவர்களுக்கு இனிப்புக் கொடுத்து அனுப்பி விடுவார்.

அன்று சிறுவர்களாய் இருந்த அவர்களுக்கு சுவாமிகள் கூறிய விளக்கம் எந்தளவு புரிந்திருக்கும் என்பது எமக்குத் தெரியாது போனாலும் அவர்கள் வளர்ந்து பெரியவர்கள் ஆன பின்னர் அதன் யதார்த்தத்தைப் புரிந்து கொண்டிருப்பர் என்பது மட்டுமல்ல சுவாமிகள் கூறியது போன்று பிற் காலத்தில் அவரை மறக்க முடியாமல் இருப்பதற்கான சம்பவமாகவும் இது அமைந்திருக்கும்.

இந்த அனுபவத்தை தாம் சிறுவனாக இருந்தபோது நேரடியாக நல்லூர் சுவாமி ஞானப்பிரகாசம் அவர்களிடமிருந்து பெற்றுக்கொண்ட முதியவர் ஒருவர் எனக்குக் கூறினார்.

சுவாமிகள் கொடுத்த இனிப்பின் சுவை அவர்கள் நாவைவிட்டு அன்றே மறைந்திருக்கும். ஆனால் பொய்க்கும் மெய்க்கும் உள்ள வித்தியாசத்தை விளக்கிய முறையும், அவர் கற்றுக்கொடுத்த பாடமும் என்றைக்கும் மறையப் போவதில்லை.

எந்த வெளிநாடுகளுக்குமே செல்லாது 70 இற்கும் மேற்பட்ட மொழிகளின் அறிவும், 30 இற்கும் மேற்பட்ட மொழிகளில் எழுத, படிக்க, பேச அவர் பெற்றிருந்த புலமையும், வியப்புக்குரியன.

இத்தனைக்கும் சுவாமிகள் ஒரு பட்டதாரியும் அல்லர். ஆனால் பன்மொழிப் புலவராகவும், சிறந்த நிர்வாகியாகவும், மதபோதகராகவும், ஆராய்ச்சி எழுத்தாளராகவும் அவர் விளங்கினார்.

கோவிலுக்குக் கோவில் வெவ்வேறு கிராமங்களுக்கு கூடார வண்டியில் சென்ற அவருக்கு அந்தக் கூடார வண்டியே நடமாடும் பல்கலைக்கழகமாகவும், நூல் நிலையமாகவும் திகழ்கின்றன.

**-நாவண்ணன்-**

# 2003: சமாதானத்தின் ஆண்டுப் பலன்

**நிலாந்தன்**

**பிந்திக்கிடைத்த** தகவல்களின்படி சனாதிபதி சந்திரிகா தலைமையிலான பொதுசன ஐக்கிய முன்னணியி லிருந்து சிலகட்சிகள் வெளியேறலாம் என்றும் சிறிலங்கா சுதந்திரக் கட்சிக்கும் ஜே.வி.பி. க்கும் இடையில் விரைவில் ஒரு புதிய கூட்டு உருவாகலாம் என்றும் இப்புதிய கூட்டு சாமாதானத்துக் கெதிராக சிங்களப் பொதுச் சனங்களைத் திரட்டுவதை தனது இலக்காகக் கொண்டிருக்கும் என்றும் கூறப்படுகின்றது. இதொரு புறம்.

இன்னெரு புறம் - விரைவில் தென்னிலங்கையில் தொழிற்சங்கங்கள் அரசின் தனியார் மயமாக்கலுக்கு எதிராக பரந்தளவிலான தொடர்ச்சியான போராட்டம் ஒன்றைத் தொடங்கலாம் என்று எதிர்பார்க்கப் படுகிறது.

இவை எதைக்காட்டுகின்றன என்றால் - இவ்வாண்டு ரணிலுக்கு ஒரு சோதனையாண்டாக அமையக் கூடும் என்பதையே.

ரணிலுக்கு சோதனையென்றால் அது சமாதானத்துக்கும் சோதனை தான் இதை இரண்டு விதமாக நிரூபிக்கலாம்.

முதலாவது - சமாதானத்தில் ஈடுபடும் இருதரப்பில் ஒருதரப்பின் தலைவராக அவர் இருப்பதால் அவருக்கு வரும் சோதனைகள் சமாதானத்திற்கென்றாகிவிடும்.

மற்றது - பொதுவாகச் சிங்களத் தலைவர்கள் தமக்கு வரும் சோதனைகளைத் தழிழர்களின் தலைகளின் மீது உருட்டி விடுவதே வழமை. தமக்கு நெருக்கடிகள் வரும் போதெல்லாம் சிங்களத் தலைவர்கள் தமது இராஜ போகத்தையும் பதவிச் சுகங்களையும் காப்பாற்றுவதற்காக சமாதானத்தைக் காட்டிக் கொடுப்பதே வழமை இந்தப் பாரம்பரியத்தை ரணில் பின்பற்றுபவராக இருந்தால் தொழிற்சங்கப் போராட்டங்கள் மற்றும் சமாதானத்துக்கு எதிரான அரசியல் கூட்டுக்கள் போன்றவற்றை வெற்றிகொள்ள சமாதானத்தைப் பலியிடமாட்டார் என்பதற்கு என்ன உத்தரவாதம்?


ஏற்கனவே உயர்பாதுகாப்பு வலயங்கள் பற்றிய சர்ச்சையில் சமாதானம் தொங்கத் தொடங்கி விட்டது.

யுத்தநிறுத்த உடன்படிக்கை கைச்சாத்தாகியதிலிருந்து கடந்த சுமார் பத்து மாதகால முயற்சிகளில் தோன்றிய ஒப்பீட்டளவில் பெரிய சோதனையாக இது மாறிவருகிறது. .இது விசயத்தில் சந்திரிகா என்ன நினைக்கிறார், ரணில் என்ன நினைக்கிறார், என்பதை விடவும் தமிழ்களைப் பொறுத்தவரை அதிகம் அக்கறைக்குரிய அதிகம் கவலைக் குரிய ஒரு விசயமாய் இருப்பது யுத்த நிறுத்தக் கண்காணிப்புக் குழுவின் நிலைப்பாடுதான் புலிகளால் கடுமையாக விமர்சிக் கப்படும் இந்த நிலைப்பாடு. பெருமளவு இராணுவத்தின் அபிலாசைகளை பிதிபலிக்கும் ஒன்றாக இருப்பதே இங்கு பிரச்சினை.

முன்பு காஞ்சிரங்குடா சம்பவத்தில் யுத்தநிறுத்தக் கண்காணிப்புக் குழு விட்ட முதல் நிலை அறிக்கை தமிழர்களால் விமர்சிக்கப்பட்டது.

இம்முறையும் மீளக் குடியமர்வு விவகாரத்தில் யுத்தநிறுத்தக் கண்காணிப்புக்குழுவின் அறிக்கை தமிழர்களால் விமர்சிக்கப்படுகின்றது.

இம்முறை சமாதானம் செய்வதிலுள்ள மிகவும் ஆறுதலான விசயமே பக்கச் சார்பற்ற பிராந்திய நலன்கள் எதுவுமற்ற அனுசரணை யாளர் பாத்திரம் தான். இந்த அனுசரணை யாளர்களின் ஒரு அங்கமாய் இருப்பது யுத்தநிறுத்தக் கண்காணிப்புக் குழு. எனவே இக்குழு இருதரப்பினரதும் அபிலாசைகளைப் பிரதிபலிப்பதாய் இருக்கவேண்டும் என்ற எதிர்பார்ப்பே நியாயமானது.




பதிலாக ஓராண்டுக்கு முந்திய யுத்தகள வலுச்சமநிலைபற்றி அவர்கள் கதைப்பதானது கடந்த சுமார் பத்து மாதகால சமாதான முயற்சி களின் வளர்ச்சிகள் எதையும் அவர்கள் கவனத்தில் எடுக்கத் தவறி விட்டார்களோ என்ற அச் சத்தை தமிழர்களிடம் உருவாக்கி உள்ளது.

இது சமாதானம் செய்வதில் உள்ள மிகவும் ஆறுதலான அம்சத்தையே சோதனைக் குள்ளாக்கிவிடும். போலிருக்கிறது.

மீளக் குடியமர்வு பற்றிய சர்ச்சையில் இராணுவம் விடாப்பிடியாக வற்புறுத்தும் அம்சம் இந்த வலுச்சமநிலைதான். இங்கே அவர்கள் வலுச்சமநிலை என்று கதைப்பது ஓராண்டுக்கு முன்பு அதாவது புரிந்துணர்வு உடன்படிக்கை உருவாக முன்பு காணப்பட்ட ஒன்றைத்தான்.

ஆனால் புரிந்துணர்வு உடன்படிக்கை கைச்சாத்தாகி சுமார் பத்து மாதங்களாகிவிட்டது. இந்த பத்து மாத காலத்துள் சமாதானம் மெல்லத் துளிர்த்து ஒரு வளர்ச்சிக் கட்டத்தை அடைந்து விட்டது அந்த வளர்ச்சிகளின் பிரகாரம் உபகுழுக்கள் உருவாக்கப்பட்டுள்ளன. உதவி வளங்கும் நாடுகள் சர்வதேச அரங்கில் இருதரப்புப் பிரதிநிதிகளையும் சந்தித்தாயிற்று. இந்நிலையில் உருவாக்கப்பட்ட உபகுழு அதன் செயற்பாடுகளை விஸ்தரிக்க முடியவில்லை என்றால் சமாதானம் றிவேஸ்சில் போகிறது அல்லது இறுகிப் போய் நிற்கிறது என்று தானே அர்த்தம்?



இதை இன்னொரு விதமாகவும் பார்க்கலாம் சுமார் ஓராண்டுக்கு முன்பிருந்த யுத்தகள வலுச்சமநிலையே புரிந்துணர்வு உடன்படிக்கை உருவாகக் காரணம். இந்த வலுச் சமநிலையின் மீது கட்டப்பட்டதே புரிந்துணர்வு உடன்படிக்கை கடந்த சுமார் ஓராண்டு கால யுத்தநிறுத்தத்திலும் இது மாறாதிருக்கிறது. எனவே யுத்தம் களத்தில் நிலவுவது அதே பழைய வலுச்சமனிலைதான்.

ஆனால் கடந்த பத்து மாத காலமாக சர்வதேச அரங்கில் நிலைமைகள் மாறிவருகின்றன. புலிகளுக்கு எதிராய் இருந்த உலகின் அபிப்பிராயத்தில் உண்டாகிவரும் மாற்றத்தால் சர்வதேச அரங்கில் புலிகளுக்கும் அரசுக்கும் இடையி லான வலுச்சமநிலை புலிகளுக்குச் சாதகமாக மாறத் தொடங்கிவிட்டது.

சரியாகச் சொன்னால் - இப்பொழுது ஈழப்போரின் களம் சர்வதேச அரங்கிற்கு நகர்ந்து விட்டது. எனவே அங்கே உண்டாகிவரும் புதிய வலுச் சமநிலையை கவனத்தில் எடுத்தே இனி எதையும் செய்ய வேண்டியிருக்கும்.

இப்புதிய வலுச்சமநிலையின் பிரகாரமே உபகுழு உருவாக் கப்பட்டது.

உபகுழு எனப்படுவது புரிந்துணர்வு உடன்படிக்கையின் அடுத்தகட்ட வளர்ச்சிமட்டுமல்ல சர்வதேச அரங்கின் ஈழப்போரின் மாறிவரும் வலுச் சமநிலைக்கேற்ப உருவாக்கப்பட்ட அமைப்பே அது. இப்புதிய வலுச் சமநிலையை யுத்தக் களத்திலும் உருவாக்க அதாவது - ஓராண்டுக்கு முன்பிருந்துவரும் பழைய வலுச் சமநிலையை புதிய வலுச்சமநிலைக்கேற்ப மாற்றியமைப்பதற்கென்றே உபகுழுக்கள் உரு வாக்கப் பட்டன.

அவை இப்பொழுது இறுகிப் போய்நிற்கின்றன. சூனியப் பிரதேசத்தில் கூடிய உபகுழு சாதித்தவைகளும் சூனியம் தானா என்று கேட்கும் ஒரு நிலை.

அதிலும் இதிலுள்ள மிகவும் ஆபத்தான அம்சம் என்னவென்றால் - கடைசியாகக் கிடைத்திருக்கும் ஒருதகவலின்படி மீளக் குடியமர்வு தொடர்பான இராணுவத்தின் முன் மொழிவுகள் பாதுகாப்பு அமைச்சின் செயலாளராலேயே வரையப்பட்டன என்று யாழ்ப்பாணத்தில் உள்ள படைத் துறை உயர்மட்டத்தில் கூறப்படுகின்றது என்பது.

அவ்வாறாயின் ரணில் விக்கிரமசிங்க இப்பத்தியின் ஆரம்பத்தில் கூறப்பட்டது போல சமாதானத்தைப் பலியிடப் போகிறாரா?

உண்மையில் மீளக்குடியமர்த்துவது என்பது ஒரு படைத்துறைத்தீமானம் மட்டுமல்ல அதில் இராணுவம் சம்மந்தப்பட்டிருக்கும் அளவுக்கு சிவிலியன்களும் சம்மந்தப்பட்டிருக்கிறார்கள். இதில் யாருடைய நலன்களுக்கு முதன்மை தருவது என்பதே இங்குள்ள பிரச்சினை.

இது சமாதானத்தின் வளர்ச்சிப் போக்கை கணக்கிலெடுத்து முடிவெடுக்கப்பட வேண்டிய ஒரு விசயம். இதன்படி - உப குழுக்களை உருவாக்குவதென்று ஒரு அரசியல் தீமானத்தை எடுத்துவிட்டு மீளக்குடியமர்த்துவதை படைத்துறையிடம் தீர்மானிக்க விடுவதென்பது சமாதானத்துக்கு விசுவாசம் இல்லாத ஒரு செயலே.

உபகுழுக்களை உருவாக்கியது ஒரு அரசியல் தீர்மானம் என்பதால் மீளக்குடியமர்த்துவதும் ஒரு அரசியல் தீர்மானமே. வேண்டுமானால் இதில் இராணுவத்தைக் கலந்தாலோசிக்கலாம். மற்றும்படி இராணுவம் மட்டும் முடிவெடுக்க முடியாது. தவிர இராணுவமே கூறுகிறது அது பாதுகாப்பு அமைச்சின் முடிவுதான் என்று அவ்வாறாயின் உபகுழுவின் கதி என்னவாகும்?

சமாதானத்துக்கான இந்த ஆண்டின் பலனெனப்படுவது அதிகமதிகம் உபகுழுவின் தலைவிதியிலேயே தங்கி இருக்கிறது.

# உயர் பாதுகாப்பு வலயங்களும் அச்சப்படும் தமிழ் மக்களும்

**அரசு** - புலிகளிற்கிடையிலான சமாதான பேச்சுவார்த்தையின் முன்னேற்றப்பாதையின் ஒரு கட்டத்தில் தற்போது ஊடகப் போர் ஒன்று நடைபெற்று வருகின்றது.

இவ் ஊடகப் போரானது முத்தரப்பிற்கிடையில் நடைபெற்று வருகின்றது. இதன் விளைவு சமாதானம் தொடர்பாக அந்த நம்பிக்கை கொண்ட சிங்கள, தமிழ் மக்கள் மட்டுமன்றி சர்வதேச சமூகத்தினிடையேயும் ஒரு சிறு சலசலப்பை ஏற்படுத்தியுள்ளது.

யாழ்.குடாநாட்டில்சிறிலங்காப் படையினரால் ஏற்படுத்தப்பட்டுள்ள உயர் பாதுகாப்பு வலயம் தொடர்பாகவே இச் சலசலப்பு ஏற்பட்டுள்ளது.

இதில் வேதனைக்குரிய விடயம் யாதெனில் யாழ்.மாவட்ட இராணுவத் தளபதியான சரத்பொன் சேகவினால் சமர்ப்பிக்கப்பட்டுள்ள நிபந்தனையுடன் கூடிய நகலை நியாயப்படுத்துவது போன்று அமைந்துவிட்ட யுத்தநிறுத்த கண்காணிப்புக்குழுவின் அறிக்கையேயாகும்.

ஏனெனில் யுத்த நிறுத்த கண்காணிப்புக்குழுவின் பணி வடக்கு கிழக்குப் பகுதியில் ஆரம்பிக்கப்பட்டதன் பின்பு கண்காணிப்புக்குழுவினரால் விடுக்கப்பட்ட அவசரமான இரண்டு அறிக்கைகள் தமிழ் மக்கள் மத்தியில் கிலேசத்தை ஏற்படுத்தியுள்ளன.

மட்டக்களப்பு காஞ்சிரங்குடா பகுதியில் சிறிலங்கா அதிரடிப் படையினரால் மேற்கொள்ளப்பட்ட தாக்குதல் தொடர்பாக கண்காணிப்புக்குழு விடுத்த அறிக்கையும் தமிழ் மக்களை பாதிக்கும் வகையிலானதாகவே அமைந்திருந்தது.

தற்போது விடுக்கப்பட்டுள்ள அறிக்கையும் தமிழ் மக்கள் சமாதானத்தின் பெறு பேறுகளை பெற்றுக்கொள்ள வேண்டுமென நினைத்தார்களோ அதற்கு எதிரானதாகவேயுள்ளது.

இந்நிலையில் தமிழ்மக்களிற்கு தேவையானது நிதானத்துடன் கூடிய நியாயமான தீர்வுகளேயாகும். இவற்றின் மூலமே தமிழ் மக்கள் சமாதானத்தின் மீது நம்பிக்கை கொள்ளக்கூடியதாக இருக்கும்.

உயர் பாதுகாப்பு வலயப்பிரச்சினையை மையமாகக்கொண்டு தென்னிலங்கை அரசியல் வாதிகளும் தமது சமாதானத்திற்கு எதிரான கோசங்களை வலுப்படுத்த தொடங்கியுள்ளதை அங்கிருந்து வரும் செய்திகள் தெளிவுபடுத்துகின்றன.

சனாதிபதியும் ஜே.வி.பியினரும் இணைந்து கலந்து பேசி இராணுவத்தினரையும் துாண்டிவிடுகின்றனர்.

இதற்கு சனாதிபதி சந்திரிகா படைத்தரப்பினரை தனது ஊதுகுழலாக்கி பலமாகவே ஊதத் தொடங்கி விட்டார்.

இதன் வெளிப்படையாக சரத் பொன்சேகா பாதுகாப்பு வலயம் தொடர்பாக தயாரிக்கப்பட்ட நகலிற்கும்தனக்கும் எவ்வித தொடர்புகளும் இல்லையெனவும் அதனை இராணுவத் தளபதி பலகல்லவும் பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் ஒஸ்ரின் பெர்னான்டோவுமே தயாரித்தனர் எனவும் தான் யாழ் மாவட்டத் தளபதி என்ற வகையில் அதனை ஒப்படைத்தேன் என்றும் கூறினார். பேச்சு வார்த்தையின் பாதுகாப்புத் தரப்பின் சார்பில் கலந்து கொண்டு வந்த ஒஸ்ரின் பெர்னான்டோ மீதும் சந்தேகத்தை ஏற்படுத்தி யுள்ளது.

எது எப்படியாயினும் உயர் பாதுகாப்பு வலயமானது படைச் சமநிலையென்ற போர்வையில் மக்களின் மீள் குடியேற்றத்தை தடுப்பதற்கூடாக சமாதானத்தில் பாதிப்பை ஏற்படுத்தவே செய்யும்.

இந்த விடயத்தோடு சம்பந்தப்பட்ட எல்லாத்தரப்பினரும் மக்களின் நலனை முக்கியமாகக் கொண்டே தீர்வுகளை எட்ட வேண்டும். அதுவே பொருத்தமாகவும் இருக்கும்.

**சிறீ.இந்திரகுமார்**


# தாய்லாந்து - சமாதானப் பேச்சின் - புதுப்பரிமாணம் பயணமும் பார்வையும்

தீ.தவபாலன்

பகுதி - 03

**நொந்தாபுரி** செய்கோள் அலை ஏற்றி நிலையத்தில் பணிமுடிந்ததும் மீண்டும் நாகோர்ன் பத்தோமுக்கு திரும்பினோம். வரும் வழியில் ஒரு பெரிய கடைத் தொகுதியைப் பார்ப்போம் என அங்கு சென்றோம். முதல்நாள் தாய்லாந்து இருண்டு விட்டது.

தாய்லாந்து நேரம் நம்மைவிட ஒன்றரை மணிநேரம் அதிகம் நமக்கு ஒன்றரை மணிநேரம்



முன்பாக விடிந்து - ஒன்றரை மணிநேரம் முன்பாக இருண்டு விடும்.

அங்கு அப்போது நேரம் ஆறரையைத்தாண்டிவிட்டது. நாம் பயணித்த வாகன ஓட்டுநரான தாய் மூதாட்டி - பெரும் கடைத் தொகுதிக்கு (ஆங்கிலத்தில் இந்தவகை பெரும் கடைத் தொகுதியை Super Market) என்கிறார்கள், கீழாக இருந்த தரிப்பிடத்தில்இடம் தேடி வாகனத்தை நிறுத்தினார்.

அதன்பின் நாம் அந்த பெரும் கடைத் தொகுதிக்குள் நுழையச் சென்றோம் கடைத் தொகுதியின் வாசலில் அழகான கண்ணாடிப் பெட்டிகளில் சூடாக ஏதோ விற்பனையாகிக் கொண்டிருந்தது. TTN- குகன் குணரட்ணம் நல்ல உணவுகள் விற்பனையாகின்றன கிட்டச் சென்று பாருங்கள் எனக் குறிப்பிட்டார்.

மிகுந்த ஆவலுடன் அங்கு கிட்டச் சென்று பார்த்ததுதான் தாமதம் எந்தளவு வேகமாக முகத்தைத் திருப்ப முடியுமோ அந்தளவு வேகமாகத் திருப்பி னோம் வாய் ஓங்காளித்தது வயிறு குமட்டியது.

காரணம் என்ன தெரியுமா? நாம் கண்டதும் அருவருக்கும் கரப்பான் பூச்சிகள், பயப்படும் - தேள்கள், ஈசல்கள், எறும்புகள் இன்னம் வகைவகையான புழுக்கள், பூச்சிகள் எண்ணெயில் பொரிக்கப்பட்டு கூடைத் தட்டுகளில் அழகாக அடுக்கி வைக்கப்பட்டு விற்பனையாகிக் கொண்டிருந்தன. இதனை வாசிக்கவே உங்கள் வயிறு குமட்டும். பார்த்தால் எப்படியிருக்கும்? அதைவிட அவற்றைச் சாப்பிடுவதைக் கண்டால்? சொல்ல வேண்டுமா?

இந்த கரப்பான் வகையறாக்கள் தாய்லாந்தில் விலை கூடிய சிறப்பு உணவுகளாம்.அவற்றின் விலையும் ஏனைய உணவுகளை விட அதிகமாம்.

பூச்சி - புழு பொரியல்களைப் பார்க் காது திருப்பிய முகத்துடன் கடைத் தொகுதிக்குள் நுழைந்தோம் கடைத் தொகுதியில் சகல வகையான பொருட்களும் ஏராளமாக இருந்தன. நாமே பொருட்களை தெரிந்தெடுத்து - பணம் செலுத்தும் இடத்தில் அவற்றை காட்டிப் பணத்தைச் செலுத்த ஏற்பாடுகள் அங்கு இருந்தன. இந்த முறைக் கடைகளையே Super Market என்கிறார்கள்.

பொருட்களை நாமாகவே எடுப்பது என்பதால் இலகுவில் திருட்டுகளைப் புரியலாம் என நினைக்காதீர்கள் அங்கு அங்குலம் அங்குலமாக நடப்பதைப் பார்க்க கமராக்களைப் பூட்டியிருக்கிறார்கள் அவற்றின் மூலம் சகல நடவடிக்கைகளும் அவதானிக்கப்படுகின்றன.

அந்த Super Marketஐ பார்த்துவிட்டு உணவு உண்ணச் சென்றோம். அதற்கான சிறப்பு விடுதி இருப்பதாக குகன் குணரட்ணம் மூதாட்டியின் வாகனத்தில் அழைத்துச் சென்றார். இரவுநேர வாகன நெருக்கடிகளுக்கு மத்தியில் மெதுவாக நகர்ந்த வாகனம் - நீர் நிலையில் அமைந்த ஒரு உணவு விடுதியின் முன் நின்றது.

நீர் நிலை ஒன்றில் தூண்களை நிறுத்தி அதன் மேல் தாய்லாந்து கட்டடக்கலை யில் மரத்தினால் அந்த விடுதி அமைக்கப்பட்டிருந்தது. விடுதியின் வாசலில் பாரிய கண்ணாடித் தொட்டிகளில். மீன், றால், கணவாய், சிப்பி, நண்டு, சங்கு, உட்பட்ட கடலுயிர்கள் உயிருடன் இயங்கிக் கொண்டிருந்தன.

அந்த உணவு விடுதியில் நாம் கேட்கும் உணவுகளை உடனடியாகக் கொன்று சமைத்துத் தருவது விசேடம்.

நல்ல வெள்ளை அரிசிச் சோறு



தரப்பட்டது. அதன் வாசனை எமக்குப் பிடிக்கவில்லை இருந்தும் உண்ணவேண்டும். கணவாய் எல்லா இடத்திலும் பொதுதானே ஆகவே கணவாயை கறியாக்கித் தரக் கேட்டோம். ஒரு 20 நிமிடத்தில் கணவாய் வந்தது மிளகாய், மிளகாத்தூள், வெண்காயம் இல்லை, சிறிய அளவில் மிளகு தூவல் அரை அவியலாக வந்த கணவாய் கடுமையாக பற்களில் கடிபட்டது. வெறுப்புடன் கணவாய் வயிற்றில் இறங்கியது. கோழி இறச்சி எமக்குப் பொருத்தமாக இருக்கும் என அதற்கு கட்டளையிட்டார். குகன். 20 நிமிடம் கழித்து அதுவும் வெள்ளையாகவே வந்தது சரி அதுவும் வேண்டாம் என மீனுக்கு கட்டளையிட்டார் அவர். 20 நிமிடம் கழித்து மெல்லிய 3 மீன்கள் வெறுமனே அவிக்கப்பட்டு வந்தது. கட்டளையிட்ட காரணத்துக்காகவோ என்னவோ குகன் அவற்றை எமக்கு முன் ருசித்துச் சாப்பிட்டார்.

அந்த உணவு முடிந்ததும் - நாகோர்ன் பத்தோம் வந்தோம். றோஸ்காடன் விடுதியின் 6வது மாடியில் எமக்கும் TTN குழுவுக்கும் நிதர்சனம் குழுவுக்கும் தங்க இடம் வழங்கப்பட்டது. முதல் நாள் முடிந்து 2ம் நாள் விடிந்தது.

பேச்சுக்கள் காலை 9மணிக்கு ஆரம்பமாக விருந்தன பேச்சுக்கள் ஆரம்பமாகும் முன்பாக ஏதாவது செய்தி கிடைக்குமா எனப் பார்க்க - ஊடக அறைக்குச் சென்றோம்.

ஏற்கனவே அங்கு செய்தியாளர்கள் கணிணி இணைய வலையில் அதிர்ச்சியூட்டும் செய்தியைப் பெற்று அது பற்றி பரபரப்பாகக் கதைத்துக் கொண்டிருந்தார்கள்.

அது தமிழீழத் தேசியத் தலைவர் அவர்களுக்கு சிறிலங்காவின் மேல் நீதி மன்றம் ஒன்று 200 ஆண்டு கால சிறைத் தண்டனை தீர்ப்பினை அறிவித்திருந்தசெய்தியாகும்.

இந்த தீர்ப்பு தற்போதைய பேச்சுக்களைக் குழப்புமா என்பதே செய்தியாளர்களின் கேள்வியாக இருந்தது விடுதலைப்புலிகளின் பிரதிநிதிகள் என்ன கருத்தை தெரிவிக்கிறார்கள் என்பதனை அறிய அவர்கள் ஆர்வமாக இருந்தார்கள். இது தொடர்பாக தாயகத்தில் விடுதலைப்புலிகள் ஏதேனும் அறிக்கை வெளியிட்டார்களா என செய்தியாளர்கள் எம்மை குடைந்தெடுத்தனர். செய்தியாளர்களில் இந்த தீர்ப்பு சமாதானப் பேச்சுக்களை குழப்பிவிடுமா என அலைந்து அலைந்து எல்லோரிடமும் கேட்டனர். இந்து பத்திரிகைச் செய்தியாளர் சம்பந்தன் சமாதானப் பேச்சுக்கள் குழும்பி விட வேண்டும் என்பதில் அக்கறை கொண்டிருந்ததாகவே அது புலப்படுத்தியது.

அன்றைய பேச்சுக்களில் மதிய வேளை இடைவெளி வந்தது.

அவ்வேளை - செய்தியாளர்கள் கேள்வி கேட்க கிடைத்தவர்கள் அமைச்சர்கள் G.l. பீரிஸ்சும், றவூப் ஹக்கீமும் ஆவர்.

இந்த தீர்ப்பு அரசியலுக்கு அப்பால் ஒருநீதி மன்றதீர்ப்பு - இது பேச்சுக்களை பாதிக்காது என G.l பீரிஸ் கூறினார். நாட்டின் நீதி மன்றம் ஒன்றின் தீர்ப்பை அந்நாட்டு குடிமகன் விமர்சிக்க முடியாது அப்படி விமர்சித்தால் அவர் மீது நீதி மன்றத்தை கண்டித்த குற்றச் சாட்டில் வழக்கு தாக்கல் செய் யலாம் ஆகவே இதுபற்றி நான் விமர்சிக்க மாட்டேன். ஆனால் அரசியல் ரீதியான குற்றங்களுக்கு குடியியல் குற்ற வழக்கு தாக்கல் செய்வது பொருத்தமற்றது எனக் கூறி நழுவினார் றவூப் ஹக்கீம்.

அத்துடன் அன்றைய நாள் மதியம் வரையான பேச்சுக்களில் - இராணுவ உயர் பாதுகாப்பு வலயத்தில் மக்களை மீளக் குடியமர்த்தும் நடவடிக்கைக்காக அரசு - விடுதலைப்புலிகள் தரப்பில் குழு ஒன்று அமைக்கப்பட் டுள்ளதாகவும் - அரசுக் குழுவில் 9 பேர் அங்கம் வகிப்பர் எனவும் - பாதுகாப்பு அமைச்சு செயலர் ஒஸ்ரின் பெர்னான்டோ தலைமை வகிப்பார் எனவும் முடிவு செய்யப்பட்டுள்ளதாக. G.lபீரிஸ் அதில் தகவல் வெளியிட்டார்.

இதன் பின் பீரிசும், ஹக்கீமும் சென்று விட்டார்கள் பிற்பகல் 3 மணிக்கு அடுத்த அமர்வுப் பேச்சுக்கள் ஆரம்பமாகின 6 மணிக்கு முடிய வேண்டிய பேச்சுக்கள் 6.30 வரை நீடித்தன.

பேச்சுக்களின் முடிவின் பின் கார் ஒன்றில் முன்பின்னாக தாய்லாந்து கொமோண்டோக்களின் பாதுகாப்புடன் தமிழீழ விடுதலைப்புலிகளின் பிரதிநிதிகள் றோஸ்காடன் விடுதி வரவேற்புப்பகுதிக்கு வந்தனர். அவர்களில் திரு. அன்ரன் பாலசிங்கம் அவர்களை செய்தியாளர்கள் சுற்றிவளைத்துக் கொண்டனர். சிறிலங்கா மேல் நீதிமன்ற தீர்ப்பு தொடர்பாகவே அவர்களின் கேள்வி அமைந்தது.

திரு. அன்ரன் பாலசிங்கம் அவர்கள் தான் அமர ஒரு கதிரையைத் தருமாறு கேட்டார். செய்தியாளர்கள் அவரைக் கதிரை ஒன்றுக்கு அழைத்துச் சென்றனர். செய்தியாளர்கள் அவரை நெருங்கவிடாது தாய்லாந்து புலனாய்வு பாதுகாப்புப் பிரிவினர் வளையம் அமைத்தனர் அதனையும் மீறி நெருங்கிச் சென்றோரை இடுப்பை கைகளினால் சுற்றிப் பிடித்து பின்னால் அகற்றினர்.

அந்த அகற்றல் முறையைப்பற்றி குறிப்பிட வேண்டும். ஒரு மனிதனின் தோள் தலைப்பகுதியில் பிடித்து இழுத்தால் அவனின் கால்கள் நகர மறுக்கலாம். இடுப்பை பிடித்து இழுத்தால் கைகள் நகர மறுக்கலாம் உடல் முழுவதும் பின்னுக்கு வந்துவிடும் தாய்லாந்து படையினரின் நல்லதொரு முறையாக அது எமக்குப்பட்டது நாமும் இப்பிடி இழுக்கப்பட்டவர்கள் தான்.

பொதுவாக செய்தியாளர்களுக்கு பதிலளித்த விடுதலைப்புலிகளின் பிரதிநிதிகள் ஒருவாறு அங்கிருந்து அகன்று Lift ல் ஏறி 6ம் மாடியில் அறை ஒன்றுக்கு வந்து தமிழ் ஊடகவியலாளர்களுக்கு பதிலளித்தனர்.

அன்றைய பேச்சுக்களின் ஆரம்பத்தில் இந்ததீர்ப்பு பற்றி கண்டனத்தையும் ஆட்சேபத்தையும் தமிழீழ அரசியல்துறைப் பொறுப்பாளர் சு.ப. தமிழ்ச்செல்வன் அவர்கள் அரசுப் பிரதிநிதிகளிடம் தெரிவித்திருந்ததாக அவர்கள் குறிப்பிட்டனர். இந்தத் தீர்ப்பு தொடர்பாக அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும் என வேண்டியதாகவும் அவர்கள் அரசுப்பிரதி நிதிகளிடம் தெரிவித்ததாக கூறினார்.

அத்துடன் 2ம் நாள் பேச்சுக்களில் திருகோணமலை முதல் அம்பாறைவரையான பகுதிகளில் முஸ்லிம்கள் மீள்குடியமர்வு, வேளான்செய்கை மேற்கொள்வது பற்றியும், கிராமங்களில் நடைபெறும் மோதல்களைத் தவிர்க்க நவடிக்கைகளை மேற்கொள்வது பற்றியும் கேணல் கருணா அம்மானும், றவூப் ஹக்கீமும் ஏற்பாடுகளை மேற்கொள்வது குறித்து இணக்கப்பாடுகள் ஏற்பட்டதாகவும் உயர்பாதுகாப்பு வலயத்தில் தமிழ் மக்களை மீளக் குடியமர்வது பற்றிய நடவடிக்கைகளுக்காகவும் இரு தரப்பிலும் தலா 9 பேர் கொண்ட குழுக்களைஅமைக்க முடிவானதாகவும் இதில் தெரி விக்கப்பட்டது.

இந்தளவில் 2ம் நாளும் முடிவடைந்தது.

(மேலும் வரும்)

---

## 'விபவி' அமைப்பின் இலக்கியப் போட்டிகளும் தமிழ்ப்பிரிவு மதிப்பீட்டுக்குழுவின் அநீதியான தீர்ப்பும்




**அண்மையில்** மூவினத்தவர்களையும் கொண்ட 'விபவி' அமைப்பு நாடளாவிய ரீதியான சிறுகதை, கவிதைப்போட்டிகளை நடத்தியது. தமிழ்ப்பிரிவுப் போட்டிகளில் சிறுகதைப் போட்டிக்கு முந்நூறுக்கு மேற்பட்ட சிறுகதைகள் அனுப்பப்பட்டிருந்தன. முதல் மூன்று பரிசில்களை விட ஊக்குவிப்பாக மேலும் நான்கு பேருக்கு பரிசில்கள் வழங்கப்பட்டன. இந்த ஊக்குவிப்பு பரிசுக்கு வன்னியில் இருந்து அனுப்பப்பட்ட பெண் எழுத்தாளர் ஒருவரின் சிறுகதை தெரிவாகியிருந்தது. வடகிழக்கில் இருந்து பரிசு பெற்றஒரேபடைப்பாளி யாகவும் இந்தப்பெண்எழுத்தாளர் இருந்தார்.

பரிசளிப்பு விழாவைத் தொடர்ந்து பரிசு பெற்றவர்களின் படைப்புக்களின் குறை நிறைகளை ஆராய அமர்வு ஒன்று நடத்தப்பட்டது. இந்த அமர்வில் ஆக்கங்களை மதிப்பீடு செய்த குழுவினரும் பரிசு பெற்ற படைப்பா ளிகளும் பங்கெடுத்துக்கொண்டனர். இந்த அமர்வுக்கு தலைமை வகித்தபழம் பெரும் எழுத்தாளர் நீர்வை. பொன்னையன் என்பவர் மேலே குறிப்பிட்ட பெண் எழுத்தாளரின் கதையே சிறப்பான கதை என்றும் ஆனால் அக்கதையில் 'சுதந்திரபுரம் குண்டுவீச்சு' சம்பவம் அடங்குவதால் அதற்கு முதல் பரிசு கொடுத்தால் தாங்கள் கொழும்பில் இருக்க முடியாமல் போய்விடும் என்றும் நேரடியாகவே இந்த அமர்வில் கூறியிருக்கிறார்.

இரத்தமும் சதையுமாக வடகிழக்கு மக்களுக்கு ஏற்படுத்தப்பட்ட அவலங்களை யதார்த்த பூர்வமாக எழுதியதற்காக முதலாவது பரிசு மறுக்கப்படும் அவலத்தை நிகழ்த்திய தேர்வாளர்களுக்கு பாவம் சுயநிர்ணய உரிமையே இல்லைப் போலும் சரியான நியாயமான தீர்ப்பை கூறத் திராணியற்ற இவர்களுக்கு போட்டிக்கு வந்த கதைகளை மதிப்பீடு செய்யும் வேலை எதற்கு? இவ்வாறான அமைப்புக்களின் போட்டிகளுக்கு ஆக்கங்களை அனுப்பி தாங்களே தங்களை சிறுமைப்படுத்திக் கொள்ளும் தவறை இனிமேலாவது செய்யவேண்டாம் என்று வடக்குக்கிழக்கில் சுயகௌரவத்துடன் இருக்கும் படைப்பாளிகளைக் கேட்டுக் கொள்கிறேன்.

வி.அனபாயன்

---

ஆழியிலே ஆறுகள் மறைவது போல சுய நலனில் அறப்பண்புகள் மறைந்து விடுகின்றன. - லா ரோஷஃபுக்கோ

# தாய்மடி வாசம் 6

சுதந்திரா

*இதுதான் உங்கள் நாடென*
*அவர்களுக்குச் சொல்லி*
*அவர்களை இந்த மண்ணில்*
*தான்*
*வாழ்விப்பேன் எனும்*
*நம்பிக்கைகளோடு*
*வாழ்கிறேன்......*
*அந்த இனிய பொழுதின்*
*வரவிற்காய் ஏங்குகிறேன்.....*
"உங்கடை விலாசத்தைத் தருவீங்களே....!"

**கேட்ட** எனக்கு இல்லையென்று சொல்லாமல் தன் முகவரியை தந்துவிட்டு போனாள் அந்தத் தங்கை.

சனத்திரளால் வான் நிறைகிறது. இரண்டு பேருடன் இருந்த வான் முட்டின மனிதர்கள். ராகுலனும், அந்தத் தங்கையும் என் நினைவுகளில் சுழன்று கொண்டிருந்தார்கள். இப்படி எத்தனை பேரை எனது மண் சுமந்து கொண்டிருக்கிறது....? இதற்கெல்லாம் ஒரு முடிவு எந்தக் காலம் வரப் போகிறது...? தற்போது ஏற்பட்டுள்ள இந்த அமைதி இந்த அவலங்களுக்கெல்லாம் முற்றுப் புள்ளியிடும் எனும் பேச்சுகளும், நம்பிக்கைகளும் துளிர்விடத் தொடங்கியிருக்கின்றன. ஆனால் இது எந்த அளவில் வெற்றி பெறும்....? இலங்கை அரசு இதனை எப்படிக் கையாளப் போகிறது..... வழமை போல் தனது இனவாதக் கோர முகத்தைக் காண்பிக்கப் போகிறதா...? அல்லது தமிழர் பயங்கரவாதிகள் என்று உலகெங்கும் உளறித் திரியப் போகிறதா...? தொடர்ந்தும் தமிழின அழிப்பில் தன்னை இறக்கப் போகிறதா....? காலமே நீதான் பதிலைத்தர வேண்டும்...!

வாகனச் சாரதி சாரதியிருக்கையில் வந்தமர வெளியில் நின்ற சிலரும் உள்ளே வந்துவிட்டனர். பெற்றோலில் சிறுதுளியைவிட்டு வாகனத்தை இயக்கியும் வாகனம் அசைய மறுக்கிறது. வெளியில் நின்ற மற்றையவர்கள் தள்ளிவிட வாகனம் வேகம் பிடிக்கிறது. இதுவா வேகம் என்று கேட்குமளவிற்கு அந்த வாகன வேகம் இருந்தது. எனினும் அந்த வேகத்திற்கு மேல் அந்த வீதியில் ஓடமுடியாது. அந்தப் பள்ளங்களும் திட்டிகளும் வீதிகளாயிருக்க எப்படி வேகமாய் உடல் நோகாமல் வாகனம் ஓடுவது; உடல் நோகாமல் பயணம் செய்வது.....?

வானின் பின்னிருந்தவர்கள் தங்களுக்குள் கதைத்து சிரிப்பது ஊர்ப்புதினம், சண்டை நடந்த காலங்களில் தங்களது கவலைகள் எனப்பரிமாறிக் கொண்டிருந்தார்கள். முன்னிருந்த எனக்கு அந்த வான் சாரதி இந்த மண் முன்னிருந்த பொலிவையும் இப்பத்தைய நிலையையும் இதுவரையும் இந்த மண் பெற்ற வெற்றிகளையும் அதற்குக் கொடுத்த விலைகளையும் சொன்னான்.

"எப்பிடியிருந்த ஊருகள் இப்ப இப்பிடியா..... நாங்க எவ்வளவு கஸ்டப்பட்டமக்கா.... 'கிபீர்'டிக்க... 'செல்'லடிக்க..... ஆமி ஊருகளுக்க வரேக்க அதெல்லாம் இப்ப நினைச்சாலும் மனமெல்லாம் துடிக்குது. யாழ்ப்பாண இடப்பெயர்வுக்க எங்கடை சனம் எத்தினையள் எவ்வளவு கரைச்சல் பட்டுதுகள். குடிக்கிறதுக்கு தண்ணி கூட இல்லாம..... பிறந்த பிஞ்சுகளையெல்லாம் மழையுக்க கொண்டு வந்து.... எத்தினை அவலமக்கா...."

என்று பல உண்மைச் சம்பவங்களை நினைவு கூர்ந்தான் பல நினைவுகளை மீட்டு விழிகசிந்தான். அந்த அவலங்களைச் செய்த இலங்கை அரச கூலிகள் மீது கோபப்பட்டான்.

ஓ...இவன் இந்த மண்ணில் எத்தனை அவலங்களை சுமந்தவன்,கண்டவன், கேட்டவன். இவனுக்குள்ளிருக்கும் இந்த ஆவேசமும் ஆத்திரமும்....

இப்போது நான் அவனுடன் கதைக்கத் தொடங்குகிறேன்.

"நீங்க வன்னியா?"

"இல்லையக்கா மானிப்பாய் தான் சொந்த ஊர். இப்ப கிளிநொச்சியில இருக்கிறன்."

ஓ... என் ஊருக்கு கொஞ்சம் தொலைவாகவும், நானும்



நண்பர்களும் சேர்ந்து மருதடியான் தேருக்குப் போய்வந்த அந்த மானிப்பாய் மண்ணின் மைந்தனிவன். அவனது ஊரில் எனக்குத் தெரிந்தவர்கள் பலரைப் பற்றி விசாரித்தேன். அவர்களில் பலர் இன்று உயிருடன் இல்லையெனத் தகவல் சொன்னான். அப்போது தான் அவன் என்னையும் தனக்குத் தெரியுமென்று சொன்னான். எப்படியென அறியப் போனதில் அதிலிருந்தும் பலரைப்பற்றிய தகவல்கள் கிடைத்தது.

"எங்க படிச்சனீங்கள்?"

"யாழ் சென் பற்றிக்சிலை" என்றான். திறமையான மாணவர்கள் பலரை உருவாக்கி யாழ் மண்ணின் பெருமை காத்த அந்தக் கல்லூரியில் தான் அவனும் உருவாக்கபட்டுள்ளான்.

"அப்ப 89 இலையா ஓ.எல் எடுத்தனீங்கள்?" ஓம். என்னிலும் ஒரு வயதால் மூத்தவன் அவன்.

"நாட்டு நிலையலாலை படிப்பும் போச்சு. எவ்வளவு கனவுகளோட படிச்சது. எல்லாம் கனவாவே போச்சு...".

*நண்பனே!*
*உன்னை மட்டும்*
*இந்தக் காலம்*
*வஞ்சிக்கவில்லை*
*அது என்னைப் போலவும்*
*உன்னைப் போலவும்*
*எத்தனையோ லட்சக்*
*கணக்கானவர்களை*
*வஞ்சித்துள்ளது.*
*நீயாவது இந்த மண்ணில்*
*இருக்கிறாய்*
*நானோ.....*
*18 வயதோடு என்னவர்களால்*
*நாடுகடத்தப்பட்ட அகதியாய்...*
*புலம் பெயர்க்கப்பட்டு விட்டேன்...*

*ஒரு வகையில் ஆறுதற்படு*
*நண்பா...!*
*இந்த மண்ணில் உனது சொந்த*
*மண்ணில்*
*வாழக்கிடைத்ததற்காய்...*
*பெருமைப்படு......*

*இன்னொரு*
*தேசத்து*
*அடிமையாய்*
*நானிருப்பது*
*போதாமல்*
*இன்னும் இரண்டு*
*தேசமற்ற*
*அனாதைகளையுமல்லவா*
*உருவாக்கி*
*வைத்திருக்கின்றேன்...!*

*புலத்தில் எம்*
*குழந்தைகள்*
*பலரால்*
*உருவாக்கப்படிருக்கும்*
*வன்முறைச் சமூகத்தையும்*
*அவர்களால் மன*
*நோயாளிகளாகும்*
*பெற்றோர்களையும் பார்த்து*
*தினம் தினம் என்*
*பிள்ளைகளும்*
*அப்படியானால் எனும்*
*அச்சத்திலேயே - தினம்*
*செத்துக் கொண்டிருக்கும் இந்த*
*அடிமையின் வாழ்வு*
*உனக்கில்லையல்லவா*
*அதற்காய் பெருமைப்படு....!*

வாழ்வு மறுக்கப்பட்டு உலகாலும் இலங்கை அரசின் இனவாதத்தாலும் வஞ்சிக்கப்பட்ட இந்த மண்ணின் தலைவிதியை அழித்தெழுத மறந்து அன்னியதேச அடிமையானதற்காய் அழுகின்ற எனது வாழ்வு உனக்கில் லையல்லவா அதற்காய்ப் பெருமைப்படு....

குண்டு இங்கு விழுகிறதென ஊடகங்கள் உரைக்கையிலே உயிர் அங்கு அந்தரிக்க எத்தனை உயிர்கள் விலையானதோ எனத் துடிக்கும் அந்தரித்த வாழ்வு உனக்கு இல்லை அதற்காய் பெருமைப்படு.........



"எத்தினை வருசம் நீங்க வெளிநாடு போய்....?"

"பத்துவருசம்."

"ஆ.... பத்துவருசமா....?" ஆச்சரியத்துடன கேட்டான்.

"அப்ப அங்கையேதும் படிச்சனீங்களே...!"

"என்னத்தைப் படிச்சது. அங்கினை என்னைச் சமாளிக்கிற அளவுக்கு மொழியறிவு மட்டும் தான் இருக்கு. மற்றும்படி ஒரு மண்ணுமில்லை. எத்தினை படியா ஏறியிறங்கினன். ஆனா எனக்கு மேலாலை காசுதான் வந்து நிண்டுது. சரி பகுதிநேர வேலையொண்டைச் செய்து கொண்டு படிக்கலாமெண்டா வெளிநாட்டுக் காசில காலாட்டிச் சாப்பிட இஞ்சையிருக்கிற சொந்தங்களின்ர உயிரிலை கல்லு விழுந்திடு மெண்டு படிக்கவுமில்லை."

"அப்ப என்ன வேலை செய்யிறியள்....?"

"வேலையா... நம்ம தகுதிக்கு என்ன அரசாங்க உத்தியோகமே தருவாங்கள். கூட்டல், கழுவல் தான். பெரிசா கௌரவமான வேலையெண்டு ஒண்டுமில்லை."

"அவன் சிரித்துக் கொண்டு கேட்டான். அதென்னக்கா கூட்டல், கழுவல்...."

"இஞ்சை எங்கடை பெரிசுகள் அந்தச்சாதிக்கு அந்த வேலை. இந்தச் சீதிக்கு இந்த வேலை யெண்டல்லே முந்திப் போதிச்சு வைச்சிருந்தவை. அதுக்கெல்லாம் தண்டனையா இப்ப அங்க அந்த எசமான்களின்ரை வாரிசுகள் எல்லாத்தையும் செய்யிறம். வெள்ளைக்காரனுக்கு கழுவிக் கொண்டும், துடைச்சுக் கொண்டும் இருக்கிறம். நல்லாப் படிக்கிற பிள்ளையளுக்கே பெரியளவில் அதுகளுக்கேற்ற வேலையள் குறைவு. ஆனா எங்கடை பிள்ளையள் நல்ல கெட்டிக்காறராப் படிக்குதுகள். கனமுயற்சிக்குப் பிறகுதான் ஏதாவது அதுகளுக்கேற்ற மாதிரி வேலையள். அதுவும் தேடித்தான் எடுக்க வேணும்."

"அப்ப இஞ்சையிருக்கிற நாங்கள் ராஜா வாழ்க்கை வாழிறமெண்டு சொல்லுங்கோ....." அவனது சொந்த வாழ்க்கை பற்றிச் சொல்லத் தொடங்கினான்.

"அம்மா, அப்பா இல்லை. அண்ணாவும், தம்பியும் இயக்கத்திலையிருக்கினம். நானும் இயக்கத்திலையிருந்திட்டு இப்ப ஆறுமாதம் விலத்தி. இயக்கத்தை விட்ட பிறகுதான் இந்த வானை எடுத்தனான்."

"இந்த வாழ்க்கையா இயக்கத்தில இருந்த வாழ்க்கையா உங்களுக்கு நிறைவைத்தந்த வாழ்க்கை...." திடீரெனக் கேட்டுவிட்டேன்.

வார்த்தையில் எந்தப் பிசிறலோ, தளம்பலோ இன்றி அவன் சொன்னான்.

"அந்த வாழ்க்கை பெருமைக்குரிய வாழ்க்கை, நிறைவான வாழ்க்கை, பிறந்ததுக்கும் வாழ்ந்ததுக்கும் அர்த்தம் தாற வாழ்க்கையது" என்றான் கொஞ்சக் காலமாவது இந்த மண்ணின் விடியலுக்காகத் தன்னை அர்ப்பணித்திருக்கிறான் நான் இந்த மண்ணுக்காக எதையுமே செய்யாது விட்டேன் என்ற குற்ற உணர்வால் குறுகியது மனம்.

"இதிலை வாற வருமானம் நீங்க வாழுறதுக்குப் போதுமே....?"

"பறவாயில்லை. ஆனா சிலவேளை வாற வருமானத்தை வாகனத்துக்கு ஏதும் பிழை வந்து கொண்டு போடும். மற்றும்படி சமாளிக்கலாம்."

"உங்களுக்கு வெளி நாட்டாசை வரவில்லையே.....?"

சிரித்துவிட்டு சொன்னான்.

"இந்த மண்ணில கிடைக்கிற சுதந்திரமும், நிம்மதியும் எங்கையும் கிடைக்காதக்கா. ஒரு ஊரை விட்டு இன்னொரு ஊரில வந்திருக்கிறதே பெரிய வேதனயாக் கிடக்கு. இன்னொரு நாட்டிலை எப்பிடி நிம்மதியா வாழலாமக்கா....! ஒண்டும் வேண்டாம் ஏதோ வாழுறதுக்கு ஓரளவு வசதியிருந்தாப் போதும். இந்த மண்ணிலேயே வாழ்ந்து முடிச்சிடுவன்."

என்றான்.

புலத்தில் நாம் வாழுகின்ற அடிமை வாழ்வை விட இந்த வாழ்வு இனிதுதான். எனது மண்ணும் பெருமையடையும். இந்த மண்ணிலே வாழ்ந்து சாவதே மேலானது. சாவு நிகழ்ந்தால் கூட மனப்பாரத்தை அழுது தீர்க்கக் கூட அனுமதிதராத வெளிநாடு. குழந்தை சற்றுத் துள்ளி விளையாடக் கூட முடியாது. அப்படி விளையாடினால் கீழ் வீட்டுக்காரரோ அல்லது அயல் வீட்டுக்காரரோ சண்டைக்கு வந்துவிடுவார்கள். அல்லது காவற்துறைக்கு அறிவித்துவிடுவார்கள். பின்னர் வசதியான வீடுதேடி வீடுமாற்றம். அதுவும் சரிவராமல் தொடர்ந்து வீடு மாற்றமும், பயமும் நிறைந்த அச்சம் நிறைந்த வாழ்வும் அந்தரிப்புகளும் இல்லாத வாழ்க்கை இங்குதான் உண்டு.

அமைதியாய் நான் வன்னியின் அழகை ரசித்தபடி.... இடையிடையே ஒவ்வொரு இடத்தினையும் சொல்லி அந்த ஊர்களின் பெருமைகள் அன்னியப்படைகளின் ஆக்கிரமிப்பின் போது எப்படியெல்லாம் அவலப்பட்டது. ஓயாத அலைகள் பொங்கியெழுந்து இந்த மண்ணை மீட்டபின் எப்படியின்று இருக்கிறது. போன்ற விபரங்களையெல்லாம் சொல்லிக் கொண்டு வந்தான் அந்த வாகனச் சாரதி இளைஞன். எப்ப போய்ச் சேருவம்..... எப்ப போய்ச் சேருவம்... என அடிக்கடி அவனைக் கேட்கும் எனக்கு கெதியிலை.... கெதியிலை எனச் சொல்லிக் கொண்டு வந்தவன் இன்னும் இரண்டு மணித்தியாலத்தில் போய்விடலாம் என்றான்.


மண்ணெண்ணை ரேடிலும் அதன் வெக்கையும் வாந்தி வருவது போலிருந்தது. முகத்தை வெளியில் காற்றுப்படத் திரும்புகிறேன். இதமான காற்று முகத்தை மட்டுமல்ல மனசையும் தொட்டுச் சென்றது.

நேரம் இரவு 12.40 அது ஸ்கந்தபுரம் தொலைபேசிச்சேவை. தூங்கியிருப்பவர்களை எழுப்பி ஜேர்மனிக்கு தொடர்பெடுத்து நான் வன்னி வந்து சேர்ந்து விட்டதை தெரியப்படுத்திவிட்டு..... மல்லாவிக்கு பயணம் ஆரம்பமாகியது.

இரவு 1.27 பயணித்துக் கொண்டிருந்த வீதியின் குறுக்கே கற்களின் சிதறலும் தண்ணீரும் அந்த ஏற்றத்தின் மீது ஏறமுடியாமல் வான் நின்று விட்டது. பின்னால் நித்திரையாகியிருந்த உதவியாளனையும் அழைத்து வாகனத்தில் என்ன பிழை எனச் சோதித்தான் சாரதி. ஒற்றை ரோர்ச்லைட்டைத் தவிர அந்த வீதியில் வேறு எந்த வெளிச்சமும் இல்லை.

தொடரும்....

துன்பம் ஒரு சிறந்த பொற்களஞ்சியம் போன்றது, நண்பர்களுக்கு மட்டுமே காட்டக்கூடியது. - ஆபிரிக்கப் பழமொழி



## சிறுகதை



# வேப்பமரங்கள் சிரஞ்சீவிகள்

### சிவேந்திரன்

"இந்துப் பிரபஞ்சத்தின்ர உயிர் இனங்களில மனிதன்தானே சிறப்பு மிக்கவன். ஆனா... அவனுக்கிடையே இனம், மதம், சாதி, ஆண்பெண், போட்டி, பொறாமை, எண்ட பாசி ஏன் படருது? அறிவுத் தீயால் இவற்றை பொசுக்கேலாதோ? இல்லை இல்லை அன்பு எண்டகாட்டாறால இதுகளை அடித்துச் செல்ல ஏலாதா? என தனக்குள் வினாவை தொடுத்துக் கொண்டிருந்த சுனில் மேல, வேப்பங்காய் விழுந்ததும் நினைவுக்கு வந்தவனாய் மரத்தைப் பார்த்தான். இதில இருந்த மரக்கொத்திப் பறவை தன்ர அலகால அதின்ர பட்டைகளை கொத்தி அதுக்குள் இருந்த பூச்சிகளை சாப்பிட்டுக் கொண்டிருந்தது. அவனுக்கு வீட்டு ஞாபகம் அலை மோதத் தொடங்கிற்று.

"எங்கட வீட்டுக்கு முன்னால் இதப் போலத்தான் வேப்பமரம். அதில நானும் என்ர மூண்டு தங்கச்சிமாரும் ஊஞ்சலாடி விளையாடுவம். அம்மா அதுக்கு கீழே இருத்தி எங்களுக்கு சோறு குழைச்சு தருவா. ஒரு நாள் அதில இருந்து வட்டில் அப்பம் சாப்பிடேக்கதான் எங்கட அப்பாவுக்கு கருநாகம் தீண்டி அப்பாவும் எங்களை விட்டுப் போட்டார்.

அதில இருந்து எனக்கு வேப்பமரமெண்டா வேப்பங்காய் மாதிரிக் கைக்கும். அதுக்குப் பிறகு அந்த மரத்தடிக்கு நாங்கள் போறேல்ல. அம்மா கல்லுடைச்சுத்தான் எங்கள வளர்த்தவ. கஷ்டத்தால எங்கட மனமும் கல்லாய்ப் போச்சு. எங்கட கிராமத்தில வந்து ஆட்சேர்க்க நானும், பேர் குடுத்தன். அம்மாவும், தங்கச்சிமாரும் வேண்டாம் எண்டாங்கள். அன்பு, கருணை, சத்தியம் எண்டெல்லாம் சொல்லி என்ன தடுத்தாங்க. ஆனால், வறுமையை என்னால தடுக்கேலாம போட்டுது.... வேப்பமர சுள்ளி காலில் பட்டதும் சுள்ளென நினைவை கலைத்தவனாய் மரத்தை நோக்கினான்.

இந்த மரம் எவ்வளவு அழகாய் வளர்ந்து கிளை பரப்பி இலைகளால் குடையாகி குடைக்கு மணி வைத்தது போல் காய்கள் தொங்கிக்கொண்டு இருக்கு.. இனிமையான தென்றல் தாலாட்டுது. இதுன்ர இலை, பூ, காய், கனி, விதை, பட்டை, குச்சி, வேர் எண்டு இதில எத்தனை பயன்களை மனுசன் பெறுறான். இதுன்ர பட்டேக்க மரக்கொத்திக்கு உணவு வைச்சிருக்குது ... அண்டைக்கு வெறுத்த வேப்ப மரத்தில இண்டைக்கு நேசமாயிருக்கு. எங்கட ஆட்களுக்கு இவங்களை பாத்தா வேப்பமரமாய் தெரியுது. ஆனா.... இந்த வேப்பமரம் மாதிரி இவங்கள் அவங்கட மக்களுக்கு பயன் குடுக்கிறாங்கள் எண்டது ஆருக்குத் தெரியும்? வேப்பமரத்தின்ர மருத்துவ குணம் சித்த வைத்தியர்களுக்குத்தான் தெரியும். காலம் காலமாய் புரையோடிப் போயுள்ள நோய்களையும் மாற்றும் சிரஞ்சீவி. இவர்களை நான் ஆழமாக நேசிக்கின்றேன். ஆத்மார்த்தமாய் இவங்கட கொள்கைகளை ஆராதிக்கின்றேன். வறுமைதான் என்னை இவங்களுக்கு எதிராக செயற்பட வைச்சுது. செய்யிற தொழில் விசுவாசமாயிருக்க வேணும் எண்ட என்ர குட்டி இலட்சியத்தால சில இடங்களில மோசமாய் நடந்திருக்கிறன். இவங்களை கிட்ட வந்து பாக்கேக்கதான் இவங்கட மென்மையான உள்ளத்தை உணரக்கூடியதாக இருக்கு. தேமா மலர்கள் போல இவங்கட மனசு வெள்ளையாய் இருக்கு. இவங்கள் கடமையை உணர்ந்து ஆன்ம விழிப்போட செயற்படுறாங்கள். மனுசன மனுசனாய் மதிக்கிறாங்கள். இவங்கள் வெற்றி பெறுவாங்கள். புத்தா, உன்ர பஞ்சசீல கோட்பாட்டை நாங்கள் இல்ல, இவங்கதான் கடைப்பிடிக்கிறாங்கள். இவங்கள் நல்ல மாதிரி வாழணும்....."என்ன ராஜபக்ஷ



யோசனை பலமாப் போகுது."

"உங்களை எல்லாம் என்னெண்டு விட்டுட்டுப் போறது?"

"நல்ல கதை விடாதயுங்கோ"

"இல்ல, மல்லி, உண்மையைத்தான் சொல்லுறன்"

"கெதியாய் போய் அம்மாவை பாருங்கோ"

"அதுக்காகத்தான் காத்திருந்தனான். அம்மாவைப் போல அன்பாய், அக்கறையாய் எங்களைப் பாத்திங்கள். அது மட்டும் இல்ல, எங்களுக்கு புக்ஸ், பேப்பர், ரேடியோ எல்லாம் தந்திங்க. அதைவிட எங்களுக்கு வேலை வாய்ப்பு தந்து அதில வருர காசை எங்கட பேருக்கு வாங்கில போட்டிங்கள். வீட்டுக்காரருக்கு கடிதம் போட ஒழுங்கு செய்திங்கள். ரெட்குரஸ் காறருக்கு ஒரு மாதத்துக்கு ஒருக்காவந்து பார்க்க அனுமதிச்சிங்கள். அப்பப்பா சொல்லவே வேணும் உங்கட அரவணைப்பை.

"ராஜபக்ஷ, நாங்களும் மனிதர் நீங்களும் மனிதர்"

"அது உண்மை தான் மல்லி, இஞ்ச வந்து மனுசன் எண்டா எப்படி வாழவேணும் எண்டத விளங்கிக் கொண்டன்.

"பிறகு"

"உங்கட பேரை தெளிவாய் புரிஞ்சிட்டன்"

"வேற"

"நல்லா தமிழ் கற்றுட்டன்"

"நானும் சிங்களம் படிச்சிட்டன்"

"நாங்க எல்லாம் ஒரு நாட்டு மக்கள் மல்லி."

"ராஜபக்ஷ. பேந்தும் பிழை விடுகிறியள்"

"ஏன் மல்லி"

"நாங்கள் ஒரு தீவு மக்கள்"

"மல்லி, இனி நாம எங்க சந்திக்கிறது."

"சண்டேல"

"ஆ....மல்லி என்ன வார்த்தை சொல்லிட்டிங்கள். இனி நாம் எப்பவும் சமாதானம் தான்"

"சும்மா சொல்லிப் பாத்தனான்"

"மல்லி, உங்களுக்கு சண்டை பிடிக்குமா?"

"சண்டைக்களம் பிடிச்சமான இடம். ஏனெண்டா சண்டேல்ல நிற்கேக்க சண்டையைப் பற்றி மட்டுமே மனம் செல்லும். மனம் ஒரு நிலையில் இருக்கும். அதுக்காக மனம் . இப்ப அலைபாயுதெண்டு நினைச்சிடாதேங்கோ. நாங்கள் போர் பிரியர்கள் எண்டு நினைக்காதையுங்கோ. எங்கட மக்களுக்கு அமைதியான வாழ்க்கை கிடைக்க வேணும் எண்டதுக்காகத்தான் சண்டை பிடிச்சம்."

"எப்பவோ எல்லாத்தையும் விளங்கிற்றன் மல்லி"


" வேந்தன், உங்க என்ன செய்து கொண்டு நிற்கிறாய்?"

"வா திருவருள், ராஜபக்ஷவோட கதைக்கிறன்."

"ஏன்ராப்பா சுனில் ராஜபக்ஷ எண்டு சொல்லுறனி?"

"நான் இந்த பேசுக்கு வந்த அண்டுதான் கிருசாந்தி கொலை வழக்கில ராஜபக்ஷ எண்ட சிப்பாயின் பெயர் வெளிவந்தது. அப்ப சுனில் அந்த வேப்ப மரத்துக்கு கீழ நித்திர. போய்க் கூப்பிட்டன் ஆள் எழும்பேல. ராஜபக்ஷ எண்டு கூப்பிட்டன். ஆள் முழிச்சிட்டார். அண்டேல இருந்து ராஜபக்ஷ என்று கூப்பிடுகிறனான்.

"திருவருள் மல்லி எனக்கு வேற ஆரும் கூப்பிட்டா பிடிக்காது. வேந்தன் மல்லி கூப்பிட்டா பிடிக்கும்."



"ராஜபக்ஷ ஐஸ் வைக்காதையுங்கோ."

"திருவருள் மல்லி, வேந்தன் மல்லியேன் என்னோட எப்பவும் பகுடிக்கு கொழுவிக் கொண்டே இருப்பார். எனக்கு வேந்தன் மல்லிய நிறையப் பிடிக்கும்."

"சரி ராஜபக்ஷ, எல்லாரையும் கூட்டிக் கொண்டு வாங்கோ

> "எங்கட வீட்டுக்கு முன்னால் இதப் போலத்தான் வேப்பமரம். அதில நானும் என்ர மூண்டு தங்கச்சிமாரும் ஊஞ்சலாடி விளையாடுவம். அம்மா அதுக்கு கீழே இருத்தி எங்களுக்கு சோறு குழைச்சு தருவா. ஒரு நாள் அதில இருந்து வட்டில் அப்பம் சாப்பிடேக்கதான் எங்கட அப்பாவுக்கு கருநாகம் தீண்டி அப்பாவும் எங்களை விட்டுப் போட்டார். அதில இருந்து எனக்கு வேப்பமரமெண்டா வேப்பங்காய் மாதிரிக்கைக்கும். அதுக்குப் பிறகு அந்த மரத்தடிக்கு நாங்கள் போறேல்ல...."

சாப்பிடுவம்."

'மல்லி, இண்டைக்குத்தான் நாம கடைசியாய் எல்லோரும் சேந்து சாப்பிடப் போறம்..."

"ராஜபக்ஷ ஏன் அழுறீங்கள்?"

"மல்லி, நாங்க எங்கையோ பிறந்து, வளர்ந்து, சந்திச்சுபிரியப் போறம். சண்டேல செத்திருந்தா உங்கட அன்பையும், உங்கட தார்மீக போராட்டத்தையும் புரிஞ்சிருக்க மாட்டன். உங்களைப் பற்றி தெரியாமல் பல பேர் செத்திட்டாங்கள். பொப் மலர்களை அவர்களுக்கு சாத்திரதைத் தவிர எங்களால் என்ன செய்ய முடியும்? எங்கட திருவருள் மல்லி மாதிரி எத்தனை பேர் எங்கட ஆக்களும் கால் இல்லாமல் இருக்கிறாங்கள். எவ்வளவோ ஏலாத காயங்களோட இருக்கிறாங்கள். அது போலத்தான் உங்கட ஆக்களும்இருக்கிறாங்கள். இனியாவது சந்தோசமா இருப்பம். போரில் இழந்த உயிர்களையும், இழந்த அவயவங்களையும் யாராலதான் திருப்பித் தர ஏலும்..?"

"ராஜபக்ஷ எல்லாம் காலத்தின்ர கோலம். உணர்ச்சி வசப்படாம சாப்பிடுங்கோ."

"மல்லி உணர்ச்சி வசப்படேல்ல, உண்மையைத் தான் சொல்லுறன்."

"அதுசரி சாப்பிடுங்கோ"

"மல்லி, நீங்க எங்களை சாப்பிடுங்கோ சாப்பிடுங்கோ எண்டு உபசரிக்கிறிங்கள். உங்கட மக்கள் எத்தனை பேர் பிடிபட்டிருக்கிறாங்கள். அவங்களுக்கு ஒரு நேரச் சாப்பாடு கூட ஒழுங்காய் கிடைக்குமோ தெரியாது."

"பிரச்சினை இல்ல. அங்கேயும் நல்லாத்தான் கவனிக்கிறாங்கள்."

"மல்லி, கவனிப்பாங்கள். ஆனா... இதய சுத்தியோட அன்பா உங்கள மாதிரி பார்க்க மாட்டாங்கள்."

"ராஜபக்ஷ, கை காயப்போகுது கழுவுங்கோ."

"மல்லி, உங்கட முருக்கங்காய் கறியோட இன்னும் கொஞ்சம் சாப்பிடப் போறன். இனி எப்பதான் இப்பிடிச் சாப்பிடப் போறனோ?"

"பட்சா நீங்கள் செய்த வேப்பம் பூ வடகத்தையும் எடுத்து சாப்பிடுங்கோ."

"திருவருள், எனக்கு தரேல சொடுகு எண்டு ராஜபக்ஷ வேப்பம் பூ போட்டு எண்ணெய் காச்சி வைச்சிருக்கிறார். உனக்கு தெரியும்தானே? எனக்கு எண்ணெய் வைக்கிறது பிடிக்காது எண்டு. ஆனா....ராஜபக்ஷ நான் வேப்ப மரத்துக்குக் கீழே இருந்து பேப்பர் வாசிக்கேக்க பின்னால பூனை போல வந்து எண்ணெய் வைச்சிடுவார்."

"அதுதான் வேந்தன் உன்ர தலைமுடி வடிவாய் வருது. உன்ர கூந்தலின்ர ரகசியத்தை கேக்க எண்டு நினைக்க, நீயே சொல்லிப் போட்டாய்."

"போடா, நல்ல காலம் என்னட்டக் கேட்டா. வேறை ஆருட்டையும் கேட்டு இருந்தால் வேண்டிக் கட்டியிருப்பாய்."

"ராஜபக்ஷ புழுக்கொடி சாப்பிடுங்கோவன்."

"உங்கட உபசரிப்புகள என்ர உயிர் இருக்கும் மட்டும் மறக்க மாட்டன்."

"ராஜபக்ஷ உங்கட மக்களுக்கு எங்களப் பற்றி சொல்லுங்கோ."

"நிச்சயம் சொல்லுவன்."


"வேந்தன், வாகனம் வரும் சத்தம் கேக்குது."

"ராஜபக்ஷ போறத்துக்கு வெளிக்கிடுங்கோ."

ஒரு முறையாவது வாய்விட்டு மனமாரச் சிரித்தவன், திருந்த முடியாத அளவுக்கு கெட்டவனாக இருக்கமாட்டான. - தாமஸ்கார்லைன்

# குட்டிக்கதைகள் மூன்று

**நடுச்சாமம்** நுளம்பின் தொல்லை அதிகமாகியது அவன் படுக்கையில் புரண்டுகொண்டிருந்தான். தூக்கம் கலைந்திருந்தது. ஏதோ நினைத்தவனாய் போர்வையை விலக்கிக் கொண்டு எழுந்திருந்தான், கண்களைக் கசக்கிக் கொண்டான்.



திரி கருகி ஒளி மங்கிய நிலையில் எரிந்துகொண்டிருந்த மேசை விளக்கைத் தூண்டினான். அறை எங்கும் வெளிச்சம் பிரகாசமாகத் தெரிந்தது. சிறிது

## நான் உனக்காகவே

நேரந்தான் அது மீண்டும் மங்கத் தொடங்கியது.

கருகிக் கிடந்த நாடாவின் மேற்பகுதியை வெட்டித் தள்ளினான். மீண்டும் தூண்டினான் சிறிது நேரம் பிரகாசமாய் இருந்தது. மீண்டும் அவன் கத்தரிக்கோலை எடுத்து வெட்ட ஆயத்தமானான்.

நாடா வேதனையுடன் கேட்டது.

தம்பி இந்த வீட்டின் இருளைப் போக்க விடிய விடிய எரிகிறேன். என்னை வெட்டலாமா?

அவனுக்கு ஆத்திரம் வந்தது.

"ஒழுங்காய் எரிந்தால் நான் ஏன் வெட்டிறன்" என்றான்.

என்னை நீ வெட்டி வெட்டி அழித்து விட்டாய்.

எண்ணெய் உறிஞ்சும் அளவு இருந்த நான் குறைந்து போனேன். என்றது திரிநாடா.

அப்படியா?

அவன் நாடாவைக் கழற்றி நெருப்பை மூட்டிவிட்டு எறிந்தான். நாடா பிரகாசமாக எரிந்தது.

ஒளி மங்கி மீண்டும் இருள் சூழ்ந்து கொண்டது.

உனக்காகவே நான் எரிந்து சாம்பலாகிறேன்.

"பாவத்துக்கு உழுகிற பண்ணியை பல்லுக்கு இதமாய்ப் பார்கிறாய்"

சாம்பல் காற்றோடு கரைந்து போனது.

♥ ♥ ♥

**இராமசாமி** அந்தச் செருப்பை றப்புக்குள் செருகி வைத்திருந்தான். அதை எறிந்துவிட அவனுக்கு மனம் ஒருப்படவில்லை.

## அவனது செருப்பு...!



இரண்டு ஆண்டுகளுக்கு மேலாக அந்தச் செருப்பு அவனைத் தாங்கி நின்றது.

வயல் காடுகளிலும், முட்செடிகளிலிருந்தும் அவனது பாதங்களுக்கு ஊறு நேராமல் பாதுகாத்தது. தற்போது குதிக்கால் பக்கம் மென் தோலாகி செயலற்றுக் கிடந்தது.

அவன் நீண்ட பெருமூச்சு விட்டான். அவனுக்குத் தலை சுற்றுவது போல் இருந்தது. முகட்டுக் கப்பில் முதுகைச் சாய்த்தபடி சிந்தனையில் ஆழ்ந்தான். சளி முட்டி மூச்சு வாங்கியது.

எத்தனை ஆண்டுகளாக மாடாக உழைத்தவன் இரவு பகலாக வயல் வரம்புகளிலும் பனிப்புல் வழுக்கல்களிலும் விழுந்தும் எழுந்தும், எருவை அளைந்து பிசைந்து விசிறி, உழுது விதைத்தும் மருந்துக் கருவிகளைத் தோளில் சுமந்து கிருமி நாசினிகளைத் தெளித்தும், அறுவடை செய்து மூடை மூடையாக அள்ளிக்குவித்து மாடு ஆடுகளைப் பராமரித்து அவன் செய்த வேலைகள்......

இரத்தத் துடிப்பிருந்த போது அவனுக்கு மதிப்பிருந்தது. இப்போ முன்போல அவனால் தொழில் செய்ய முடியாமல் முதுமை சுமையாகி கண்கள் பார்வை குறைந்து முடங்கிப் போனான்.

உறவுகள் இல்லாத அந்த மனிதன் உயிர்வாழ உணவுக்காக உழைத்தான்.

இராமசாமியின் கண்கள் மங்கலடையத் தொடங்கின. அவன் பட்டினியாய்க் கிடந்தான். அவனது கைகள் பரயத்தனப்பட்டுச் செருப்பை எடுத்து கைகளில் இறுகப் பற்றிக் கொண்டான்.

"உன்னைத் தூக்கி, வீச என்னால் முடியாது. நீ எனக்காக உழைத்தவன்."

இறுதியாகத் தன் முதலாளியையும் நினைத்துக் கொண்டான். அவன் தலை சாய்ந்து கொண்டிருந்தது.

அவன் உடல்அமைதி அடைந்தது.

♥ ♥ ♥

**பாட்டிக்கு** முதுகு கூனல் விழுந்திருந்தாலும் கண்கள் கூர்மையாகத்தான் இருந்தன. காலையில் எழும்பித் தன் தோட்டத்தைச் சுற்றிப் பார்ப்பதும், விழுந்து கிடக்கும் மாங்காய்களை பொறுக்கி எடுத்து எப்படியாவது விற்று கொஞ்சம் காசு என்றாலும் சேர்த்து விடுவாள்.



மாங்காயால்தான் சீவியம் நடக்கிதென்று சொல்ல முடியாது. பிள்ளைகள்வெளிநாட்டில் இருந்து அனுப்புகிற பணம் போதும் காலை நீட்டிக்கொண்டிருந்து சாப்பிடலாம்.

## இனிப் போராட்டம் தான்

அந்த வளவில் பத்து மரங்களுக்கு மேல் நின்றன. ஒவ்வொன்றும் இலை தெரியாத காய்கள் பல்வேறு இன மரங்கள்.

அங்கு வேலை செய்ய வருவோர் கூட ஒரு காயையோ பழத்தையோ சாப்பிட மாட்டார்கள். விரும்பினால் அவர்களும் காசு கொடுத்து வாங்குவார்கள்.

நான் கருமி இல்லை ஆனால்

"இது நான் பாடுபட்டு வளர்த்தவை. எனது உழைப்பு அதை முழுமையாக பெற வேணும்"

அவள் பெருமிதப்படுவாள். ஒரு நாள்அவள் தூக்கத்தில் ஆழ்ந்து போனாள்.

எதிர்பாராத விதமாக அந்த மரங்களை வெளவால்கள் ஆக்கிரமித்துக் கொண்டன.

காலையில் எழுந்து பார்த்தாள், பாட்டிக்கு நெஞ்சுக்குள் ஏதோ செய்வது போல் இருந்தது. தலையில் கையை வைத்துக் கொண்டு அப்படியே அமர்ந்து விட்டாள். ஏராளமான மாங்காய்கள் நிலத்தில் கிடந்தன.

இந்த ஆக்கிரமிப்பாளரை விரட்ட அவள் இனிப் போராட வேண்டியிருந்தது.

இல்லை என்றால் அழிவுதான். அவள் தன் உழைப்பைப் பெறமுடியாது.

அவள் தன் உழைப்பை முழுமையாகப் பெற யுத்திகளை அமைத்துக் கொண்டாள். போராட்டம் ஆரம்பமானது.

முருகு. பாரிமகன்.

# மறக்கப்பட்டவர்கள்

கட்டையில் ஏற்றியபடி உம்மைக்
கண்டபிறகு கனக்குது மனசு.
கழிக்கப்பட்டாலும் கறலேறிக்கெட்டாலும்
எம்மிதயங்களில் உமக்கு கடவுள்தானம்.

இப்போது பார்க்கிறோம்.
புத்தம்புது வீதியில் புத்தம்புதிதாய் ஊர்திகள்
இவற்றிடை நீர்திரிந்தாலும்
ஏளனப்பேச்சுக்கள், கீழ்த்தரக்கிண்டல்கள்.
ஆனாலும்
புத்தம் புதியவற்றால் எப்போதும் முடியாது.
உமைப்போல் தியாகமும் அர்ப்பணிப்புமான
தீரச்செயல்களைச் செய்ய.

கனத்த களங்களில்
குண்டுமழை நடுவால் எம்
உயிர் மீட்டதை:
உயிர்குடிக்கும் பறவைகளின் விரட்டல்களில் தப்பி
விழுப்புண் வீரரைக் காத்ததை:
சமர் நன்றாய் நடக்க
சீரான விநியோகம் செய்ததை:
எப்படி மறப்பது?
குண்டும் குழியுமான கொடிய பாதைகளில்
குலுக்கலில் உயிர் வேகும் இருந்தும்
உம்மால் உயிர் மீளும்.
வீழ்ந்த வீரரின் வித்துடல் தாங்கினீர்.
இதை விடவா உமக்குப் பெருமை வேண்டும்?

எம் மக்களைக் காவினீர்:
நியமக்கொள்ளளவின் இருமடங்காய்.
எம் இருண்ட காலங்களிலெல்லாம்
இரத்தமும் சதையுமாய் எம்முடன் ஒட்டியவர்களே
இத்தனையும் நீர் செய்தது
எரிபொருளும் உதிரிகளும் இல்லாக்காலங்களில்,
எங்கள் வெற்றிகளின் பின்னால்,
எங்கள் தியாகங்களின் பின்னால்,
இன்றுவரையான எங்கள் வாழ்வின் பின்னால்
உங்களதும் உம்மைச் செலுத்தியவரதும் உழைப்புக்கள்.
உங்களில் எத்தனை பேர்
கடமையில் காவியமானவர்?
அதல பாதாளத்தினின்று சிகரமேறும்
வன்னியின் குறியீடுகள் நீங்கள்.
உங்களால் காக்கப்பட்ட உயிர்களால் தானே
இன்று எல்லாமே.

நான் மடிந்தால் ஓராசை.
முன்னரென்னைக் காத்த உங்களில் ஒருவனில்தான்
விதைகுழி வரை நான் செல்ல வேண்டும்.


ஆ.ரகுபதி.

# நிர்ப்பந்தம்

அலைகிறது மனசு
அப்பிடியே ஸ்தம்பித்துப்போன
வாழ்வின் நினைவெழுந்து
மனவெளியெங்கும்
அலைகிறது- நிலவின்
பின்னழகு போலவே
நிதர்சனங்களும்
விழிகளுக்குத் தெரியாமல்
முகங்களின் கொந்தழிப்பில்
மூடிவைக்கப்படுகிற மனசுகள்
நானும் நீயும்
திறந்த மனசோடு
காற்றைப் போல்
எங்கும் நுழைவோம்
எனக்கு நானும்
உனக்கு நீயும் - எல்லைகள்
வகுத்துக்கொண்டு
வறண்டு போகாமல்
எனக்கு உன்னையும்
உனக்கு என்னையும்
முழுவதும் காட்டுகிறவரை
இருட்டுக்குள் இருக்கிற
எம் வாழ்க்கை
இருட்டுக்குள்ளேயே
இருக்க நிர்ப்பந்திக்கப்
படுவதாய்....

த.அகிலன்

எவரையும் அடக்கி ஆளாமலும், எவராலும் அடக்கி ஆளப்படாமலும் இருப்பவனே உண்மையில் சிறந்த மனிதன். - கலீப் கிரான்



# இளையநாதம்

## குட்டிக்கதை

## சுண்டெலிக்குப்போதனை

ஒரு சுண்டெலி முற்றத்திற்கு விளையாடச் சென்றது. சுற்றிலும் போய் விட்டுத் திரும்பி தன் அம்மாவிடம் வந்து சொன்னது.

அம்மா நான் இரண்டு விலங்குகளைப் பார்த்தேன். ஒன்று பயங்கரமாகவும் மற்றது நல்லவனாகவும் இருந்தன.

அவை எந்த மிருகங்களைப் போல இருந்தன என்று சொல்லு என்றது அம்மா.

ஒன்று பயங்கரமாக இருந்தது. கர்வமாக முற்றத்தில் திரிந்தது.



எனச் சுண்டெலி சொன்னது. அது கறுப்புக் கால்களும் சிவப்புக் கொண்டையும் பிதுங்கிய



விழிகளும் வளைந்த மூக்கும் கொண்டது. நான் அதன் பக்கமாக வந்தபோது அது தன் அலகை திறந்து காலை உயர்த்திப் பெரிதாக சத்தமிட்டபடி திமிருடன் என்னை கொத்த வந்தது. நான் பயந்து எங்கு போவது என்று தெரியாமல் இருந்தேன்.

அது சேவல் தான் என்றது முதிர்ந்த சுண்டெலி அம்மா. சேவல் யாருக்கும் தீங்கு செய்வதில்லை. அதுக்கு நீ பயப்படாதே. சரி மற்ற மிருகம் எப்படிப்பட்டது.

மற்றது படுத்து வெயில் காய்ந்து கொண்டிருந்தது. அதன் கழுத்து வெள்ளையாயும் கால்கள் மழமழப்பான சாம்பல் நிறத்திலும் இருக்கின்றன. அது நாக்கினால் நெஞ்சைத் தடவி விட்டும் வாலை



ஆட்டிக்கொண்டும் என்னைப் பார்த்தது.

சுண்டெலி அம்மா சொன்னது அட அசடே அது வெறும் பூனைதான் ஆனால் எம் உயிரைக் கொன்றுவிடும்.

K.சிந்துவன்
தம்பிராய்பூநகரி.

## இவர்

பெயர்: தோமஸ் அல்வா எடிசன்
பிறப்பு :11-02-1847
பி.இடம்: மிலான் அமெரிக்கா
இறப்பு: 18-10-1931
கண்டுபிடிப்பு: மின்குமிழ், மின்சார ரயில்ப் பாதை, அசையும் படம்.



## வாரம் ஒரு குறள் அறிவோம்



இளைவர்களாகிய நாம் பெரியவர்களை மதித்து நடப்பது நல்லது. அவர்களின் அறிவுரைகளைக் கொண்டு நாம் நடப்போமாகில் எந்நாளும் சிறப்புடையோராக வாழ முடியும்.

அந்தப் பெரியவர்களின் அறிவுரைகளை மதியாது எம் எண்ணத்தில் செயற்படுவோமாகில் சொல்ல முடியாத தீய பயனை அனுபவிக்க நேர்ந்து விடும். ஆகவே பெரியவரை மதித்து அவர்கள் வழி செல்வோமாக இருந்தால் எந்நாளும் சிறப்பே என்று வள்ளுவனார் தன் குறள் மூலம் இவ்வாறு சொல்கிறார்.

"பெரியாரைப்பேணாது ஒழுகின் பெரியாரால்
பேரா இடும்பை தரும்"

## உலகை வென்றுவிடு



பாப்பா பாப்பா கதை கேளு
குறும்புப் பருவக் கதைகேளு
அமுதச் சுவைகள் சேர்த்து
குழந்தை மழலை சிந்தவே
கூறும் கதையை நீகேளு




பள்ளிக் கூடத்தில் இனிமையாய்
பாடம் அனைத்தும் செந்தமிழாய்
தமிழன் மகவே கல்வியை
கருத்துச் சிந்தி கற்றிடு

நன்மை தினமும் செய்துமே
தீமை அழிய பாடு பட்டு
பொறுமை நித்தம் காத்து
உலகை நீயும் வென்றுவிடு



ந.இந்துஜா
கிளி/பிரமந்தனாறு
மகாவித்தியாலயம்



## நகைச்சுவை

ஒருவர்:
ஏனப்பா இப்படி அடிக்கடி தப்புப்பண்ணிட்டு ஜெயிலுக்கு வாறாய் உனக்கு சொந்தம் பந்தம் எதுவும் இல்லையா உன் அப்பா அம்மா அண்ணா தம்பிகள் கூட சேர்ந்து வாழ ஆசை இல்லையா அப்படிக் கேட்டேன்

மற்றவர்:
அவர்களோட சேர்ந்து வாழணும் என்று ஆசை எனக்கு நிறைய உண்டு சார்.

ஒருவர்:
அப்புறம் எதுக்கு இப்படி ஜெயிலுக்கு வாறாய் என்றேன்.

மற்றவர்:
அவங்க எல்லாரும் இங்கே தானே சார் இருக்கிறாங்க என்றான்.

கி. சந்திரன்.

## கைவண்ணம்



த.தலைக்ஷி
தரம்-7A
கிளி/வ.ம.வி

## உங்களுக்குத் தெரியுமா?

ஓடும் புகைவண்டியில் விளக்கைச் சுற்றிக்கொண்டிருக்கும் ஈக்கள் தொடர்ந்து புகை வண்டியுடன் பயணம் செய்வது எப்படி?

புகைவண்டியில் பயணம் செய்வோரின் வேகமே ஈக்கும் உண்டு. நம்மைப் போல் ரயில் பெட்டியில் பயணம் செய்யும் ஈ சும்மா உட்கார்ந்திருந்தாலும் நடந்தாலும், பறந்தாலும் அதன் வேகம் புகைவண்டியின் வேகத்திற்குச் சமம். அதனால் தான் அது தொடர்ந்து புகைவண்டியுடன் பயணம் செய்ய முடிகிறது. அவ்வாறு இல்லாவிட்டால் அது ரயில் பெட்டியின் சுவரில் மோதி அகால மரணம் அடைந்து விடும். ஆனால் அப்படி நேர்வதில்லை.

## கண்டுபிடிப்புகள்

I. நுணுக்குக்காட்டி -1590ம் ஆண்டு ஜான்சன் என்பவரால் ஒல்லாந்து நாட்டில் கண்டுபிடிக்கப்பட்டது.

II. மடக்கை - 1614இல் ஜோன் நெ.பியர் என்பவரால் ஸ்கொட்லாந்து நாட்டில் கண்டுபிடிக்கப்பட்டது.

III. ஒளிப்படவியல்-[பேப்பர்] 1835 இல் இங்கிலாந்து நாட்டில் W.H. பொக்ஸ்ரல் போட் என்பவரால் கண்டுபிடிக்கப்பட்டது.

IV. X-கதிர் [X-RAY]-1895 இல் வில்ஹேம்ரன்ட்கன் என்பவரால் ஜேர்மனி நாட்டில் கண்டுபிடிக்கப்பட்டது.

V.பலூன் - 1907 இல் ஜே.செப்பவுன்ற்கோல்பயா என்பவரால் ஸ்பெயின் நாட்டில் கண்டுபிடிக்கப்பட்டது.

கி.சுதாஷினி
வள்ளிபுனம்.

## நாடுகளும் அவற்றின் பணமும்

| | |
|---|---|
| இலங்கை | ரூபாய் |
| இந்தியா | இந்தியரூபாய் |
| இஸ்ரேல் | சேகீல் |
| இத்தாலி | லிரா |
| இந்தோனிஷியா | ருபியா |
| இங்கிலாந்து | பவுண்டர்லிங் |
| ஈரான் | ரியால் |
| ஈராக் | தினார் |
| உகாண்டா | உகாண்டா |
| உருகுவே | நியுவோபீசோ |

ஞா.அணலரசன்
கிளிநொச்சி.

## குறுக்கெழுத்துப் போட்டி 02

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 01 | | 03 | | 05 | 06 |
| | | | | 11 | |
| 13 | | | | | |
| | | | | | 24 |
| 25 | 26 | | | 29 | |
| 31 | | | | 35 | |

**இடமிருந்து வலம்**

01. தமிழீழத்திலுள்ள இயற்கைத் துறைமுகம். தமிழீழத்தின் தலைநகரும் இதுவே.
11. நீங்கள் படிக்கும் 'தரம்' என்பதன் ஒத்தசொல். இறுதி இரு எழுத்துக்களும் விடுபட்டுத் திரும்பியுள்ளது.
13. வடமராட்சிப்பகுதியிலுள்ள ஒரு இடம். அண்மையில் இங்கு ஈ.பி.டி.பியை வெளியேறக்கோரி நடைபெற்ற போராட்டத்தின் மீது பொலிசார் துப்பாக்கிச் சூடு நடத்தினர்.
25. வரிகளையுடைய ஒரு வகைப்புலியினம். இறுதியெழுத்தின் ஒரு பகுதியை இழந்துள்ளது.
29. முட்டையினுள்ளே இருப்பது திரும்பியுள்ளது.
31. முதலையின் தம்பி.வீட்டில் வாழும் இது குழம்பியுள்ளது.
35. ஒருவர் இறந்த தினத்தை இவ்வாறும் அழைப்பர்.

**மேலிருந்து கீழ்**

01. யாழ். பல்கலைக்கழகம் இங்கேதான் அமைந்துள்ளது.
03. தமிழீழத்தின் முதலாவது மாவீரர் துயிலுமில்லம் இங்கேதான் உள்ளது.
மணலாற்றுப்பகுதியில் இப்பெயரில் ஆறு ஒன்றும் ஓடுகின்றது. (இறுதி எழுத்து விடுபட்டுள்ளது)
05. பாம்பாட்டியிடம் உள்ள இசைக்கருவி.
06. மீன்பிடிக்கப்பயன்படும் இது தலைகீழாக உள்ளது.
24. இடம்பெயர்ந்து போக்கிடம் இன்றி இருப்பவர்களை இப்படி அழைப்பர்.
26. பகுதி, பாகம் எனப்பொருள்படும் சொல் இறுதி எழுத்து விடுபட்டுத் தலைகீழாக உள்ளது.
29. செல்வம் தலைகீழாக உள்ளது.

இளையவர்களே!

கட்டங்களை தாள் ஒன்றில் வரைந்து சரியான சொற்களை இட்டு நிரப்பி அனுப்புங்கள்.

குறுக்கெழுத்துப்போட்டி இல.2
வெள்ளிநாதம்
ஈழநாதம்.
முதன்மைச்சாலை,
கிளிநொச்சி.

போட்டியில் பூரணமாக விடைகளை நிரப்பியவர்கள் பெயர் இளையநாதத்தில் பிரசுரிக்கப்படும். உங்கள் பெயர் விபரங்களைத் தெளிவாகக் குறிப்பிடவும்.

சுதந்திரத்தைச் சொந்தமாக்கி அனுபவிக்க வேண்டுமானால், அதைக் கட்டுப் படுத்தியாக வேண்டும். - எட்மண்ட் பார்க்




# எல்லாளனை ஆக்கிரமிப்பாளனாகச் சித்தரிக்கும் மகாவம்சம்

முல்லைமணி

**அநுராதபுரத்தில் இருந்து ஆட்சிபுரிந்த சிங்கள மன்னர்கள் இந்த நாட்டுக்குரியவர்கள் என்றும் தமிழ் மன்னர்கள் தென்னிந்தியாவிலிருந்து வந்தவர்களாக, படையெடுப்பாளர்களாக அவ்வப்போது ஆட்சியைக் கைப்பற்றிய அந்நிய ஆக்கிரமிப்பாளராகவும் மகாவம்சம் சித்தரிக்கிறது.**

**கிறிஸ்துவுக்கு முற்பட்ட காலந்தொட்டே இலங்கையில் தமிழர்கள் வாழ்ந்து வந்ததற்கும் தமிழ்ச் சிற்றரசுகள் இருந்ததற்கும் கல்வெட்டுச் சான்றுண்டு.**

**இலங்கையில** தொல்லியல், மானிடவியல், சமூகவியல் என்னும் துறைகள் விருத்தியடையாத நிலையில் மகாவம்சம், சூளவம்சம் முதலான பாளி நூல்கள் கூறும் வரலாறே இலங்கையின் வரலாறு என நம்பப்பட்டது. மகாவிகாரையில் இருந்து பௌத்த மதத்தைப் போதித்த மகாநாம தேரரின் முக்கிய நோக்கங்களை இனங்கண்டு கொண்டால் மகாவம்சம் நடுநிலையில் நின்று இலங்கை வரலாற்றைத் தரும் நூலாகாது என்பது தெளிவாகும். அவர் நூலை இயற்றியதன் நோக்கத்தைப் பின்வருமாறு வகைப்படுத்தலாம்.

I தேரவாத பௌத்தத்திற்குத் தொண்டாற்றிய சிங்கள மன்னர்களின் வரலாற்றைக் கூறுவது.

II சிங்கள மன்னர்களும் மக்களும் இலங்கை நாட்டினர். தமிழ் மக்கள் வந்தேறு குடிகள். தமிழ் மன்னர்கள் தென்னிந்தியாவிலிருந்து வந்து அநுராதபுர அரசைப் பிடித்து ஆண்ட ஆக்கிரமிப்பாளர்கள் என வலியுறுத்தல்.

III சிங்கள மக்களின் முதாதையர்கள் வட இந்தியாவிலிருந்து வந்த ஆரியர்கள் தமிழர்கள் தென்னிந்தியாவிலிருந்து - குறிப்பாகத் தமிழகத்திலிருந்து வந்த திராவிடர்கள்.

IV தமிழர்கள், சிங்களவர்களுக்கும், பௌத்த மதத்திற்கும் எதிரிரானவர்கள் தமிழர்களின் அச்சுறுத்தலிருந்து நாட்டையும் பௌத்த மதத்தையும் பாதுகாக்க வேண்டும்.

இவற்றை மையமாக வைத்தே மகாநாம தேரர் மகாவம்சத்தை இயற்றினார். கிறிஸ்துவுக்கு முன் 3ஆம் நூற்றாண்டிலிருந்து அநுராதபுரத்தைத் தலைநகராக ஆட்சி புரிந்த மன்னர்களின் வரலாறே இலங்கையின் வரலாறு என்னும் தொனியிலேயே பாளி இலக்கியங்கள் வரலாற்றைப் படைத்துள்ளன. வரலாற்றில் சங்ககாலம் (கி.மு. 3 - கி.பி- 3) என அழைக்கப்படும் காலப்பகுதியில் தென்னிந்தியாவில் பல குறுநில அரசுகள் நிலவியது போலவே இலங்கையில் பல சிற்றரசுகளும், குறுநிலத் தலைவர் களும் ஆட்சிபுரிந்ததைப் பிராமிக் கல்வெட்டுக்கள் மூலம் அறிய முடிகின்றது.

குளநீர்ப்பாசனத்தின் பயன்பாடு, இரும்பின் உபயோகம், தொழில்நுட்ப அறிவு அயல்நாட்டுத் தொடர்பு என்பன இலங்கையின் நகரமயமாக்கலுக்கும், அரசதோற்றத்திற்கும் காரணமாயின. இலங்கையில் அநுராதபுரம் மகாகமை, மாதோட்டம், பூநகரி, கந்தரோடை முதலான இடங்கள் நகர மயமாக்கலுக்கு உட்பட்டன. நகரமயமாக்கலுடன் அரசுருவாக்கம் ஏற்பட்டது. இதற்கு கி.மு. 3ஆம் நூற்றாண்டிலிருந்து கிடைக்கப்பெறும் கல்வெட்டுக்கள் சான்று பகர்கின்றன. இவற்றிலிருந்து இலங்கையில் 260 இற்கு மேற்பட்ட சிற்றரசுகள் இருந்ததாகக் கணிக்கப்பட்டுள்ளது. வடக்கில் மாத்திரமின்றி தெற்கிலும் தமிழ்ச் சிற்றரசுகள் இருந்தன. மகாவம்சத்தின் முதன்மை அரசனாகச் சித்தரிக்கப்படும் துட்டகாமினி எல்லாளனுடன் அநுராதபுரத்தில் போர் தொடுப்பதற்கு முன்பு 32 தமிழ்ச் சிற்றரசர்களுடன் போராடி வெற்றியீட்டியதாக மகாவம்சம் கூறுகின்றது. அப்படியிருந்தும் மகாநாம தேரர் இலங்கையில் வடக்கிலும், கிழக்கிலும், தெற்கிலும் இருந்த சிற்றரசுகளைக் கணக்கில் எடுக்காமலே மகாவம்சத்தை எழுதியிருந்தார்.

கி.பி. 3ஆம் நூற்றாண்டுக்கு முன் தமிழ் மன்னர்களும் சிங்கள மன்னர்களும் அநுராதபுரத்தை மாறிமாறி ஆட்சி புரிந்தனர். அரசியல் வரலாற்றில் முதல் இருநூறு ஆண்டுகாலம் இவ்வரசை ஆண்ட 22 மன்னர்களுள் 10 பேர் தமிழ் மன்னர்கள். இத்தமிழ் மன்னர்கள் 80 ஆண்டுகளுக்கு மேல் அநுராதபுத்தில் அரசோச்சியுள்ளனர்.

இவர்களில் சேன: குத்தக, எல்லாளன் என்போர் குறிப்பிடத்தக்கவர்கள் ஆவர். சேன, குத்தக என்போரைக் குதிரை வியாபாரியின் பிள்ளைகள் என்றும் எல்லாளன் சோழ உயர் குடியில் பிறந்தவன் என்றும் மகாவம்சம் கூறுகிறது. சோழ இராச்சியத்தைச் சேர்ந்த ஒரு தமிழ்ப் படைவீரன்தான் எல்லாளன் என மொறீன் செனவிரத்தின கூறுகின்றார். (A Tamil warrior from chola kingdom of south India, Elara by name crossed over his army drove out Asela and established himselt as king of the Rajarata - Maureen Seneviratne, - Some women of the Mahavamsa)



சேன, குத்தக என்னும் இருவர் அநுராதபுர அரசனான சூரத்தீசனை வென்று 22 ஆண்டுகள் (கி.மு 177 - கி.மு. 155) நீதி தவறாது ஆட்சி புரிந்தனர் என்று மகாவம்சம் கூறுகின்றது. அசேலன் என்னும் சிங்கள மன்னன் இவர்களைத் தோற்கடித்து அநுராதபுர அரசைக் கைப்பற்றினான். மீண்டும் ஒரு படையெடுப்பு எல்லாளனால் மேற்கொள்ளப்பட்டது. எல்லாளன் அசேலனைத் தோற்கடித்து அநுராதபுர அரசைக் கைப்பற்றி 44 ஆண்டுகள் (கி.மு. 145 - கி.மு. 101 நீதி தவறாது ஆட்சி செய்தான். இவனின் நீதி தவறாத ஆட்சிபற்றிய பல கதைகள் (மனுநீதி கண்ட சோழன் காதையில் இடம் பெறுபவையை ஒத்தவை) மகாவசம்சத்தில் கூறப்படுகின்றன. இவனது நீதி தவறாத ஆட்சி, பௌத்த மதத்துக்குக் கொடுத்த பேராதரவு இன, மத, பேதம் காட்டாத கருணையுள்ளம் அனைத்து மக்கள் மத்தியில் பெருமதிப்பைப் பெற்றுக் கொடுத்தன. இலங்கை அரசியல் வரலாற்றில் நீண்டகாலம் ஆட்சிபுரிந்த முதல் மன்னன் என்ற பெருமை இவனுக்குரியது.

சேன, குத்தக, எல்லாளன் என்போர் அரச வம்சத்தைச் சேராதவர்கள் என மகாவம்சம் கூறும் அதேவேளையில் இவர்கள் தென்னிந்தியாவிலிருந்து படையெடுத்து வந்து சிங்கள அரசைக் கைப்பற்றிய அந்நிய ஆக்கிரமிப்பாளர் என வலியுறுத்துகின்றது.

இவர்கள் தென்னிந்தியாவைச் சேர்ந்தவர்களாயின் இலங்கையில் 66 ஆண்டுகள் அரசோச்சிய இவர்களைப் பற்றிய இலக்கிய கல்வெட்டுச் சான்றுகள் தமிழகத்தில் இருந்திருக்கும். சங்க இலக்கியங்களோ கல்வெட்டுக்களோ தமிழகத்தில் இவர்களைப்பற்றிக் குறிப்பிடவில்லை. சேன, குத்தக என்னும் பெயர்கள் தென்னிந்திய கல்வெட்டுக்களில் இடம்பெற்றதாகத் தெரியவில்லை. ஆனால் சமகாலத்தில் இலங்கையில் இருந்த கி.மு. 3ஆம் 2ஆம் நூற்றாண்டுக் கல்வெட்டுகளில் இப்பெயர்கள் இடம் பெற்றுள்ளன.

சங்க காலத்தில் தமிழக எல்லையைத் தாண்டி அயல்நாடுகளுக்குப் படையெடுத்துச் செல்லுமளவிற்கு அரசுருவாக்கம் ஏற்பட்டிருக்கவில்லை. மாறாக இனக்குழு நிலையிலிருந்து அரசு தோன்றுவதற்கு இடைக்கட்டமாக இருந்த தலைவர் களின் ஆட்சியும் சேர, சோழ, பாண்டியச் சிற்றரசுகளின் ஆட்சியுமே காணப்பட்டன. இதனையொத்த நிலையே இலங்கையிலும் காணப்பட்டது. இதனைப் பாளி இலக்கியங்களும் கி.பி. 3ஆம் நூற்றா ண்டுக்கு முற்பட்ட பிரமிக்கல் வெட்டுக்களும் உறுதிப்படுத்துகின்றன. அரச வம்சத்தைச் சாராத குதிரை வணிகரின் மக்கள் தமிழகத்தில் படைதிரட்டி இலங்கை மீது படையெடுத்து அநுராதபுரத்தைக் கைப்பற்றினர் என்று கொள்வது பொருத்தமாகத் தெரியவில்லை. இது போலவே தமிழகத்தில் சிற்றரசனாகக் கூட இருக்காத எல்லாளன் படை திரட்டி இலங்கையரசை ஆக்கிரமித்தான் என நம்பமுடியவில்லை.

அநுராதபுரத்தில் இருந்து ஆட்சிபுரிந்த சிங்கள மன்னர்கள் இந்த நாட்டுக்குரியவர்கள் என்றும் தமிழ் மன்னர்கள் தென்னிந்தியாவிலிருந்து வந்தவர்களாக, படையெடுப்பாளர்களாக அவ்வப்போது ஆட்சியைக் கைப்பற்றிய அந்நிய ஆக்கிரமிப்பாளராகவும் மகாவம்சம் சித்திரிக்கிறது.

கிறிஸ்துவுக்கு முற்பட்ட காலந்தொட்டே இலங்கையில் தமிழர்கள் வாழ்ந்து வந்ததற்கும் தமிழ்ச் சிற்றரசுகள் இருந்ததற்கும் கல்வெட்டுச் சான்றுண்டு.

இவற்றை நோக்குமிடத்து சேன, குத்தக எல்லாளன் என்போரை தமிழ் நாட்டுடன் தொடர்புபடுத்திப் பார்ப்பதைவிட இலங்கையுடன் தொடர்புபடுத்திப் பார்ப்பதே பொருத்தமாகத் தோன்றுகிறது.

வட இலங்கையில் பல சிற்றரசுகள் இருந்ததை ஏற்கனவே நோக்கினோம். சேன, குத்தக, எல்லாளன் என்போரை வட இலங்கையில் ஆட்சிபுரிந்த குறுநில மன்னர்கள் எனக் கருதலாம். இவர்கள் தமது அளப்பரிய ஆற்றலால் பெரும்படைதிரட்டி அநுராதபுரத்தைக் கைப்பற்றியிருக்கலாம். இவர்களின் மூதாதையர்கள் தென்னிந்தியாவிலிருந்து இலங்கைக்கு வந்திருக்கலாம். அப்படிப் பார்த்தால் சிங்கள அரசர்களின் மூதாதையர்களும் இந்தியாவிலிருந்து வந்தவர்கள் தான். நிலைமை இப்படி இருக்கும் போது சிங்கள அரசர்கள் இலங்கையைச் சேர்ந்தவர்கள் என்றும் தமிழ் மன்னர்கள் வேற்று நாட்டவர்கள் என்றும் கொள்வதை எவ்வகையிலும் ஏற்றுக்கொள்ள முடியாது.

போரில் எல்லாளன் இறந்ததும் அவ்விடத்தில் நினைவுச் சின்னம் நிறுவி அவ்விடத்தால் செல்லும் வாகனங்களும் மக்களும் இறந்த மன்னனுக்கு மரியாதை செருத்துமாறு துட்டகாமினி கட்டளை இட்டான். இதனை நோக்கும் போது எல்லாளனை இந்நாட்டு மன்னனாக மக்கள் ஏற்றுக்கொண்டுள்ளனர் என்பது தெளிவாகிறது. மக்களின் ஏகோபித்த நன்மதிப்பைப் பெற்ற மன்னனைக் கௌரவிப்பதன் மூலம் தான் மக்களின் மதிப்பைப் பெறவே துட்ட காமினி இந்த ஏற்பாட்டைச் செய்திருக்கவேண்டும்.

எல்லாளன் தொடர்ச்சியாக 44 ஆண்டுகள் ஆட்சிபுரிவதற்கு அவனது படைபலம் மட்டுமே போதியதாகாது. மக்களின் நன்மதிப்பைப் பெற்று அவர்களின் சமயத்துக்கு ஆதரவு நல்கி ஆட்சி புரிந்ததாலேயே நீண்ட காலம் அவனது ஆட்சி நீடிக்க முடிந்தது.

மகாவம்சம் எழுந்த கி.பி. 6ஆம் நூற்றாண்டில் பக்தி இயக்கத்தின் செல்வாக்கால் தமிழ் நாட்டில் பௌத்தமதம் வீழ்ச்சியடைந்து சைவ, வைஷ்ணவ சமயங்கள் மேலோங்கத் தொடங்கின. இதன் தாக்கம் இலங்கையிலும் ஏற்பட்டது. ஏற்கனவே பௌத்தமதத்தை தழுவியிருந்த சில தமிழ் மக்கள் சைவமதத்துக்கு மாறத் தொடங்கினர். காலப்போக்கில் சிங்கள மக்களும் மதம் மாறக்கூடும் என்ற அச்சம் மகாவம்ச ஆசிரியருக்கு ஏற்பட்டிருக்கவேண்டும். தமிழர்களால் பௌத்த மதத்திற்கு அச்சுறுத்தல் ஏற்படுவதைத் தடுத்து நிறுத்திச் சிங்கள மக்களையும் பௌத்தத்தையும் பாதுகாப்பது அவரின் முக்கிய நோக்கமாக இருந்தது. இதனாலேயே மகாநாம தேரர் தான் வாழ்ந்த காலத்துக்கு முற்பட்ட வரலாற்றை இன, மத, உணர்வோடு நோக்கினார். தமிழ் மக்களையும் தமிழ் மன்னர்களையும் வேற்று நாட்டவராகக் காட்ட முனைந்தார். அதனாலேயே தேரவாத பௌத்தத்தையும் அம்மதத்துக்குத் தொண்டாற்றிய சிங்கள மன்னர்களையும் முதன்மைப்படுத்த முனைந்தார்.

சிங்கள மக்களின் மூதாதையர்கள் வட இந்தியாவிலிருந்து வந்த ஆரியர் என்றும் தமிழர்களின் மூதாதையர்கள் தென்னிய திராவிடர்கள் என்றும் நிலைநாட்ட அரும்பாடு பட்டார். ஆனால் அண்மைக்கால ஆராய்ச்சிகள் சிங்களவரும் தென்னிந்திய திராவிடர் வழி வந்தவர்களே என நிறுவியுள்ளன.

எனவே, மகாவம்சத்தில் இடம் பெற்ற ஒருதலைப்பட்சமான வரலாற்றுச் செய்திகளை மானிடவியல், தொல்லியல், சமூகவியல் ஆய்வுகள் மறுபரிசீலனைக்கு உட்படுத்தியுள்ளன.

இவற்றை நோக்குமிடத்து எல்லாளன் அந்நியநாட்டிலிருந்து படையெடுத்து வந்த ஆக்கிரமிப்பாளன் என்ற மகாவம்சக் கருத்து அடிபட்டுப் போகிறது.

ஆதாரம்: ப. புஷ்பரட்ணம்: தொல்லியல் நோக்கில் இலங்கைத் தமிழர் பண்பாடு.

ஜி.தனபாக்கியம்: இலங்கையில் தொல்லியல் ஆய்வுகளும் திராவிட கலாசாரம்.

Maureen Seneviratne - Some women of Mahavamsa

Mahavamsa - Geiger Translation.

■

# சதுரங்கம்

## உண்மையான பயனாளிகளை இனங்காண்பார்களா?

சமூக நலன்புரி அமைச்சினால் பெண்களுக்கு வேலை வாய்ப்புக்களை உருவாக்கலுக்கான திட்டத்தின் கீழ் ஐம்பது தையல் இயந்திரங்கள் அண்மையில் கிளி. அரச செயலக மாநாட்டு மண்டபத்தில் வைத்து கணவனை இழந்த, உழைப்பாளிகளற்ற, வறுமையிலும் வறுமையான குடும்பப்பெண்களுக்கு வழங்கப்பெற்றது.

கரைச்சிப் பிரதேச செயலர் பிரிவில் 22 பயனாளிகளும், கண்டாவளைப் பிரதேச செயலர் பிரிவில் 10 பயனாளிகளும், பூநகரி மற்றும் பளைப்பிரதேச செயலர் பிரிவில் தலா ஒன்பது பயனாளிகளும் இதற்கெனத் தெரிவு செய்யப்பட்டனர். பத்தொன்பது வருடங்களுக்குப்பின்னர் சமூக சேவைகள் திணைக்களத்துக்கு கிளிநொச்சி என்றொரு மாவட்டம் இலங்கையில் இருப்பதாக நினைவுக்கு வந்தது மிகவும் வரவேற்கத்தக்கது. இவ்வாறான செயற்திட்டங்களைக் கிளிநொச்சிக்குக் கொண்டு வருவதிலும், இதுபோன்று தொழில்நுட்பக்கல்லூரி போன்ற இன்னோரென்ன விடயங்களிலும் மண்ணின் மைந்தனாகிய அரச அதிபர் தி. இராசநாயகம் ஆற்றும் பணிகள் போற்றுதலுக்குரியனவே.

எனினும் இந்தப்பயனாளிகள் தெரிவை கிராமசேவை அலுவலர்கள் எந்த அடிப்படையில் மேற்கொண்டார்கள் என்பது கேள்விக்குரியதே. தெரிவு செய்யப்பெற்ற பயனாளிகளைவிட வறுமையிலும் வறுமையானவர்கள் இல்லையா? என்ற கேள்வி கிளி. மாவட்ட மக்கள் மத்தியில் எழுந்துள்ளது. தெரிவு செய்யப்பட்ட பயனாளிகள் தொடர்பாக கிளி. அரச அதிபர் தமது பார்வையை இன்னும் கூராக்கினால் எதிர்காலத்தில் நிகழவிருக்கும் பல தவறுகளைத்திருத்திக் கொள்ளலாம்.

இது சம்பந்தமாகப் பிரபல ஆசிரியரொருவர் எமது பணிமனைக்கு வந்து விளக்கமளிக்கையில் ஒரு பயனாளியிடம் இது பற்றி கேட்டதற்கு "எங்களுக்கு வீட்டில தைக்க ஒருதரும் இல்ல. விதானையார் பேரப்பதிஞ்சு போட்டார் எண்டதால போய் வேண்டினம்" என்று பதில் கிடைத்ததாக கூறினார். இது போலவே சிலரது பெயர்களை சுட்டிக் காட்டிய பலர் இவர்களெல்லாம் விதானைமாருக்கு வேண்டியவர்கள், அவர்களது அலுவலகங்களில் பணிபுரிபவர்கள் என்று சுட்டிக்காட்டினார். தமது கூற்றுக்கு ஆதாரமாக இந்நிகழ்வில் கலந்து கொண்ட பயனாளிகள் உடுத்தியிருந்த சேலைகளின் உத்தேசப் பெறுமதி பற்றியும் குறிப்பிட்டனர்.

இதேவேளை பெண்கள் அபிவிருத்திப் புனர்வாழ்வு நிறுவனத்தால் பயிற்றுவிக்கப்பெற்ற பதினைந்து பயனாளிகளுக்குத் தமிழீழ வைப்பகத்தின் கடன் திட்டத்தின் மூலம் தையல் இயந்திரங்கள் வழங்கப்பட்டுள்ளன. தைக்கிறதுக்கு ஆள் இல்லை என்று சொல்பவர்களுக்கு இலவசமாகவும், தையல் பயிற்சி பெற்றவர்களுக்கு கடன் அடிப்படையிலும் ஒரே மாவட்டத்தில் தையல் இயந்திரங்கள் வழங்கப் பெற்றுள்ளன என்பதுதான் விசித்திரம்.

இது அரசும் புலிகளும் கூட்டாக உலக நாடுகளிடம் உதவி கேட்கும் காலம் புனர்வாழ்வு மற்றும் அபிவிருத்திப் பணிகளுக்கான நிதியினை எவ்வாறு பயன்படுத்துவது என்பது குறித்து பல்வேறு நாடுகளிலும் பேச்சுவார்த்தை நடத்தி இதற்கென கிளிநொச்சியில் பணிமனையும் திறக்கப்பெற்றுள்ளது. இந்நிலையிலும் புலிகளைத் தீண்டத்தகாதவர்களாக கிராமசேவை அலுவர்கள் நோக்கத்தேவையில்லை. தமிழீழ நிர்வாக சேவை, பெண்கள் அபிவிருத்தி புனர்வாழ்வு நிறுவனம், பிரதேசப் பணிமனை போன்றவற்றுடன் கலந்துரையாடி இப்பணிகளை மேற்கொள்ளலாம், அது போலவே டொலர்கணக்கு பார்க்கும் நேரத்தில் இந்த ரூபாய் கணக்குகளையும் சம்பந்தப்பட்டவர்கள் உதறத்தேவையில்லை என்பது எமது தாழ்மையான அபிப்பிராயம்.

தற்போது புனர்வாழ்வு என்ற விடயம் கவனத்திற்கொள்ளப்படுவதால் எல்லைப்படையினரின் விதவைகளை கவனத்தில் கொள்ளவேண்டியது மிக மிக அவசியம். இது போன்ற விடயங்களில் நாம் அனைவரும் கூட்டாகக் கவனம் எடுக்க வேண்டும்.

குறிப்பாகச் சாவகச்சேரியில் வீரச்சாவெய்திய எல்லைப் படையினரின் விதவைகளைப் பற்றியும், அவர்களது குழந்தைகள் பற்றியும் நாம் கவனமெடுக்க வேண்டும். இவர்களெல்லாம் வட்டக்கச்சிப் பிரதேசத்தைச் சேர்ந்தவர்கள். இதுபோலவே அக்கராயன் பிரதேசத்திலும் கணிசமானோர் உண்டு.

எனவே எதிர்காலத்தில் இவ்வாறான விடயங்களை கிளி. அரச அதிபரும் ஏனைய சம்பந்தப்பட்டவர்களும் கருத்தில் கொள்ளவேண்டும். A 9 வீதியின் சொகுசுப் பயணம் இவர்களின் தியாகத்தையும், பங்களிப்பையும் மறக்க வைக்க காரணமாக அமையக்கூடாது.

"எந்நன்றி கொன்றார்க்கும் உய்வுண்டாம்
-உய்வில்லை
செய் நன்றி கொன்ற மகர்க்கு"

என்று எங்கள் தமிழில் தான் ஒரு குறள் உள்ளது.

## கிராம சேவையாளர்களின் புறக்கணிப்பு...

கிராமசேவை அலுவலர்கள் சம்பந்தப்பட்ட இன்னோர் விடயமும் உண்டு. யாழ்ப்பாணத்திலிருந்து இடம்பெயர்ந்து வன்னிக்கு வந்தோர் தற்போது மீளக்குடியமர இந்த வருடம் யாழ். சென்றார்கள். அவர்கள் இவ்வளவு காலமும் வன்னியில் வைத்திருந்த வாகனங்களைக் கடந்த சில மாதங்களுக்கு முன்னர்தான் யாழ். கொண்டு சென்றார்கள். வன்னியில் இவ்வளவுகாலமும் இருந்த வாகனங்களை 2002ம் ஆண்டு மட்டும் பதிந்தால் போதுமானது என்றொரு சலுகை உண்டு.

இந்நிலையில் 2002ஆம் ஆண்டு இங்கேதான் இருந்தார்கள் என்று உறுதிப்படுத்த சில கிராமசேவை அலுவலர்கள் தயங்கியதாக தெரிகிறது. தான் முன்னர் இருந்த கிராமசேவை அலுவலரிடம் சென்ற ஒருவர் இதனை வேதனையுடன் குறிப்பிட்டார். இத்தனை வருடமாக இருந்ததை நன்கறிந்தவர்கள் இவ்வாறு செய்யலாமா?

இதற்கு ஏதாவது ஒரு சட்டச் சிக்கலை காரணமாக கூறுவார்கள் எனத் தெரிந்துதான் அக்கேள்வியை எழுப்புகிறோம்.

## யாருக்காக இயங்குகின்றன கூட்டுறவுச்சங்கங்கள்?

சிலவேளைகளில் மக்களுக்காக கூட்டுறவுச் சங்கமா? கூட்டுறவுச் சங்கத்துக்காக மக்களா? என்று தெரியாமல் தடுமாறவேண்டிய நிலை ஏற்படுவதுண்டு.

முட்டையிடும் கோழிக்கான ஆரம்பத்தீன் செப்ரெம்பர் மாதத்தில் தயாரிக்கப்பட்டு வன்னிக்கு வந்தது. இதனைப்பயன்படுத்தும் காலம் ஒருமாதம் மட்டுமே, இதனை விடவும் மேலதிகமாகப் பத்து நாள் பயன்படுத்தலாம், ஆனால் "சங்கம் நட்டப்பட்டு விடக்கூடாது" என்ற பொது நல நோக்கிலோ என்னவோ டிசம்பர் மாதத்தில் அவற்றை விற்றுத் தீர்த்தார்கள். குறிப்பிட்டகால எல்லை முடிந்ததும் இந்தக் கோழித்தீனைப் பயன்படுத்தினால் நுண் கொல்லித் தாக்கம் ஏற்படலாம் என வைத்தியர்கள் சொல்வார்கள் தான், அதற்காக சங்கத்தை நட்டப்பட விடலாமா? வாழ்க கூட்டுறவு.

## அது வாங்கினால் இது இது வாங்கினால் அது

இதே சங்கம் அரச கால்நடை வைத்திய நிலையத்தில் வைத்து கோழிக் குஞ்சுகளை விற்பனை செய்தது, குறிப்பிட்ட சேவல் குஞ்சுகளை வாங்கினால் தான் பேட்டுக் குஞ்சுகள் வழங்கப்படும் என்ற நிபந்தனையுடன் தான் இந்த விற்பனை நடைபெற்றது. இம்மாதிரியான நிபந்தனைகள் வேறு மாவட்டத்தில் இருப்பதாகத் தெரியவில்லை, ஆனால் இங்கு இயற்கையின் நியதியைப் புறக்கணிக்கக் கூடாது என தீர்மானித்திருக்கலாம். எனினும் குறிப்பிட்ட சிலருக்கு மட்டும் இந்த விடயத்தில் சலுகை காட்டப்பட்டது என்பது நிச்சயம் மற்றவர்களுக்கு மேற்கூறிய நிபந்தனை தான்.

பாதைதிறந்த பின் வன்னி தெற்கின் குப்பைக் கூடையாகி விட்டது. இந்தக் கட்டியடிப்புக்குள் தாங்களும் கொஞ்சம் காசு பண்ணினால் என்ன என்று வன்னி மக்களின் தலையில் இவர்களும் மிளகாய் அரைக்கிறார்களோ?

**சங்கர்**

## நியாயமற்ற நிபந்தனைகளால் நிலைகுலையும் சமாதானப் பாதை

யாழ். குடாநாட்டில் இடம்பெயர்ந்த மக்களை அவர்களது சொந்த இடங்களில் குடியேற்றி, சமூக வாழ்வை அவர்களுக்குப் பெற்றுக் கொடுப்பதற்கான முயற்சிகளுக்கு எவ்வகையிலும் ஏற்றுக் கொள்ளமுடியாத நிபந்தனைகளை விதித்த இராணுவத்தின் திட்டத்தினை நிராகரித்திருக்கும் விடுதலைப்புலிகள் - இந்த நிபந்தனைகளை யதார்த்தத்திற்குப் பொருத்தமற்றது என்றும் அறிவித்துள்ளனர்.

தமிழ் மக்கள் காலங்காலமாக வாழ்ந்து வந்த சொந்தபூமியில், அவர்களது வம்சம் ஆழவேரூன்றிய தாய் மண்ணில் - வாழ்வதற்கு -யுத்தத்தின் அனர்த்தங்கள் ஓய்ந்து நாடுமுழுவதும் சமாதானத்தின் பேறுகளை அனுபவித்துவரும் நிலையில் அகதிவாழ்வைத் தொலைத்து - நிம்மதியான, நிலையான சமூக நிலையை அம்மக்களும் பெறவேண்டிய உருத்துடையவர்களாய் இருக்கும் போது -

எமது நிலத்தை ஆக்கிரமித்து கையகப்படுத்தி வைத்திருப்பதோடு



மட்டுமல்லாது நாம் எமது மண்ணில் வாழ்வதற்கும் நிபந்தனைகளை இராணுவம் விதிப்பது - எவ்வளவு நியாயப் பாடற்றது என்பதை விடுதலைப் புலிகளின் நிராகரிப்பு சுட்டிக் காட்டியிருக்கிறது.

மொட்டந்தலைக்கும் முழங் காலுக்கும் முடிச்சுப் போடுவது போல பொதுமக்களது மீள் குடியேற்றத்துக்கு தமது இராணுவ நலன் சார்ந்த நிபந்தனைகளையும், அழுத்தங்களையும் இராணுவம் முன் வைத்திருப்பதானது சமாதான முயற்சிகளைப் பாதிக்கும் திட்டமிடப்பட்ட நகர்வு என்பதையே எடுத்துக் காட்டுகிறது.

இடம் பெயர்ந்து வேதனைகள் விரக்தி மத்தியில் அவலவாழ்வு வாழ்ந்து வரும் மக்களை - நிபந்தனைகளின் பேரிலான மீள் குடியேற்றம் என்ற பெயரில் - இராணுவத்தின் கண்காணிப்புக்குள் நிபந்தனைச் சிறைக்கைதிகளாக உருவாக்கும் சூழ்ச்சிப் பொறியாக மக்களை தமது உயர்பாதுகாப்பு வலயங்களைத் தக்கவைக்கும் மனிதக் கேடயங்களாக பயன்படுத்த திட்டமிட்ட இராணுவத்தரப்பின் சுயரூபம் வெட்ட வெளிச்சமாகியிருக்கிறது.

ஒருபுறம் அரசாங்கமானது சமாதானமுயற்சிகளில் தீவிரமாக இறங்கியுள்ள அதேவேளை மறுபுறம் இராணுவத்தரப்பின் இத்தகைய நிபந்தனை விதிப்பு - சாண் ஏற முழம் சறுக்கும் கதையாக மாறிவிடுமோ என்ற அச்சத்தை ஏற்படுத்துகின்றது.

அரசாங்கமும் விடுதலைப்புலிகளும் இணக்கம் கண்ட இயல்பு நிலையைத் தோற்றுவிப்பதற்கான நிலைப்பாட்டுக்கு முற்றிலும் மாறான பக்கத்திலேயே இராணுவம் நின்று விடுகிறது என்பதும் இதன் மூலம் உணர்த்தப்பட்டிருக்கிறது.

பரஸ்பரம் நம்பிக்கைதரவல்ல செயற்பாடுகளை முன்னெடுப்பதன் மூலம் சமாதானத்துக்கான எதிர்பார்ப்பை உறுதியாக்க வேண்டிய தேவை அவசியமாகியுள்ள நிலையில் சற்றேனும் தளர்வு காட்டாத நிலைப்பாட்டை இராணுவம் அழுங்குப்பிடியென பிடித்து வருவதானது - நிரந்தர சமாதானத்தை விட தமது இராணுவ ஆதாயத்தையே படைத்தரப்பு முன்னிலைப்படுத்துவது பேச்சுக்கள் மூலமும் கலந்தாலோசனைகள் மூலமும் பாதுகாப்பு விவகாரங்களில் - இணக்கத்தையும், இணக்கப் போக்கையும் கொண்டுவர முயலும் உபகுழுவின் செயற்பாட்டை அர்த்தமிழக்கச் செய்வதாகவே அமைந்துள்ளது.

பொது மக்கள் மீளக் குடியேற்றத்துக்கும் சமூக வாழ்க்கைக்கும் எவ்வகையிலும் தொடர்பற்ற விதத்தில் விடுதலைப்புலிகள் ஆயுதங்களைக் களைய வேண்டும் என்பதும், கனரக ஆயுதங்களை செயலிழக்கச் செய்வதுமான நிபந்தனைகள், பாதுகாப்பு வலயப்பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கு நாம் சம்மதிக்கவே போவதில்லை என்ற பிடிவாதத்திற்கு துணைசேர்ப்பதாகவே நோக்கப்பட வேண்டியவையாகின்றன.

இந்தவகையில் சமாதானத்தின் ஆக்கபூர்வமான முயற்சிகளுக்குத் தனது நிபந்தனைகள் மூலமாக அச்சுறுத்தலை இராணுவம் தந்திருப்பதாகவே கருத முடியும்.

இந்த முட்டுக் கட்டையை நீக்கி, இந்த அச்சுறுத்தலை நீக்கி தாம் சம்மதித்தது போல, விடுதலைப்புலிகளுடன் இணக்கம் கண்டதற்கிணங்க, - இவ்விடையத்தில் அரசாங்கம் உடனடி நடவடிக்கைகளில் இறங்க வேண்டும்.


பெரு முயற்சிகளின் மூலம் கட்டியெழுப்பப் பட்டிருக்கும் நம்பிக்கைக் கோபுரம், இராணுவம் நலன்களை முன்நிறுத்திய, பிழையான நோக்கம் கொண்ட ஆர்வமற்ற, சந்தேகங்களை தக்கவைத்த நிபந்தனைகள் மூலம் சிதறடிக்கப்படாமலிருக்க வேண்டுமென்பதில் அரசாங்கம் உடனடிக் கவனம் செலுத்த வேண்டும்.

இல்லையேல் மீண்டுமொரு வரலாற்றுத் தவறைச் செய்த குற்றம் அரசாங்கத்தைச் சேரவேண்டியதாகிவிடும்.

ஞாலம்.

மிகுவிரைவில்....
இடம் பெயர்ந்தவன்
பிளானறி ஓ கோணர்
கிழக்கு ஐரோப்பிய நாடான போலந்திலிருந்து அமெரிக்காவுக்கு கெடுபிடி யுத்த காலத்தில் இடம்பெயர்ந்த ஒரு குடும்பத்தை மையமாகக்கொண்டு எழுதப்பட்ட நெடுங்கதை
வெள்ளிநாதத்தில்....
தமிழில்:
சு.மகேந்திரம்




வெள்ளிநாதத்தில் **ஓயாத அலைகள் -02** சித்திரக்கதைத் தொடர் வெளிவரவிருந்தது. **'தீ சுமந்த நிலம்'**சத்ஜெய எதிர்ச்சமரின் சித்திரக்கதைத் தொடர் வெளிவந்தபின்பு **ஓயாத அலைகள் -02** சித்திரக்கதைத் தொடர் வெளிவரும் என்பதனை வாசகர்களுக்கு அறியத்தருகின்றோம்.


இலங்கை உரக்கூட்டுத்தாபனத்தின் "லக்பொஹெர"
வடபகுதி களஞ்சியத்தினர் விடுக்கும் நற்செய்தி

வடபகுதி விவசாயிகள், அங்கீகாரம் பெற்ற விநியோகஸ்தர்கள் விவசாய சேவை நிறுவனங்கள் கூட்டுறவுச்சங்கங்கள், தொகை சில்லறை வியாபாரிகள் அனைவரும் விவசாயத்திணைக்களத்தினால் சிபார்சு செய்யப்பட்ட தரமான உரம், விவசாய இரசாயனம், விவசாய உபகரணங்கள் என்பவற்றை நியாய விலையில் பெற்றுக்கொள்ள

வேலும் மயிலும் களஞ்சியம்

(சி-7531)

353,முதன்மைச்சாலை. (ஈழநாதம் பணிமனை முன்பாக) கிளிநொச்சி.

ஈழமண்ணில் எமது உற்பத்திகள் நல்ல வளம் பெறஆதரவு தரும் அனைவருக்கும் எமது நன்றிகள்.

சன் சயின் சோப்

லாலா சோப்

**லாலா சோப்**

**தயாரிப்பான**

**சன்சயின் சோப்**

அனைவரும் பாவித்து பயனடைய எமது உற்பத்திகளை எங்கும் தருகிறோம்.

லாலா சோப்

தொழிற்சாலை, (சி-7226) அச்சுவேலி,



# வெற்றிடங்கள் நிரந்தர நியமனங்கள் தொண்டர்கள்

இப்போது அநேகமாக எல்லா அரச நிர்வாக அலுவலகங்களிலும் வெற்றிடங்கள் பலவுண்டு. வெற்றிடங்களுக்குரியவர்கள் நியமிக்கப் படாததனால் மக்கள் தங்களுடைய அலுவலத் தேவைகளை உரியவாறும் விரைவாகவும் நிறைவேற்றிக் கொள்ள முடியாமற் தவிக்கிறார்கள்.

உரிய பதவிகளுக்கானவர்கள் இல்லாமையினால் அதற்குரிய வேலைகள் தேங்குகின்றன. உரிய உத்தியோகத்தர்களில்லாமையினால் அவர்கள் செய்து கொடுக்க வேண்டிய வேலைகள் தாமதமாகின்றன. இந்த வேலைகளைத் தவிர்க்க முடியாமல் வேறு உத்தியோகத்தர்களே ஏற்றுச் செய்ய வேண்டியிருகிறது. அப்படி யேற்றுச் செய்யும் போது அது அவர்களுக்கு மேலதிக சுமையாகிறது. அவ்வாறு தான் ஏற்றுச் செய்தாலும் சில வேலைகளில் சில தவறுகள் நிகழ்ந்தும் வருகின்றன. காரணம் அந்த வேலை பற்றிய போதிய அறிவோ அனுபவமோ இல்லாதிருப்பது ஒன்று மற்றது அவருக்குத் தன்னுடைய வேலையுடன் இரண்டாவது பணியும் சேரும் போது உண்டாகும் வேலைப்பழு.

பொதுமக்கள் தவிர சில நிர்வாக அலுவலகங்களில் பிற உத்தியோகத்தர்களே பாதிக்கப்படுவதையும் அறிய முடிகிறது. தமது தேவையின் நிமித்தம் அலுவலகங்களுக்குச் சென்றால் அங்கே உரியவகையில், உரிய வேளையில் வேலைகளை செய்து பெற்றுக் கொள்ளமுடியவில்லை என்று ஆதங்கப்படுகிறார்கள் உத்தியோகத்தர்கள். ஏனெனில் அந்தந்த வேலைக்குரியவர்கள் இல்லாமல் அல்லது நியமிக்கப்படாமல் அந்த இடங்கள் காலியாக இருப்பதுதான் காரணம் கேட்டால், இடமாற்றம் பெற்றுப் போனவர்களுக்குப் பதிலாக புதியவர்கள் வரவில்லை என்கிறார்கள். அல்லது நியமனம் கொடுக்கப்படவில்லை என்கிறார்கள் சக ஊழியர்கள்.

இதைப்பற்றிக் கொஞ்சம் ஆழமாக விசாரித்தால் அரசாங்கம் வடகிழக்குப் பகுதியில் புதிய நியமனங்களுக்குப் பின்னடிக்கிறது என்று காதோடு சொல்கிறார்கள். அத்துடன் பிற இடங்களிலுள்ளோர் வன்னி போன்ற இடங்களுக்கு வரப் பின்னடிக்கிறார்கள் என்பதையும் இரகசியமாக கூறுகிறார்கள்.

அலுவலகங்களிலுள்ள அதிகாரிகளைக் கேட்டால் "நாமென்ன செய்கிறது? மேலிடத்துக்கு ஒவ்வொரு முறையும் சொல்கிறோம். சம்மந்தப்பட்ட அமைச்சுக்களுக்கோ அதிகாரிகளுக்கோ கடிதத்துக்கு மேல் கடிதமாக எழுதித் தேவையையும் நிலைமையை யும் தெளிவுபடுத்திக் கொண்டேயிருக்கிறோம்'' என்கிறார்கள்.

கல்வித் திணைக்களங்கள், உதவி அரசாங்க அதிபர் பணிமனைகள், சுகாதாரப் பணிமனைகள், அரசாங்க அதிபர் செயலகங்கள், விவசாயத் திணைக்களங்கள், உள்ளூராட்சித் திணைக்களங்கள், பிரதேச சபைகள் என எல்லாவற்றிலும் இந்த வெற்றிடப்பிரச்சினை தாராளமாக உண்டு.

இதனால் வேலை செய்து முடித்துவிட வேண்டிய ஏராளமான கோவைகள் குவிந்து கிடக்கின்றன என்கிறார் கல்வித் திணைக்களமொன்றைச் சேர்ந்த பொறுப்பு வாய்ந்த அதிகாரியெருவர்.

"தாங்கள் வேலைசெய்யும் வைத்தியசாலைக்குரிய பல வெற்றிடங்களிருப்பதால் தொண்டர்களாகப் பணிபுரிவோரை வைத்தே வேலைகளைச் செய்ய வேண்டியிருக்கிறது. ஆனால் உரிய பயிற்சி பெற்றவர்களே பொறுப்பான வேலைகளைச் செய்ய வேண்டும். ஏனென்றால் மருத்துவத் தொழிலென்பது உயிர் காத்தலும், உடற்பேணுகையும் சம்மந்தப்பட்டதல்லவா. இதனால் ஒவ்வொரு பிரி

வுக்கும் குறைவாகவேயுள்ள இரண்டொருவர் தான் எல்லாவற்றையும் செய்யவேண்டியுள்ளது.'' என்கின்றனர் வைத்தியசாலையென்றின் ஊழியர்கள். அவர்களுக் குரிய சொந்த விடுமுறையைக் கூட எடுக்க முடியாத நிலையிலிருக்கிறார்கள் இவர்கள்.

இது ஒரு வைத்தியசாலைக்கு மட்டுமேயான நிலைமையல்ல. வன்னியிலுள்ள பெரும்பாலான மருத்துவமனைகளின் நிலைமையே இது தான்.

''பாருங்கள் என்னுடைய அலுவலகத்தில் பல வெற்றிடங்கள் உண்டு. ஆனால் புதிய நியமனங்களுக்கு அனுமதியில்லை. அதனால் நான்தான் இரண்டொருவருடன் தனியே முறிந்து வேலை செய்ய வேண்டியிருக்கிறது.'' என்று தனது வருத்தத்தையும் கோபத்தையும் வெளிப்படுத்துகிறார் அரச செயலகமொன்றிலுள்ள ஒரு பிரிவின் சிரேஷ்ட அதிகாரி வெறுமையாகவுள்ள பல கதிரைகளைச் சுட்டிக் காட்டியபடி.

"பல வெற்றிடங்கள் பூர்த்தி செய்யப்படாமல் காலியாகவே இருக் கின்றன. பதிலாக நாங்கள் தான் எல்லாவற்றையும் செய்து முடிக்க வேண்டியிருக்கின்றது. மேலதிக கொடுப்பனவு கிடைக்கிறது தான் என்றாலும் ஓய்வில்லாமல் எப்படித் தொடர்ந்து வேலை செய்வது" என்று தன் நிலைமையைக் கூறுகிறார் பரிதாபமாக திணைக்களமொன்றில் கடமையாற்றும் எழுதுவினைஞர் ஒருவர்.

**வெளிவாசல்பாலன்**

அலுவலகங்களுக்குரிய இடவசதிகள் மற்றும் வளங்கள் எல்லாம் மிகக் குறைவாகவே எங்குமிருக்கின்றன. குறிப்பாக அத்தியாவசிய தேவைகளான மேசை, கதிரை, கோவை வைப்பதற்கான அலுமாரிகள், தட்டச்சு இயந்திரங்கள், மின்சாரம் எனப்பலதும் இல்லை.

சமாதானச் சூழல் பிறந்து இத்தனை மாதங்களாகியும் தடைநீக்க உத்தரவுகள் வந்த பின்னும் நிலைமையில் எந்த முன்னேற்றமும் ஏற்படவில்லை.

மக்களின் சிரமநிலையுணர்ந்து வீட்டுக்குக்கூட சொல்லாமல் மேலதிக நேரமெடுத்து வேலை செய்யும் சிலரையும் பார்த்திருக்கிறேன். இப்படிச் சேவை செய்யும் அவர்களுக்கு மேலதிக நேரக் கொடுப்பனவு கூட இல்லை என்பது நீண்ட நாட்களின் பின்பே தெரியவந்தது.

பலஇடங்களில் வேலை செய்யும் பலருக்கு அவர்கள் நீண்ட காலமாகப் பணிபுரிந்தும் இன்னும் நிரந்தர நியமனம் கூடக் கிடைக்காமலேயிருக்கிறது. தற்காலிக நியமனத்தில் வைத்தே தங்களிடம் வேலை வாங்குகிறது அரசு என்று கோபிக்கிறார்கள் இவர்கள்.

இதனைத் தபால் அலுவலகங்கள், மருத்துவ மனைகள், கல்வித்திணைக்களங்கள், போன்றவற்றில் அதிகமாகக் காணலாம். இதேவேளை வன்னியின் மருத்துவமனைகளும் பாடசாலைகளும் இயங்குவதில் கணிசமான அளவு பணி செய்வதும் கணிசமான தொகையினரும் தொண்டர்களாகச் சேவை செய்வோர்கள் தான்.

## இன்னும் நிறைவேற்றாத உறவு அரசின் இழுத்தடிப்புப் பரிசு

நிரந்தர சேவையுள் உள்வாங்காது தற்காலிக நியமனத்திலேயே வைத்திருப்பதன் மூலம் சம்பள உயர்வையோ பிற சலுகைகளையோ இவர்களுக்கு வழங்கவேண்டியதில்லை. அத்துடன் சேவைக்காலக் கணிப்புக்குள்ளும் உள் வாங்காமல் குறிப்பிட்ட காலம் வரையில் தள்ளிவைத்திருப்பதுமாகும். இது பின்பு இந்த ஊழியர்களின், உத்தியோகத்தார்களின் ஓய்வூதியத்தில் லாபத்தைத் தரும் என்ற உத்தி. இதேவேளையில் இந்த தற்காலிக நியமனக்காரர்களுக்கு தொழிற்சங்க நடவடிக்கைகள் எடுப்பதற்கான அடிப்படைத் தத்துவங்களையும் இல்லாதொழித்து விடலாம் என்பதும் அரசின் கணக்கு.

இவ்வாறு தான் ஒப்பந்த அடிப்படையிலான நியமனக் காரரையும் அரசு கையாள்கிறது. அந்த நியமனங்களின் நோக்கமும் அதுதான்.

பாடசாலைகளிலும், மருத்துவமனைகளிலும் தான் தொண்டராகப் பணி செய்வோர் அதிகமாகவுள்ளனர். பாடசாலைகளில் இத்தொண்டர் ஆசிரியர்கள் ஏனைய ஆசிரியர்களுக்கு இணையாக எல்லா வேலைகளையும் செய்கின்றனர். பிள்ளைகளுக்குரிய கல்வியைப் போதிக்கின்றனர். சம்மந்தப்பட்ட பாடங்களுக்குரிய பயிற்சி வகுப்புக்களில் கலந்து கொள்கின்றனர்.

இவ்வாறே மருத்துவமனைகளில் வேலை செய்யும் தொண்டர்களின் பணியும்நிகழ்கிறது. ஏனையவர்களின் வழிகாட்டலில் இவர்கள் சேவைமனப் பாங்குடன் தம்மை ஈடுபடுத்தியுழைக்கின்றனர். மக்களின் தேவைகளை நிறைவேற்றி வருகின்றனர்.

இப்படிச் சேவையை எந்தத் தயக்கமும் இன்றிப் பெற்றுவரும் அரசாங்கம் நிரந்தர நியமனத்தை வழங்காது இழுத்தடித்துவருகிறது. அவர்களின் நியமனம் பற்றிய பேச்சுக்களையெடுத்தால் வெறும் சாட்டுப் போக்குகளைச் சொல்லிக் கடத்திவருகிறது.

இப்படி நிறைய நிறைய இந்த வெற்றிடப் பிரச்சினைகள் விளைந்து போயுள்ளன. இப்பொது ஒரு கணம் இவை எல்லாவற்றையும் தொகுத்துப் பாருங்கள். இந்தச் சேவையாளர்கள் இல்லையென்றால் நாம் இன்னும் எவ்வளவு சிரமத்தைக் கண்டிருப்போம் ? எங்களின் கதி எப்படியிருந்திருக்கும்? அதேவேளை அரசு எங்களை எப்படித் தனது நோக்கில் நெருக்கடிக் குள்ளாக்கி வைத்திருக்கிறது என்று புரிகிறதல்லவா?

சரி, இனி இன்னுமொன்றையும் பார்ப்போம்.

பல வெற்றிடங்களை இப்படியே வைத்துக் கொண்டு ஒருவாறு நிர்வாகத்தை ஓட்டிவிட முனைகிறது அரசு.

பல வெற்றிடங்கள் எங்கும் இருக்கின்றன என்று கண்டோமே அங்கேயெல்லாம் ஏன் புதிய நியமனங்களைக் கொடுக்லாமல்லவா? எத்தனையோ படித்த இளைஞர் யுவதிகளெல்லாம் இன்னும் வேலை வாய்ப்புக்காகக் காத்திருக்கிறார்கள்.

பட்டதாரிகளாக வருடந்தோறும் வெளியேறும் பலர் தமக்குரிய நியமனங்களை எதிர்பார்க்கிறார்கள்.

இப்படியே வேலையற்றோர் தொகை அதிகரித்துக் கொண்டே செல்கிறது.

ஆனால், கடன் வாங்கி கையேந்தி நிலைமையைச் சமாளித்து விட்டால் போதுமென்ற நிலைதான் தொடர்கிறது.

இவையெல்லாம் இவ்வாறு நெருக்கடி நிலையிருக்கக் காரணம் இதுவரையிலான அரசாங்கங்கள் எல்லாம் முன் செய்த யுத்தத்தின் தவப்பயனே!


## வன்னி வாழ் மக்களுக்கு ஓர் நற்செய்தி

எமது வைத்திய நிலையத்தில் வன்னி வாழ் மக்களுக்கு முன்னுரிமை அடிப்படையில் சத்திர சிகிச்சைகளும் வைத்திய ஆலோசனைகளும் மேற்கொள்ளப்படும்.

- கண் சத்திர சிகிச்சை (கற்றாக்)
- காது,மூக்கு தொண்டை சத்திர சிகிச்சை (E.N.T)
- மகற்பேற்று பெண்ணியல் சத்திர சிகிச்சைகள்.
- பொது சத்திர சிகிச்சைகள்
  I. கேணியா சத்திர சிகிச்சை
  II. மூல சத்திர சிகிச்சை
  III. அப்பென்டிற் சயிற் சத்திர சிகிச்சை
  IV. சிறுகட்டிகள், புண்களுக்கான சத்திர சிகிச்சை.
- காது கேளாதவர்களுக்கான காது கேட்கும் கருவிகளும் நாம் வழங்குகின்றோம்.

உங்கள் தேவைகளுக்கான எங்கள் தொடர்புகளுக்கு:

E.N.T
மெடிக்கல் கிளினிக்
22,24, முனீஸ்வரன் வீதி
யாழ்ப்பாணம்.
(யாழ் பஸ் நிலைய முன் ஒழுங்கை)
T.P 024-2225489

யாழ் வைத்தியசாலை
284, பலாலி வீதி
யாழ்ப்பாணம்.
T.P 024-2223533

குறிப்பு:- அனைத்து நோய்களுக்கான வைத்திய ஆலோசனைகளும், சத்திர சிகிச்சைகளும் யாழ் போதனா வைத்தியசாலை வைத்திய நிபுணர்களினால் மேற்கொள்ளப்படும்

(சி-6797)

# நேர்நோக்கு

## மக்களின் வாழ்வுக்குத் தடை

**மக்களின** மீள் குடியேற்றம் தொடர்பாகப்படையினர் கடைப்பிடிக்கும் கொள்கை தற்போது மேற்கொள்ளப்படும் சமாதான முயற்சிகளுக்கு முட்டுக்கட்டை போடும் ஒன்றாக மாறிவிடுமோ என்ற ஐயம் ஏற்பட்டுள்ளது. அதாவது யாழ். குடாநாட்டில் சிறிலங்கா இராணுவம் உயர் பாதுகாப்பு வலயம் என்ற பெயரில் ஆக்கிரமித்துநிற்கும் நிலங்களுக்குச் சொந்தமான மக்கள் தமது சொந்த இடங்களுக்குச் சென்றுவாழ வழியேற்படாது போயுள்ளமையானது சமாதான முயற்சிகளுக்கு குந்தகத்தை ஏற்படுத்தக்கூடிய அபாயம் தோன்றிவருகிறது.

புரிந்துணர்வு ஒப்பந்தம் செய்து கொள்ளப்பட்டு பத்து மாதங்கள் கடந்து விட்ட நிலையில் அதிலுள்ள மீள்குடியேற்றம் பற்றி சிக்கல் எழுந்துள்ளமையானது அவ்வொப்பந்தத்தில் உள்ள விடயங்களைப் படைத்தரப்பு அமுலாக்கம் செய்யக்காட்டி வந்த இழுத்தடிப்பைப் புலப்படுத்துகிறது.

உயர்பாதுகாப்பு வலயங்கள் என்ற பெயரில் சிறிலங்கா இராணுவம் ஆக்கிரமித்து வைத்திருக்கும் பகுதிகள் வெறும் தரிசு நிலங்களோ அல்லது மக்கள் குடியிருப்பின்றி இருந்த பிரதேசங்களோ அல்ல. மக்களின் குடியிருப்புக்களை ஆக்கிரமித்து அங்கிருந்து அம்மக்களை விரட்டிவிட்டு படையினர் நிலை கொண்டுள்ள பகுதிகளே இவையாகும் என்பதை நினைவிற் கொள்ள வேண்டும்.

குடியிருப்புக்கள் மட்டுமல்ல பாரிய தொழிற்சாலைகள், மருத்துவமனைகள், கல்விச் சாலைகள், வழிபாட்டிடங்கள், கலாச்சார மையங்கள், விளை நிலங்கள், மீன்பிடித்துறை முகங்கள் என்பவையே இவை. சுருக்கமாகக் கூறின் மக்களின் வாழ்வாதாரங்களுக்கெல்லாம் சமாதிகட்டி அதன் மேல் அமைக்கப்பட்டுள்ளதே இந்த உயர் பாதுகாப்பு வலயங்களாகும்.

இவ்வாறு ஆக்கிரமிக்கப்பட்ட வேளையில் அங்கிருந்து விரட்டப்பட்ட மக்களின் வாழ்விற்கு மாற்றுவழி ஏற்படுத்தும் முயற்சிகளில் கூட இந்த ஆக்கிரமிப்பை தூண்டிவிட்ட அரசாங்கங்கள் செய்யவில்லை. இவர்களுக்கு நிவாரணம் என்றும் புனர்வாழ்வு என்றும் கூறி சர்வதேச நாடுகளிடம் பெற்ற உதவிகளில் பெரும் பகுதிகூட மேலும் பலபகுதிகளிலிருந்து மக்களை விரட்டப்பயன்பட்டிருக்கிறது.

லட்சக்கணக்கான மக்களின் குடியிருப்புக்களைக் கொண்ட யாழ்.மாவட்டத்தின் மீதும் வன்னியின் பெரு விளைநிலங்கள் மீதும்,கிழக்கின் நெற்களஞ்சியங்களான வயல் நிலங்கள் மீதும் தொழிற்சாலைகள் மீதும்கூட இந்தஆக்கிரமிப்பு தொடர்ந்தது.

இந்நிலையில் கடந்தவருடம் விடுதலைப் புலிகளுக்கும் சிறிலங்கா அரசாங்கத்திற்கும் இடையிலான புரிந்துணர்வு ஒப்பந்தத்தின்போது விடுதலைப் புலிகளின் கரிசனை முழுவதும் இவ்வாறு அரசாங்கப் படைகளால் மேற்கொள்ளப்பட்ட ஆக்கிரமிப்பினால் பாதிக்கப்பட்ட மக்கள் தமது சொந்த இடங்களுக்குத் திரும்பி இயல்புவாழ்க்கை வாழ வேண்டும்என்பதிலேயே இருந்தது.

இதற்காகவே மக்கள் போக்குவரத்துக்கு தடுக்கப்பட்ட நெடுஞ்சாலைகள் திறக்கப்பட வேண்டும். பாடசாலைகளிலும், வழிபாட்டிடங்களிலும், பொதுக் கட்டிடங்களிலும், மக்கள் குடியிருப்புக்களிலும் நிலை கொண்டுள்ள படையினர் விலகி மக்கள் தமது சொந்த வாழ்க்கை வாழ வழி விடப்பட வேண்டுமென வலியுறுத்தினர். இதற்காகவே ஒப்பந்தத்தில் சரத்துக்களை ஏற்படுத்தினர்.

ஆனால் ஒப்பந்தத்தில் மக்களின் இயல்பு வாழ்க்கைக்குத் திரும்ப மேற்கொள்ளப்பட்ட சரத்துக்களை நடைமுறைப்படுத்த சிறிலங்காப்படையினர் பெரும் இழுத்தடிப்புக்களையே மேற்கொண்டனர். இதனை நடைமுறைப்படுத்தச் செய்வதற்காக மக்கள் சாத்வீகப் போராட்டங்கள் நடத்த வேண்டிய நிலை ஏற்பட்டது. இந்தப் போராட்டங்களில் ஈடுபட்ட மக்கள் படையினரால் சுட்டுக் கொல்லப்பட்டு இருக்கின்றனர். தாக்கிக் காயப்பட்டிருக்கின்றனர். குற்றவாளிகளாக நீதிமன்றத்தில் நிறுத்தப்பட்டிருக்கின்றனர்.

அவ்வாறு இருந்தபோதும் கூட இந்த விடயத்தில் சிறிலங்காப் படையினர் ஒப்பந்தத்திற்கேற்ப நடந்து கொள்வதில் தீவிரம் காட்டவில்லை. சில இடங்களில் நடந்து கொண்ட விதம் வெறும் ஒப்புக்காகச் செய்யப்பட்டதாகக் கூட இருந்தது. அதாவது பாடசாலைகளிலிருந்து வெளியேறி அருகில் உள்ள வீடுகளில் முகாமிடுவது போன்ற நடவடிக்கைகளில் கூட படையினர் ஈடுபட்டுள்ளனர்.

இப்பொழுது பெரும் பகுதிகளை உயர்பாதுகாப்பு வலயங்கள் என்றபெயரில் பிடித்து வைத்துக் கொண்டு அப்பகுதியை விட்டு வெளியேற மறுத்து வரும் படையினர் யாழ். குடாநாட்டில் இவ்வாறு தாம் நிலை கொண்டுள்ள பகுதிகளிலிருந்து விலக பலநிபந்தனைகளை விதித்துள்ளனர்.

இச்செயற்பாடுகள் சிறிலங்காப்படைகள் தமது ஆக்கிரமிப்பு நிலைப்பாட்டில் இருந்து மாறவில்லை என்பதை வெளிப்படுத்துகின்றது. அதாவது தமது ஆக்கிரமிப்பைக் கைவிட்டு தமிழ் மக்கள் தமது சொந்த மண்ணில் உரிமையுடன் வாழ விடப் படையினர் தயாராக இல்லை என்பதையே வெளிப்படுத்துகின்றது.

கடந்த காலத்தில் நடைபெற்ற பலசுற்றுப் பேச்சுக்கள் இந்த உயர்பாதுகாப்பு வலயங்கள்பற்றியதாக இருந்தும் உயர் பாதுகாப்பு வலயங்கள் பற்றி ஆராய்ந்து அவற்றில் மக்களை மீளக் குடியமர்த்துவது தொடர்பாகவே உபகுழு ஒன்று அமைக்கப்பட்டு அதில் கள அதிகாரிகள் சந்தித்தும் படையினரின் விட்டுக்கொடாப்போக்கே விடையாகக் கிடைத்திருக்கிறது.

பெருமளவான மக்கள் இவ்வாறு தமது சொந்த இடங்களில் குடியேறமுடியாது உள்ள நிலையில் இவ்வாறு இடம்பெயர்ந்த மக்களுக்கு புனர்வாழ்வுக்கென கிடைக்கும் சர்வதேச உதவிகளும் கூட பயன்படுத்துவதில் சிக்கல் ஏற்படப் போகிறது.

இந்நிலையானது தமிழ் மக்கள் மத்தியில் சமாதானம் குறித்த பலத்த கேள்விகளை எழுப்பிவருகிறது. தமது சொந்த நிலத்தில் குடியமர மறுக்கப்படும் நிலையில் தமது உரிமைகளுடன் தாம் நிம்மதியாக வாழ சிங்கள நாடு எவ்வாறு செயற்படப் போகிறது என்ற ஐயப்பாடு தமிழ்மக்கள் மத்தியில் ஏற்பட்டு வருகிறது.


இந்த ஐயப்பாடு வலுவடையும் வகையில் சிறிலங்காப் படையினர் தொடர்ந்தும் நடந்து கொள்வார்களாயின் அது சமாதான முயற்சிகளுக்குப் பலத்த பின்னடைவுகளையே ஏற்படுத்தும்.

**வேலவன்.**


மலர்ந்துள்ள புதிய ஆண்டில் நீங்கள் ஒரு உரிமையாளராகுங்கள்!

HERO HONDA

HERO HONDA World No. 1 Two-Wheeler Company







❋ தாமதங்களைத் தவிர்த்துக்கொள்ள இரு புகைப்படங்களுடன் வாருங்கள்.

❋ இலவச வாகனப்பதிவு அல்லது தலைக்கவசம் உங்களுக்கு.

❋ உங்கள் மோட்டார் சைக்கிளுக்கு இரண்டு வருட உத்தரவாதமும், விற்பனைக்கு பிந்திய சேவையும்.

❋ மழைக்கவசமும் (ஜக்கற்) இலவசமாக வழங்குகின்றோம்.

3S — Sales - (விற்பனை) / service - (சேவை) / Spareparts- (உதிரிகள்)

STAFFORD MOTOR CO-LTD இன் அங்கீகரிக்கப்பட்ட (3S) முகவர்கள்

RG இரத்தினகோபால்ஸ்

63, 65,கன்னாதிட்டி வீதி,
யாழ்ப்பாணம்.
T.P 0777-340056

என்.எஸ். இரத்தினம் சகோதரர்கள்

இல. 6 முதலாம் குறுக்குத் தெரு,
வவுனியா.
T.P 024-21237

(சி-6799)

2003 ஆம் ஆண்டு தென்னாபிரிக்காவில் நடைபெறும் உலகக் கோப்பை கிரிக்கெட் போட்டியின் அனுசரணையாளர் HERO HONDA


☞ பிறரைத் திருப்தி செய்யும் கலை, நாம்திருப்தி அடைவதில் தான் உள்ளது. - வில்லியம் ஷேல்லிட்



24 டிசெம்பர் 2002 நள்ளிரவு கிறிஸ்மஸ் ஆராதனையில் ஈடுபடும் இரண்டாம் பொப் ஜோன் பவுல் பசிலிக்காவின் சென் பீற்றஸ் தேவாலயத்தில். அலங்கார ஆடம்பர மனநிலையைத் தோற்றுவிக்கும் கிறிஸ்மஸ் நாள் மாறாக ஏழ்மை அகற்றி எல்லோருக்கும் உதவும் மனநிலையை உருவாக்க வேண்டும் என வேண்டினார்.



**C.B.I** புகையிரத நிலையம் முன்பாக
வவுனியா

2005 A/L மாணவர்களுக்கான
கணித, விஞ்ஞானக், கலை, வர்த்தகப் பிரிவுகள்
ஆரம்பம்

காலம் : 05.01.2003 (ஞாயிற்றுக்கிழமை)
9.00 A.M


நிர்வாகி
திரு.எஸ்.தவபாலன்
(பௌதிகவியல் ஆசிரியர்)

(2664)

நிறுத்திச் சென்ற தன் காரை மறைத்து மூடி இருக்கும் பனிப்படலத்தை அகற்றுகிறார் இவர்.


அண்மையில் கிறிஸ்மஸ் நாளன்று அமெரிக்காவின் பொஸ்ரனில் அதிகளவிலான பனிவீழ்ச்சி காணப்பட்டது. 5 – 6 அங்குல தடிப்பான பனி கொட்டிக் காணப்பட்டது. புதிய இங்கிலாந்து [அமெரிக்காவின்] பகுதியில் 3 அடி தடிப்பான பனி வீழ்ச்சியால் அன்றைய கிறிஸ்மஸ் கொண்டாட்டம் சோபையிழந்து காணப்பட்டது



ஒரு சிறுமி ஆசையுடன் தொட்டுப் பார்க்கும் இப் "பார்பி" பொம்மை சாதாரணமானதல்ல. 9500 டொலர் பெறுமதியான 4.43 கரட் வைரங்களால் நெய்யப்பட்ட ஆடை கொண்ட இப் பொம்மைகள் மூன்றில் ஒன்று அண்மையில் பாங்கொக்கில் விற்பனையாகியுள்ளது. இவ் விற்பனை நிதி சிறுவர்கள் அறக்கொடை நிலையம் ஒன்றிற்கு அன்பளிப்பாக வழங்கப்பட்டுள்ளது.

மீன் தொட்டி ஒன்றில் ஓடி விளையாடும் இம் மீன்களின் உடலினுள் குடலுக்கு பதிலாக மின் சுற்றுக்களும், பற்றரிகளுமே உள்ளன.

அண்மையில் யப்பானின் எமெக்ஸ், டைசிக்கோ எனும் நிறுவனங்கள் தயாரித்து அறிமுகப்படுத்திய செயற்கை வளர்ப்பு மீன்களே இவை. அழகாக வாலை ஆட்டுவதற்கு பொலிமரால் ஆக்கப்பட்ட செயற்கைத் தசை நார்கள் இவற்றின் மேற்பரப்பில் பொருத்தப்பட்டுள்ளன. இனி உணவு தேவையில்லை; பற்றியை மாற்றினால் போதுமே.



# படமும் தகவலும்


புதுவருட வாழ்த்துக்களுடன்

5 வது அகவையில்

## சர்வதேச தொலைத்தொடர்பு சேவை

☆ மிகவும் குறைந்த கட்டணத்தில் உரையாடும் நடைமுறை

☆ மனை, முழங்காவிலில் இன்னும் சில தினங்களில்

☆ புளியங்குளத்தில் இயங்க ஆரம்பித்துள்ளது.

உலகின் எப்பாகத்திலிருந்தும் வன்னிப் பெருநிலப்பரப்புடன் தொடர்பு கொள்ள

புதுக் குடியிருப்பு
00873762077512, 00873763080842 } T.P
00873762077514, 00873763080844 } Fax

கிளிநொச்சி
00873763018082, 009470212371 } T.P
009470213251 - T.P / Fax
00873763018084 - Fax

மல்லாவி
00873763080838 - T.P
00873763080840 - Fax

ஆளுகை,
சர்வதேச தொலைத்
தொடர்பு சேவை,
தமிழீழம்.



இப் பத்திரிகை கிளிநொச்சி ஈழநாதம் பணிமனையில் 2003ம் ஆண்டு ஜனவரி மாதம் 03ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.